# JEEVAKA NAMBI

BY

**A. M. SARAVANA MUDALIAR**

**Retired Senior Tamil Pandit,**

BOARD HIGH SCHOOL, LALGUDI,

**TRICHINOPOLY**

Published by the author

...946

T14226

R005C07

T. 14226

**Copyright** **[Price Re. 1**

உ

# சீவக நம்பி

ஓய்வு பெற்ற தமிழாசிரியர்
பூவாளூர், பெருஞ்சொல் விளக்கனர்
**அ. மு. சரவண முதலியார்**
எழுதியது

பதிவு செய்தது] 1946 [விலை, ரூ. 1.

# பொருளடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| 1. சச்சந்தன் ஆட்சி | 1 |
| 2. கட்டியங்காரன் சூழ்ச்சி | 6 |
| 3. சீவகன் தோற்றம் | 10 |
| 4. தேவி துறவு | 14 |
| 5. சீவகன் கலைப்பயிற்சி | 15 |
| 6. நிரை மீட்சி | 18 |
| 7. யாழ் வென்றி | 22 |
| 8. கண்ணச் சோதனையும் யானை வென்றியும் | 34 |
| 9. விட வென்றி | 46 |
| 10. கேமசரி மணம் | 51 |
| 11. வில்லாசிரியன் | 57 |
| 12. பிரிந்தவர் கூடல் | 62 |
| 13. தாயும் சேயும் | 71 |
| 14. விமலை மணம் | 47 |
| 15. சுரமஞ்சரியின் கல்யாணம் | 75 |
| 16. நம்பி பகை முடித்து நாடு கோடல் | 79 |
| 17. இலக்கணை மணமும் ஏந்தல் ஆட்சியும் | 84 |

உ

# சீவக நம்பி

## 1. சச்சந்தன் ஆட்சி

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே."

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தின்கண் நண்ணிய நாடுகள் பலவற்றுள்ளும் எண்ணி மகிழத்தக்கது கண்ணியம் வாய்ந்த ஏமாங்கத நாடென்பது. அது, தெங்கின் பழம் வீழ்ந்து கமுகில் மோதிப் பலாப்பழங்களைக் கீறி மாங்கனிகளையும் வாழைப்பழங்களையும் உதிர்க்கும் வளப்பம் வாய்ந்தது. மீனினது கண்ணளவுகூட வெற்றிடமின்றிக் கரும்பு நிறைந்த கழனிகளுடன், யானையை மறைக்குஞ் செந்நெல் செறிந்து வேலியாயிரம் விளையும் பண்ணைகளையுடைய அந்நாடென்னுங் குழவி, வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத சரயுநதியென்னுஞ் செவிலியால் ஓம்பப் பெறுவது. உழவர் பூமகளைத் தொழுது, உழுது சேறு செய்த நிலத்திலே விதையை வித்திச் செவ்வி நோக்கி நாறு பறித்து நடவு செய்ய, அப்பயிர் கதிரீன்று, பொருள் பெற்ற புல்லியர்போல வணங்காமல் நின்று, முதிர்ந்த பின் கல்வி நிரம்பிய நல்லறிவாளர்போலத் தலை வளைந்து நிற்குங் காட்சி, கண்டோர் கண்ணையுங் கருத்தையுங் கவராநிற்கும். அறத்தாற்பொருளீட்டுவார்க்கும் தவத்தால் அருளீட்டுவார்க்கும் அஃது ஏற்ற இடமாய் விளங்கிற்று.

இங்ஙனம் நாட்டுக்கு வேண்டும் நல்லிலக்கணம் முற்றும் அமைந்த அவ்வேமாங்கத நாட்டின் உறுப்புக்களாய் அமைந்த பல

நகரம் நகரங்களுள் முகம் போன்று தலைசிறந்து விளங்குவது இராசமாபுரம் என்னும் ஒப்புயர்வற்ற திப்பிய நகரம். முற்றத் துறந்த முனிவர்களின் தவப்பயன்போன்று செல்வத்தாற் சிறந்து விளங்கும் அந்நகரின் வீதியின்கண் நெற்காக்கின்ற சிறுமியர் அந்நெல்லைக் கவர வரும் கோழிகளை ஓட்டும்பொருட்டுத் தம் காதிலிருந்து கழற்றி எறிந்த குழைகள் சிறுர்கள் உருட்டும் சிறு தேர்களைத் தடைப்படுத்தும். தன்கண் வாய்த்தவர்களைத் தவருது கொல்லும் அகழியையும், ஒரே முறையில் நூறு பகைவரைக் கொல்லும் நூற்றுவரைக்கொல்லி முதலிய பல பொறிகளையுடைய மதிலையும், பிற அரண்களையும் உடைய அந்நகரம், அரசர்கள் தங்கள் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரியும் இடமென்பதை அதன் பெயரே விளக்குகின்றதன்றே!

இத்துணைச் சீருஞ்சிறப்பும் வாய்ந்த இராசமாபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிபவன், தன்னை நினைப்பினும் பகைவர்க்கு அச்சத்தை விளைக்கும் சச்சந்தனென்னும் பெயருடையான்; தன்னை அடைந்தார்க்கு அமிர்தமாவான்; நண்ணுர்க்கு நஞ்சமாவான்; தண்ணளியாலே தருமனுகிக் குறை வேண்டினர்க்கும் முறை வேண்டினர்க்கும் காட்சிக்கெளியனுய்க் கடுஞ்சொல்லை அறியாதவனுய் இன்சொல்லுக்கு இருப்பிடமாய் உள்ள அம்மன்னன், கலைகள் யாவற்றுக்கும் நிலையமானவன்; மதனனை வென்ற வடிவழகுடையவன்; 'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்,' என்பதை நன்குணர்ந்து ஒழுகுபவனுதலின், அவனது குடையின்கீழ் வாழுங் குடிகள் ஐவகை அச்சமும் நீங்கி, அளவற்ற மகிழ்ச்சியும் அமைதியுங் கொண்டு வாழ்வாராயினர்.

மன்னன் மாட்சி

குருகுலத் தோன்றலாகிய அம்மன்னவனது மாமன் விதையதேசத்தரசனுகிய கோவிந்தன் என்பான். அவன் அருந்தவப் புதல்வி உலகிலுள்ள மகளிரனைவரையும் தனது அழகால் வென்ற விசயை என்னும் பெயருடையாள். ஏழடி நடப்பினும் ஒரு காதமென்று அஞ்சி ஏக்குறும் அந்நங்கை, மங்கைப் பருவமெய்தி வதிந்த காலையில் நம்பி சச்சந்தன் அவளைத் தனது வாழ்க்கைத் துணையாகக் கொள்ளக் கருதி, அவ்வெண்ணத்தை அறிவு முதிர்ந்தார் சிலர் மூலமாகக் கோவிந்த மன்னனுக்கு அறிவித்தான்.

அறிவிக்க, அவனும் அதனைத் தனது அருந்தவப் பயனெனக் கொண்டு மகிழ்ந்து உடன்பட, இருவருக்குந் திருமணஞ் செவ்வனே நடந்தேறியது.

அங்ஙனம் மணந்த குன்று போன்ற கோவும், அக்குன்று மறையப் படர்ந்து பின் அதனுக்கே கேடுண்டாக்கும் கொடி போன்ற கோதையும் சங்கர மூர்த்தியும் அவன் பங்குறை செல்வியும் போலப் பிரியாமல் இன்ப நுகர்ந்தார்; இவ்வாறு இன்பந் துய்க்குங்காலையில் ஒருநாள் வேந்தன் தன் அமைச்சருள்ளே தனக்கு உயிர் போலச் சிறந்தவனாகத் தன்னாற்கருதப்பட்ட சட்டியங்காரன் என்னும் மந்திரியை அழைத்துத் தனியிடத்திலிருத்தி, "மதி நுட்பம் நூலோடு வாய்ந்த மந்திரி, யான் முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனாக அருஞ்சயன் (விசயை பாட்டன்) குலத்துள் அவதரித்த எனது ஆருயிர்க் காதலியாகிய விசயையை ஒரு கடிகையேனும் பிரிந்து உயிர்வாழ இயலாதவனாய் இருக்கின்றேன்; ஆதலின், நீயே மன்னனாக இருந்து இம்மண்ணுலகை எனக்குப் புகழ் உண்டாகுமாறு புரப்பாயாக!'' என்றான். என்றலும், பன்னாட்களாக அரசை வெளவுதற்கு எண்ணிக் காலம் பார்த்திருந்த கட்டியங்காரன் தனது சிந்தை நிறைவேறுஞ் செவ்வி வந்ததென எண்ணித் தன்னுள் மகிழ்ந்தானாயினும், அரசன் ஐயுறுவண்ணம், "மன்னர் மன்ன, நீ இந்த வையச் சுமையை என்மீது ஏற்றல் யானைப் பிடரியில் இட்ட தவிசொன்றினை நாயின் கழுத்திலிட்டதை யொக்குமாதலின், எவ்வாற்றானும் தகுதியற்ற யான் இதனை ஏற்றுக்கொள்ளேன்,'' என மறுப்பான் போன்று நடித்தனன். அரசன், 'யான் கூறுவதை நீ மறுத்தல் முறையன்று,' என்று இயம்ப, 'ஐயனே, திருவுளப்பாங்கின்படியாக!' எனக் கட்டியங்காரன் அவன் ஆணையை மறுக்க அஞ்சினவன் போன்று உடன்பட்டனன்.

காவலன் காதல் வாழ்க்கை

அமைச்சருள் உத்தமனாகிய நிமித்திகன் என்பான் இதனைக் கேள்வியுற்று, முன்னரே கட்டியங்காரன் கருத்தினை உணர்ந்திருந்தவனாதலின், சச்சந்தனைச் சார்ந்து, "பெருமானே, பிறனொருவனை நம்பி அவனிடம் நினது ஆட்சியை விடுவையேல், நிலமும் திருவும் நின்னை விட்டு நீங்கும்; இதனை நீயே எண்ணிப் பார்ப்பாயாக!'' என இடித்

நிமித்திகன் நேர்மை

துரைத்தனன். அது கேட்ட நிருபன், "நிமித்திக, அவன் எனக்கு உயிர் போன்றவன்; என்னையொழிய வேறு பற்று இல்லாதவன்; இவ்வாறு அவனை யான் சிறப்பிக்கு முன்னரே பல பகைவர்களைப் போரில் வென்றவன்; அவனுக்கு யான் செய்யக் கடவனவற்றைச் செய்தேன்; அவன் எனக்குச் செய்வன செய்க; நீ அழுக்காறு காரணமாக இங்ஙனங் கூறினை; இது நன்றன்று," என விளம்பி வெகுண்டனன். பின்னும் நிமித்திகன் தன் கடமையினின்றுந் தவறுனுகி, "பெரும, நின் திருவுளத்திற்கு அடியேன் சொல் கைப்பாக இருப்பினும், 'செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்குமுலகு,' ஆதலானும், 'இடிப்பாரையில்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்,' ஆதலாலும், சற்றுச் செவி சாய்த்தருள்க!" என்று கூறி, அவனைத் தெளிவித்தல் கருதித் தகாத செயலால் இழிவையடைந்த பலர் வரலாற்றினை எடுத்துரைத்தனன்.

அரசன் அதனை ஏற்றுக்கொள்ளாமை கண்டு அருகிலிருந்த உருத்திரதத்தன் என்பான், "இறைவ, இந்திரனும் அமைச்சர் சொல் வழி நடப்பான்; நீயும் அவன் போல அறிவுடையையாயினும், இதுகாலை இவன் மொழி கேளாமையாலே தீங்குடையவனுகித் தேவிக்குங் கேடு சூழ்பவனுகின்றாய்," என்றான். அரசன் அதனையுங் கேளானாய், "இந்நிலவுலகிலே தோன்றினார்க்குக் கருப்பதியுங் காலத்தே போகமும் வாழ்நாளும் அளக்கப்பட்டேயிருக்கின்றன; ஆதலின், நீவிர் ஒன்றுங் கூற வேண்டா," என்றனன். நிமித்திகன், "வேந்தே, அரசர் அடாத வழியிற் செல்லுங்காலை அமைச்சர் இடித்துக் கூறுங் கடமையுடையராதலின் இத்துணையுங் கூறினேன்; பொறுத்தருள்க; நீ என்னை வெறுப்பினும் யான் நின் தவறு காணுமலே துறவு நெறியிற் செல்கின்றேன்," எனக் கூறித் துறவினை மேற்கொண்டு சென்றனன்.

சச்சந்த மன்னனும் அரசியலைக் கட்டியங்காரன்பால் வைத்துத் தான் பிறிதொன்றனையும் நோக்காது அந்தப்புரத்திலே தன் தேவியுடன் வாழ்ந்து வருவானாயினன். இங்ஙனம் வாழும் நாட்களில் ஒரு நாளிரவு கடை யாமத்தின் இறுதியில் தேவி ஒரு தீய கனவு கண்டு கங்குலின் கரையுங்கண்டு எழுந்தாள். எழுந்தவள், ஐவகறையிற்கண்ட

காதலி கனவு

கனவு விரைவிற்பயன்றருமென்பதை நினைந்து கவலையுற்றுக் கண் கழுவிக் கலையுடுத்து அருகக்கடவுளை வணங்கித் துதித்து நாயகன் திருவடியை இறைஞ்சி நின்று, "என் ஆருயிர்க்காதலரே, அடியேன் ஒரு கனவு கண்டேன்; அது மூன்று பிரிவினையுடையதாகும்; ஒன்று, நன்கு தழைத்து நின்ற அசோகமரமொன்று தனது செழுமை குன்றித் திடீரென வீழ்ந்தது; மற்றொன்று, அதன் வழியே ஒரு முளை தோன்றியது; பிறிதொன்று, அம்முளை எட்டு மாலையையுடைய ஒரு முடிக்கு இருப்பிடமாக நட்டு வைத்தாற்போல ஓங்கி வளர்ந்தது," என்று இயம்பினள்.

கனு நூலை நன்கு கற்றுணர்ந்த மன்னன் கனு முந்துருத வினையில்லையாகவும் சிறிதும் மனந்தளராதவனாய், "முதற்பிரிவின் பயனைக் கூறின் தேவி ஆவி சோர்வாள்," என்று அதனை மறைத்து, நாயகியிடம், "நின் வயிற்றில் ஓர் ஒப்புயர்வற்ற புதல்வன் தோன்றுவான்; அவன் எட்டு மனைவிகளை மணந்து முடி புனைந்து அரசாள்வான்," என்றனன். தேவி, "நாதரே, பிண்டி விழுந்ததற்குப் பயன் கூறுக," என, மன்னன், "அஃது எனக்கு வரும் தீங்கினைக் குறிப்பதாகும்," என்றான். அதனைக் கேட்ட அணங்கு, "ஐயோ!" எனக் கீழே வீழ்ந்து மூர்ச்சித்தாள். மன்னன் அவளை வாரியெடுத்து மார்போடணைத்து, "மயிலே, கனவு நனவாகுமெனக் கருதிக் கவலுறும் நின் மதியிருந்தவாறென்னே!" எனப் புனைந்துரை பலவுரைத்து, அவளைத் தேற்றினன். அவளும் அவன் செய்யுந் தலையளியால் மனமகிழ்ந்து அவனுடன் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் வயிற்றினுள்ளே கரு வளர்தலால் மெய் தளர்ந்து நிறம் விளர்த்து இருந்தனள்.

வருங்கால நிகழ்ச்சியை அறிந்த மதி நுட்பமுடைய மன்னர் பெருமான், தனக்குத் தீங்கு நேரினும் கருவுற்றிருக்கும் தேவிக்குத் தீங்கு நேரா வண்ணஞ் செய்ய வேண்டும் எனக் கருதி, கைவல்ல தச்சன் ஒருவனைக் கூவி, "வானிற் பறக்கும் யானமொன்றினை இயற்றித் தருதியேல் நீ வேண்டுவன அனைத்தும் அளிப்பேன்," என்றான்.

**மன்னன் மதி நுட்பம்**

மயன்போலும் வினைத்திறமுடைய அவனும் விரைந்து சென்று தன் மதிவன்மையால், ஏழு நாட்களில் மயிற்பொறி ஒன்று இயற்றி, அதனோடு உயிர் மயிலொன்றையுங் கொண்டுவந்து மன்னன்முன்

நிறுத்தி, "ஐயனே, இவற்றுள் வேற்றுமை கண்டருள்க!" என்றனன். மன்னன் தனது நுண்ணறிவால் அவற்றின் இயல்பினை ஓர்ந்து, பொறியாகிய மயிலைத் தான் பெற்று, அவ்வினை வல்லானைப் புகழ்ந்து வேண்டுஞ் சிறப்புச்செய்து விடுத்தனன்.

பின்பு தன் தேவிக்கு அவ்வெந்திர மயிலிலேறி வானிற் செல்லுமாறு சிறிது சிறிதாக மன்னன் கற்பித்தான். தேவியும் அதன்கண் இவர்ந்து தனது மெல்லிய கையால் அதனை வலமாகச் சுழற்ற, அது கண்டோர் அஞ்சுமாறு வானைப் பிளந்துகொண்டு செல்லும். இடப் பக்கம் திரிப்ப, மெல்லக் கீழே வந்து புவியிலே கால் குவித்து நிற்கும். இங்ஙனமாக இத்தொழிலிற்கைதேர்ந்த விசயை உண்மையை உணராது, அரசன் விளையாடும்பொருட்டே இங்ஙனந் தனக்கு இதனை இயற்றித் தந்தனன் என எண்ணி இன்புற்றுக் காலம் கழிப்பாளாயினள்.

## 2. கட்டியங்காரன் சூழ்ச்சி

அரசன் அளிப்ப நிலவுலகைத் தன் அடிப்படுத்திய கட்டியங்காரன், அம்மட்டில் அமையானாய், "அரசன் உயிரோடிருப்பின் நமது கருத்து முற்றும் நிறைவேறுதல் ஒருதலையன்று; ஆதலின், அவனைக் கொன்றுவிடுதலே தக்கதாகும்," எனக் கருதி, ஒரு நாள் அறநூல் வல்ல அமைச்சரை நோக்கி, "நம் அரசனுக்குப் பகையாயதோர் தெய்வம் வந்து என்னை இருப்பிடமாகக்கொண்டு, அவனைக் கொன்றுவிடுமாறு நாடோறும் என்னை நலிகிறது; நும் கருத்து யாது?" என வினவ, அத்தீயவுரை மணியின் ஒளி கெட நாகத்தின் தலைமீது இடி விழுந்தாற்போன்று அமைச்சரின் அறிவொளி மழுங்க அவர் காதிற் புகுந்தது. புகுதலும், மன்னன்பொருட்டு அவர்கள் வருந்தினவர்களாயிருக்க, அவருள் தருமதத்தனென்பான் கட்டியங்காரனை நோக்கி, "ஐய, அரசன் அந்தப்புரம் ஒன்றனையன்றி வேறொன்றனையும் அறியாதவனாய் இருக்கின்றான்; நிமித்திகன் அவற்கு ஆவன கூறிப் பயன்படாமை கண்டு துறவுநெறியை மேற்கொண்டான்; இவ்வுலகம் திருமகளோடு நினதாயிற்று; இனி நீ கவலையுறவேண்டுவதின்று; தன்னை உயர்த்திய வேந்தனை ஒருவன் கொல்வானாயின், அவன் குலமும் திருவும் அப்பொழுதே அழியும்;

தருமதத்தன் நீதி

அம்மன்னன் ஆணைவழி அவன் ஒழுகின், அவன் குலத்தையும் நலத்தையும் அழிப்பவர் இந்நிலவுலகத்திலில்லை; உலகினர் தேவர்களை மன்னர் ஒப்பரென்று கூறுவர்; அவர் அறியார்; அரசன் வெகுளின், உடனே வெகுளப்பட்டாற்குக் கேடு நேரும்; அருளின், உடனே அருளப்பட்டார் அரசராவர்; இங்ஙனம் உடனே அழித்தலோ ஆக்கலோ செய்யுந்திறம் தேவர்கட்கு இல்லை; அன்றியும், அரசன் உறங்குங் காலத்திலும் அவன் ஒளி உலகைக்காவாநிற்கும்; தேவர் இமையா நாட்டத்தவராய் இருப்பினும், அவரை நோக்கி உலகம் செய்யும் அறங்களை அசுரர் வௌவ, அதனை நீக்கும் திறனில்லாதவராயிருக்கின்றனர்; எனவே, தெய்வங்களினும் மன்னரே மாண்புடையராவர்; இழிந்தோராயினும் அவர் பின்னே நால்வர் தொடரின், அவரை உலகம் தெய்வமென்றே கொண்டாடுகின்றது ; மன்னரால் வருந் தீங்கிற்கு உலகமனைத்தும் அஞ்சும் ; அம்மன்னவரது சினத்தை உவமை கூறு முகத்தாலும் பிறர் கூறுர்; அச்சத்தாலே நினைக்கவும் மாட்டார். தீயானது தீண்டினவரை மட்டுஞ் சுடும்; மன்னன் வெகுளி தீங்கு செய்தவரை அவர் தம் சுற்றத்தோடே சுடும். ஆதலால், நீ கூறுந் தெய்வம் யான் கூறும் அரசராகிய தெய்வத்தைப்போல மாண்புடையதன்றாகும்.

"இன்னும் கேட்பாயாக: அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தமையனென்னும் ஐவகைக் குரவர்களையும் பேணாது தீங்கிழைத்தவனும், நட்பின்கண் வஞ்சித்தவனும், அமைச்சனாயிருந்து அரசனைக் கொன்றவனும் முதலானோர் நிரயத்தில் அழுந்துவார்; அரசன் கோல் கோடின், கோள் நிலை திரிந்து மழையின்றாய் நிலம் விளைவு சுருங்கிப் பசிப்பிணி மிகும்; மகளிர் கற்புநிலை கெட்டு அறநிலையங்களும் அழியும்," எனக் கட்டியங்காரன் கூறிய தெய்வத்தைப் பரிகசித்து நீதிகளையுங் கூறினான்.

தருமதத்தன் கூறிய நீதி மொழிகளைக் கேட்ட அளவில் கட்டியங்காரனுக்கு மைத்துனனாகிய மதனன் என்பவன், நெஞ்சு வியர்த்து, மாற்றருஞ்சீற்றங் கொண்டவனாய்ப் "பகைவரது தலை சிதற வாளினால் வீசி வஞ்சினத்தை முடித்தன்றி வாயினால் யாதுங் கூறேன்; பொரிக்கறியுடன் சோற்றைத் திரட்டியுண்ணும் கைகள், போர்க்கடலை

அரசன் அழிவு

நீந்துங்காலைப் பொள்ளென வேர்த்து மிகவும் வழுவழுக்கும்,"
என்றான்.

கட்டியங்காரன் கடுஞ்சினங்கொண்டு கண்கள் எரியைக்கால, கடகத்தையுடைத்துச் சிரித்து, "தருமதத்தா, தன்னைச் சார்ந்தவர்க்கு நன்மை தேடாது தீமை சூழ்வோர் உன்னையன்றி இவ்வுலகின்கண் வேறொருவருமிலர்; நீ கூறிய கடுஞ்சொற்களைப் பொறுப்பவரும் என்னையன்றி யாருமிராரென்பது உறுதி! யான் இதுபொழுதே சச்சந்தனைத் தேவர்களுக்குத் தலைவனாக்கி, இப்பூமி அனைத்தும் விளைந்து பொன் பொலியுமாறு புரப்பதை நீ காண்பாயாக!" என்றான். இடித்துரைத்தற்கு அஞ்சாத தருமதத்தன், "ஐய, பூமியெல்லாம் விளைக; பொன்னும் பொலிக; நினது கருத்துக்கிசையக் கூறுதல் என் கடமையன்று; காவலனைக் கொல்லுங் காலன் நிலமடந்தையாய்க் கொல்வன்; அவன் செய்த தவறாக நின்று அழிப்பன்; அளவற்ற பொருளாய் நின்று தொலைப்பன்; ஆதலின், அரசற்குக் கொலை அமைவதாக; நீ வெகுளற்க!" என்று சொல்லிப் போயினான்.

அரசன் காதல் வெள்ளத்துள் அழுந்தி வெறுவியனாய் இருக்கும் நிலையையுணர்ந்த கட்டியங்காரன், அவன் சுற்றத்தாரனைவரையுந் தளை பூட்டிச் சிறையிலடைத்து, தன் புல்லிய எண்ணத்திற்கு இணங்கும் புன்மையாளர்க்கு அளவிறந்த சிறப்பினை அளித்து, அவர்க்கு மலையிலிட்ட விளக்குப்போல அழியாப் பழியையும் ஆக்கி, படைகள் நகரைச் சூழுமாறு செய்தான். வாயிற்காவலன் சச்சந்தனிடம் வந்து வணங்கி, "எம்பெருமானே, நின்னைக் கொல்லும்பொருட்டுக் கட்டியங்காரன் தனது படையுடன் வளைந்து கொண்டனன்," என்று கூற, மன்னன் பழைய நினைவால், "கதவெல்லாந் தாளிடுக; தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் அலங்கரிக்கக்கடவர்; படை வீரர் அனைவரும் அமருக்கு ஆயத்தராகக் கடவர்," என்று ஆணையிட்டான். இட்டவன், அங்ஙனம் ஒன்றும் ஆகாமையால் தன் நிலைமையையுணர்ந்து தனக்கு ஊர்தியொன்றும் இன்மையின் வாள் ஒன்றனை ஏந்தி எயிறு இலங்கச் சிரித்தான்.

பின்னர்த் தேவியை நோக்கி, "நங்காய், நீ முன் கண்ட கனவு பலித்துவிட்டது; சிறிதும் வருந்தாமல் நின் கருவிலுற்ற

மகனைக் காத்தல் நிமித்தம் நீ இக்கணமே வெளியே போய்விட வேண்டும்,'' என்றனன். ஆ! ஆ!! கருவுற்ற காதலி என் செய்வாள்! தனது முகத்திலறைந்துகொண்டு கீழே விழுந்து வயிற்றிலடித்துக்கொள்வதாற் குழவிக்குத் தீங்கு இயற்றினாள். மன்னன் தேவியை எடுத்து மார்புற அணைத்து, "பேதாய், என் செய்தனை! இறத்தலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் வினைகளின் பயனாக உண்டாகும்; நன்றாகுங் காலத்து மகிழ்தலும், அன்றாகுங் காலத்து அவலமுறுதலும் அறிவின்மையன்றோ! நீ பெரிதும் பேதையாயுள்ளாய்; நமது பழைய பிறப்பை எண்ணின், கடல் மணலும் உறையிடப் போதுமோ? அப்பிறவிகளெல்லாம் நாம் ஒன்றாயிருந்தோமோ? இனி வரும் பிறவிகளிலேனும் அங்ஙனமாவோமென்பது ஒருதலையாகத் துணிவதொன்றோ? இப்பிறவியில் நாம் ஒன்றுபட்டிருந்த சிலநாளுறவைக் கருதி இங்ஙனம் கவலுதல் நினது அறிவிற்கு ஏற்றதன்று; பாவாய், இவ்வருத்தந் தவிர்க; மன்னரெல்லாம் தமது உரிமைப் பொருள்களை முன்னே அப்புறப் படுத்தியல்லது தாம் போருக்குப் போகார்; இனி நீ கருவுயிர்த்து நாம் கதி பெறுதலும் பகை வெல்லுதலும் ஆகற்பாலன; ஏறிச் செல்வதற்கு ஊர்தியும் அமைந்திருக்கிறது; ஆதலின், இக்கணமே செல்க,'' எனக் கூறி அவள் இசைவைப் பெற்று, அருகன் திருவடியைத் தியானித்துத் தேவியை மயிலூர்தியிலேற்றி வானில் விடுத்தான். இறைவியும் 'இருதலைக் கொள்ளி எறும்பு' போல நாயகனுக்கும் புதல்வனுக்குமாக வருந்தி, வான் வழியே சென்றனள்.

பின்னர் மன்னர் பெருமான் முழையினின்றும் சிம்மம் வெளிப்படுவது போல வாளுடன் வெளிப் போந்து, பகைவர் பலரைக் கொன்று இறுதியில் தானும் மடிந்தனன். மடிந்த செய்தியை அறிந்த அந்தப்புர மகளிர் அனைவரும் போந்து வறுநிலத்துக் கிடக்கும் மன்னன் நிலைகண்டு கண்ணீர் சொரிந்து, கீழே வீழ்ந்து அலறுவார்; புரளுவார்; வயிறதுக்குவார்; முகம் புடைப்பார். இங்ஙனம் ஆற்றொணாத் துயருடையவராய் ஐயன் உடலை ஈமத்தே கிடத்தி, "ஐயனே, நினது பொன் மேனியையும் எரி நுகர்கின்றதோ!'' எனக் கருதி அழுதனர். கட்டியங்காரனும் வந்து கண்டு கண்ணீருகுத்தான். மகளிரும் அழுதுகொண்டே போயினர்.

ஒரு நரி ஒப்பில்லாத சிங்க ஏற்றைக் கொன்று அப்பொழுதே அதனிடத்தை அடைந்தாற்போலக் கட்டியங்காரன் சச்சந்தனது அரியாதனத்திலேறித் தன் பெயராற் பறை சாற்றினான். நஞ்சினை யுடைய நாகம் காதில் நுழைந்தாற்போல அப்பறையொலி மக்கள் செவியில் நுழைய, "ஆ! கொடிது கொடிது!" என அனைவரும் வருந்தினர்.

## 3. சீவகன் தோற்றம்

மயிற்பொறியில் ஏறி வானிற்பறந்து சென்ற தேவி, கட்டியங் காரனது முரசொலியைக் கேட்ட அளவில் மூர்ச்சித்துப் பொறியை வலந்திரிக்காது விடுதலும், அது தானே இடந்திரிந்து கண்டோரனைவரும் அஞ்சும் பிணக் காட்சியையுடைய சுடுகாட்டில் மெல்லென வீழ்ந்து கால் குவிந்திருந்தது.

**தாயும் சேயும்**

தேவி சிறிது உணர்ச்சி பெற்று விழித்துக் கழுதுகள் தாண்டவமாடும் புறங்காட்டினைக் கண்டாள்; "அந்தோ! பிணப் புகை நிறைந்த இம்மயானத்தின்கண் என் செய்வேன் யான்!" என ஏங்கி அழுதனள். அரசன் அரண்மனையில் நல்வினைப் பயனை நுகர்ந்து நலம் பெற்றிருந்த தேவி, "அனைத்துயிரும் நுகருந் தீவினை யும் உண்டென்று நூலளவையால் அறிவாரெல்லாம் என்னைக் காண்டலினாற் காட்சியளவையாலும் தெளியக்கடவர்," என்று காட்டுவாள் போலத் தீவினைப் பயனை நுகர்ந்து சுடுகாட்டிலே தன்னந்தனியளாய்த் துன்புறுவாளாயினள்.

கானுறை தெய்வங்களெல்லாம் ஆங்குப் பிறப்பவன் வீடு பேற்றினை அடைவானெனக் கருதி அருள் நிறைந்த மனத்தை யுடையனவாகி இருள் நீங்குமாறு மணி விளக்கேந்தி வணங்கி நிற்ப, இளஞாயிறுபோலச் செல்வன் தோன்றினான். சூரியன் தோன்றிய உடன் இருளைப் போக்கிப் பின் சந்திரனைக் கெடுக்கு மாறு போலத் தான் தோன்றிய அளவில் தாயினது துன்பமாகிய இருளைப் போக்கிக் கட்டியங்காரனாகிய மதியைக் கெடுத்தலால் ஞாயிற்றினை ஒத்த அம்மகனைக் கவானிடைக் கண்ட பொழுதே தேவி வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும் பிற துன்பங்களும் நீங்கினள். நீங்கினவள், மகனைக்கண்டு, "ஐயனே, நீ நின் நாட்டிற்

பிறந்திருப்பாயாயின், உன் தந்தையார், பன்னீராண்டுள்ள பாலாரிட்டத்தைக்கருதி அதற்குக் கழுவாயாகப் 'பன்னிரண்டு ஆண்டு இறை வேண்டா,' என்றும், 'அற நிலையங்களும் திருக்கோயில்களும் புதியவாக ஆக்குக!' என்றும், 'எழுபிறப்பினுமுள்ள தீவினை நீங்க எழுநாள் வரையும் பொருளனைத்தையும் அனைவரும் கொள்க!' என்றும், 'உடம்பிற் பொருந்திய மூன்றரைக் கோடி மயிருக்கும் மூன்றரைக்கோடிப் பொன் தானங்கொடுக்க!' என்றும், 'சிறைச் சாலைகளை இடித்துச் சிறையிலுள்ளாரை விடுக!' என்றும் பறை சாற்றுவிக்கப் பல சிறப்புக்களுடன் பாராட்டப்படுவாய். அங்ஙனமின்றி இத்தீவினையேன் காண்டற்காக, நரியொலியே முழவாகவும், இறந்தாரை எரிக்கும் நெருப்பே விளக்காகவும், பேய்களின் ஆட்டமே நடனமாகவும், கூகையின் குழறலே பாராட்டாகவும் கொண்டு, பிறப்பார்க்கு ஒவ்வாத—இறப்பார்க்கு ஒத்த இச்சுடுகாட்டிற் பிறப்பது மன்னர்க்கு இயல்பாகுமோ! என் கண்ணே, நீ கிடக்கும் இடமோ பகைவன் இடமாய் இருக்கின்றது; ஓ! ஓ! ஆறுதல் கூறுவார் யாரையுங் காணேன்! இதற்கு என் செய்வேன்! நின்னை இங்கிருந்து வேறிடங் கொண்டு போகவும் முடியாத நிலையில் இருள் சூழ்ந்துள்ளது; நீ வளருமாற்றையும் அறியேன்; இவ்வனைத்தையுங் கண்ட எனது கொடிய உயிரும் போமாற்றைக் காணேன்; சிந்தாமணியே, நீயும் பேசாமற் கிடக்கின்றாய்; எனது வருத்தம் நீக்கிப் பிறந்த நீயும் நின்னை அருளிய பிண்டிப் பெருமானாகிய அருகனும் அன்றி என் இடர் தீர்ப்பார் யாவர்? நின் தந்தையார் கூறியதைச் செய்யும் யான் வருந்தக் கடவேனோ!" என்று சிறிது இடர் நீங்கி இருந்தனள்.

**திக்கற்றவர்க்குத் தெய்வம் துணை செய்தல்**

இங்ஙனமிருக்குங்காலை, அவளை மயிற்பொறியில் இடரின்றிக் கொண்டுவந்து அங்கே சேர்த்த தெய்வமொன்று, அவள் துன்பத்தைப் போக்குவதற்கும், பின்னே நடைபெற வேண்டுவவற்றை நிறைவேற்றுவதற்கும் எண்ணி, விசயையின் அந்தப்புரத்திலுள்ள உயிர்த்தோழியாகிய 'கூனி' என்னுஞ் சண்பகமாலையின் வடிவுகொண்டு, அவள் பக்கத்திற்சென்றது. அவ்வடிவைக் கண்ட தேவி, சண்பகமாலையென்றே நினைத்து, நடுக்கடலுள் தெப்பம் அகப்பட்டது போல மகிழ்ந்து தெளிவடைந்து, "தோழி,

பகைவனறியாமல் எங்ஙனம் என்னை இங்கு வந்து கண்டனை! உனது அன்பே அன்பு! இந்நள்ளிரவில் புதல்வனைப் பெற்றுப் போக்கிடங் காணாது வருந்தும் எற்கு உதவவந்த நினது நன்றியை எழுமையிலுமறவேன்; இனி யானும் இச்சேயும் உய்யும் உபாயத்தை நீதான் தெரிவிக்க வேண்டும்,'' என அன்பு கனிந்த மொழிகள் பலவற்றைக் கூறினாள்.

இவற்றையெல்லாங் கேட்ட அத்தெய்வம், சண்பகமாலை போலவே நடித்து, "என் தாயே, பல சிறப்புக்களுடனே இப் புதல்வனைப்பெறும் பெற்றி நீங்கித் திக்கற்ற ஏழைகள்போல இச் சுடுகாட்டில் இக்காளையை ஈன்றனை! ஐயோ! மாபாவியாகிய யான் இந்நிலைமையில் நின்னை வந்து காணுதற்கு எத்துணைப் பாவஞ் செய் தேனோ அறியேன்!'' என அரற்றி அழுது, பின்னர், "அன்னையே, நீ வருந்த வேண்டா; யான் நினக்கு உற்ற துணையாய் இருந்து, ஆவன புரிவேன்; பிற்காலத்தில் இம்மகவே இந்நிலவுலகத்தையாள் வான்; பகைவனாகிய கட்டியங்காரனையும் கூற்றுவனுக்குக் கொடுப்பான்; அதன்பொருட்டு இவனை எடுத்து வளர்ப்பதற்காக இதுகாலை இங்கு ஒருவன் வருவான்; அவனிடஞ்சென்று வளர்ந் தாற்றுன் இவன் பகை முடிப்பான்; இவ்வரிய சேயைப் பிரிதற்கு நீ சிறிதும் மனந்தளராதே; எங்ஙனமாயினும் நம் பகைவனை வெல்வதே நமக்கு நலந்தருவதாகும்; ஆதலால், அவன் இப்பிள்ளையைத் தடையின்றி எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக நாம் நடந்து கொள்ள வேண்டும்; நாம் இங்கே இருப்பின் அவன் இக்குழவியை எடுப்பதற்கு மனங்கூசுவான்; யாதோர் அச்சமுமின்றி அவன் இம்மதலையை எடுத்துச் செல்லும்படி நாம் இதனை இங்கேயே வைத்துவிட்டு மறைந்திருக்க வேண்டும்,'' என்று இயம்பியது.

எங்ஙனமேனும் புதல்வன் இடையூறின்றி வளர்தலையே குறிக் கோளாகக்கொண்ட விசயை அதற்குடன்பட்டனள். அத்தெய்வம் அவளறியா வகை ஒரு மர நிழலில் மெத்தென்ற பள்ளியொன்றை அமைத்து அதிற்குழந்தையைக் கிடத்தித் தாயைக் கொண்டு பாலூட்டுவித்து, அரசகுமாரன் என எடுத்துச் செல் வோன் அறிந்து குறிக்கொண்டு வளர்ப்பதற்காகச் சச்சந்தன் பெயர் தீட்டிய மோதிரமொன்றை அக்குழவியின் கைவிரலி லணிந்துவிட்டுப் 'பகைவர்கள் எத்துணைத் தீங்கிழைப்பினும் நினக்கு

நன்மையேயாக!' என வாழ்த்தி, விசயையுடன் மறைந்து நின்றது. விசயை புதல்வனை நோக்கி, "என் அருந்தவச் செல்வமே, நின்னைப் பெறுவதற்குத் தவம் புரிந்தேனேயன்றி, வளர்ப்பதற்கு அதனை யாற்றிலேன்; என் செய்வேன்! ஐயோ! கொடிய விலங்குகள் சூழும் இக்காட்டில் தனியே கிடக்கின்றாயே! இதனைப் பார்ப்ப தற்கோ யான் இப்பிறவி எடுத்தேன்!" என்று அழுதுகொண்டே ஒரு மரக்கிளையைப் பற்றிக்கொண்டு நின்றாள்.

**கந்துக்கடன் மகிழ்ச்சி**

அவ்விராசமாபுரியில் கந்துக்கடன் என்னும் வணிகனொருவன் தன் மனைவி சுநந்தையோடு வாழ்வான்; அவர்க்குப் பிறந்த பல குழந்தைகள் இறந்துபட வருத்தமேலிட்டிருக் குங்கால் ஒரு முனிவர் தோன்றி, "நீங்கள் ஒரு சிறந்த புதல்வனைப் பெறுவீர்கள்; அவன் எப் பொழுதும் நிலைத்திருப்பான்; அவன்பொருட்டுப் பல செயல்கள் நடக்கும்; இனி நீவிர் வருந்தற்க," என்று கூறிப் போயினர். பின்னர் இறந்த தனது குழந்தையைக் கந்துக்கடன் எடுத்துக்கொண்டுபோய் இடுகாட்டில் அடக்கஞ்செய்து திரும்புங் காலை ஒரு மரத்தடியில் நம்பி கிடத்தலைக் கண்டு, முனிவர் வாக்குப் பலித்ததென்று கருதி மகிழ்ந்து, இளஞாயிற்றை எடுப்பது போல அக்குழவியை வாரி எடுத்தான். உடனே அச்சிறுவன் தும்மினான். அப்பொழுது கூனி, 'சீவ!' என்று வாழ்த்தினாள். விசயையும் தன்னுள்ளே வாழ்த்தினாள். கந்துக்கடன் மோதிரத்தைக் கண்டு, அவன் அரசன் மகனென்பதை உணர்ந்து, அம்மறையைப் பிறர் அறியா வகை அவ்வாழியைக் கழற்றிமறைத்து வைத்துவிட் டுத் தன் மனைக்குக் கொண்டுபோய், மனைவியை நோக்கி, "நங்காய், இறந்த நின்மகன் பிழைத்தனன்," என்று விசயை இட்ட திலகத்தை அழித்துவிட்டு நம்பியைக் கொடுத்தான்; கொடுத்தவன், முனிவர் கூறியதையும் ஞாபகப்படுத்தினன். அவன் மனையில் வலம்புரி சங்குகள் முழங்கின; மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் பல்லியங்கள் ஒலித்தன. அக்கொண்டாட்டம் இழந்த மகவைப் பெற்றதனால் என்பதை அறியாத கட்டியங்காரன், "ஊரரசனை வரும் சச்சந்தன் அழிவிற்கு இரங்கி அழாநிற்க, இக்கந்துக்கடன் மட்டும் மகிழ்ச்சி கொண்டாடுதற்குக் காரணம் நம்முடன் நட்புக் கொள்ளக் கருதலே," என்று எண்ணிக் கந்துக்கடன் வீட்டுக்கு

அளவிறந்த பொருள்களை அனுப்பினன். கந்துக்கடன் கட்டியங்காரனது அறியாமைக்கு வியந்து, அந்நிதியனைத்தையும் நம்பிக்கு நலனுண்டாகும்பொருட்டு இரவலர்க்கு ஈந்தனன். பின்னர், பகைவனாகிய கட்டியங்காரனுக்குத் தெரியாமல் குழந்தையை வளர்த்து விருத்தியடையச் செய்வதற்கும், போர் முடிப்பதற்கு வேண்டும் பக்கத்துணைகளைச் சேர்ப்பதற்கும் கந்துக்கடன் ஆழ்ந்து சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

## 4. தேவி துறவு

கந்துக்கடன் நம்பியை எடுத்துக்கொண்டு சென்ற அளவில் விசயமாதேவி மதி மயங்கிக் கீழே விழ்ந்து ஓவென்று அரற்றி அழுதாள். தெய்வமாகிய கூனி அவட்கு மேல் நடப்பன அனைத்தையுங் கூறித் தேற்றினாள். தேவி அவளை நோக்கி, "அன்னாய், இனி நாம் செய்ய வேண்டுவது யாது?" எனச் சண்பக மாலை போன்று வந்த தெய்வம், "அன்னாய், நாம் இப்பகைவனது நிலத்தை அருளாகிய போர்வையிலே மறைந்து நீங்கி, அமரிகை என்னும் ஆற்றை அடைந்து, அதன் மணலிலே அமர்ந்து, ஆயாசத்தை அகற்றுவோம்; பின்னர் அந்நதியைக் கடந்து ஐம்பது யோசனை சென்றால், நம்மவர் வாழ்கின்ற தரணி திலகம் என்னும் பதி தோன்றும்; இந்நிலைமையில் நாம் ஆங்குச் செல்லுதல் அடாதாகலின், அதனையுங்கடந்து சென்றால், தண்டகாரணியம் என்னுந் தவ வனத்தைக் காண்போம்; அதன்கண் தங்கித் தவஞ்செய்தலே தக்கதாகும்," எனக்கூறிற்று.

**தண்டக வனம் சார்தல்**

மாதேவி அதற்கு இசையவே, மகற்பயந்த வருத்தந் தீராத அவ்வணங்கினைத் தன் தெய்வத் தன்மையாலே அத்துன்பந்தோற்றாவாறு கூனி இரவில் அழைத்துக்கொண்டு போதலும், அரதனங்கள் நிறைந்த ஒரு பவளக் கொம்பினைச் சிலந்திப் பூச்சி பட்டினாற் சுற்றி மறைத்தாற்போலத் தேவி தன் உடல் முழுதையும் போர்வையால் மறைத்துக் காடுகளையும் மலைகளையும் கடந்து ஆற்றிடைக்குறையைச் சார்ந்தனள். சார்ந்தவள், வழி நடந்த இளைப்பால் ஆங்குள்ள பொழிலின்கண் ஆடையை விரித்து அதன்கண்

கிடந்தனள். தெய்வமும் தான் கொண்ட கோலத்திற்கேற்பத் தேவியின் அடிகளைத் தைவந்து, பொழுது புலர்ந்த பின்னர், "எம் அன்னாய், வாழ்வாயாக! ஞாயிறு தோன்றிற்று," என்று இயம்பியது. தேவி அரசனைக் கனவிற்கண்டு அது நனவாகாமையின், "ஐயோ!" என அழுது புலம்பினாள். கூனி அவளைத் தேற்றித் தண்டக வனங் கொண்டுபோய்ச் சேர்த்தனள். ஆங்குள்ள தவ மகளிரனைவரும் தேவியை எதிர்கொண்டு, தவஞ்செய்வார் கட்டித் தழுவலாகாமையின், நெருங்கிப் புல்லுவார் போன்று தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பின்னர் அம்மகளிர் தவம் புரிதற்குரிய வழியாயுள்ளதும், கணவனை இழந்ததற்கும் புதல்வன் வாழ்வதற்கும் பொருந்தியதுமாகிய நோன்பினைக் கற்பித்து, அணிகளை அகற்றிவிட வேண்டுமென அறைந்தனர்.

மாதேவி தன் அணிகள் அனைத்தையுங் கழற்றி, "என் சிறுவன் உயர்க!" என்று காவி தோய்ந்த கலிங்கத்தை உடுத்தனள்; மாதவ மகளிர் பொற்கலத்தில் அடிசிலையேந்தி முகமன் கூறவும் அதனையுண்ணாளாய்த் தனது காந்தள் மலர் போலுங் கையால் அடகினை வாங்கி அயின்று, இல்லுறை தெய்வமன்றிக் கானுறை தெய்வமாயினள்.

கூனி வடிவங்கொண்டு நின்ற தெய்வம் தான் செல்லக் கருதித் தன் தெய்வத்தன்மையால் தேவிக்கும் அக்கருத்துத் தோன்றுமாறு செய்தது. விசயை கூனியை நோக்கி, "நீ இராசமாபுரஞ் சென்று சிறுவன் செய்தியை அறிந்து வருக!" என்றனள். கூனித் தெய்வம் வஞ்சியை வஞ்சித்துச் செல்வதற்கு வருந்தி, மாதவமகளிரை நோக்கி, "மாதவம் பழுத்த மங்கைமீர், நுங்கள் அடைக்கலம் இந்நங்கை; இவளைக் காத்தல் நுமது கடமை," என்று கூறி, அவள் வரலாற்றை உள்ளவாறு கூறாமல் மறைத்துச் சொல்லி, இராசமாபுரத்திலுள்ள புறங்காட்டை அடைந்தது.

தெய்வஞ் செல்லல்

## 5. சீவகன் கலைப்பயிற்சி

கந்துக்கடனாற் கொடுக்கப்பட்ட குழந்தையை வாங்கி இறந்து போன தனது குழந்தையாகவே எண்ணிச் சுநந்தை

சீவகன் கலை பயிறல்

யென்பாள் பாராட்டி வளர்ப்பாளாயினள். கந்துக் கடன் சான்றோரைக்கொண்டு அம்மகவிற்குத் தான் அம்மதலையை எடுக்குங் காலை அது தும்ம, அது போது கூனி 'சீவ!' என்று வாழ்த்திய ஒலியை அசரீரியாகக் கொண்டு, 'சீவகன்' என்னும் பெயரை இடுவித்தான். பின்னர்ச் சுநந்தை வயிற்றில் ஓர் ஆண் மகவு தோன்ற, அதற்கு 'நந்தட்டன்' என்னும் பெயரிட்டுச் சீவகனுக்குத் துணையாக வளர்த்து வந்தனர். சீவகன் இளமைப் பருவத்திற்செய்யக் கடவனவாகிய சடங்குகளனைத்தும் செய்யப் பெற்று, சிறுதேருருட்டல் முதலிய விளையாடல்களைப் புரிந்து, வளர்பிறை போலச் செழித்து வளர்ந்தான். அக்காலத்து அந்தப் புரத்திலுள்ள அகப்பரிவாரமகளிர் புதல்வராகிய ஐஞ்ஞூற்றுவரும், சாகரன் என்னும் மந்திரியின் புதல்வனாகிய சீதத்தனும், சச்சந்தனது அந்தணன் மகனாகிய புத்திசேனனும், அம்மன்னனுக்குரிய செட்டியாகிய தனபாலன் கான்முளையாகிய பதுமுகனும், அவ்வரசன் நண்பனாய விசயதத்தன் செம்மல் தேவதத்தனும், சச்சந்தனது அபிமான மனைவியின் மக்களாகிய நபுலவிபுலரும் ஆகிய ஐஞ்ஞூற்றுவரும், கந்துக்கடன் மகனாகிய நந்தட்டனும் சீவகனுக்கு உறு துணையாயினர்.

சீவகனுக்குக் கல்வி பயிலும் பருவம் வரவே, கந்துக்கடனும் சுநந்தையும் நன்னாளொன்று பார்த்து, அதற்கு ஆவன புரிந்து, அச்சணந்தி ஆசிரியர்பால் மையேடு பிடிப்பித்தார்கள். அவன் தோழரும் அவனோடு கல்வி பயின்று வந்தனர். சீவகன் அவர்களோடு மறை முதலிய எல்லா நூல்களையும் கற்று, படைக்கலக் கல்வியிலும் பரந்த தேர்ச்சி பெற்று, இசை நாடக நூல்களிலும் வல்லுநனாய்க் காளைப்பருவமெய்தி, மதவேளும் நாணும் அழகினைப் பெற்றுத் திகழ்வானாயினன்.

ஆசிரியர் அவர்கட்கு அறிவுரைகள் புகலக் கருதி, ஒரு நாள் தம் முன் இருத்திப் பிறப்பின் பெருமையையும், அஃது அடைதற்குரிய பயனையும், அதனையடையாமற் செய்யும் தடைகளையும், அவற்றை நீக்குதற்குரிய துறைகளையும், அப்பிறப்பின் நிலையாமையையும், இன்னோன்ன பிறவற்றையும் விளக்கமாகக் கூறினர்.

இவற்றைக் கேட்ட சீவகன், உலக வாழ்க்கையை உவர்த்துத் தவத்தினாலே பேரின்பத்தையடைதற்கு எண்ணினான். அக் குறிப்பை உணர்ந்த ஆசிரியர் அவனை நோக்கி, "குணக்குன்றே, நீ இப்பொழுதே தவத்தை நாடுதல் தக்கதன்று; இல்லறத்தி லிருந்து அவ்வொழுக்கத்திற்பிழையாது வாழ்ந்து பின்னர்த் துறவு பூணுதலே தக்கதாகும்," என, அதற்குச் சீவகன் இசைந்தனன்.

**சீவகன் தன் பிறப்பு உணர்தல்**

ஆசிரியர் சீவகனை மாணவர் கூட்டத்தினின்றுந் தனியே பிரித்து அழைத்துக்கொண்டு சென்று, ஒரு தனியிடத்திலிருத்தி, ஆங்கு ஒற்றர் முதலானோரும், பகைவர் வளர்த்துப் பிறர் பேசுவதைத் தெரிந்துகொண்டு வந்து தமக்கு அறிவிக்கும்பொருட்டு விட்டிருக்கும் நாகணவாய்ப்புள், கிளி முதலிய பறவைகளும் இல்லையென்பதை நன்கு தெரிந்து, சீவகனுக்கு அவன் பிறப்பின் வரலாற்றினைப் படர்க்கையில் வைத்துக் கூறினார். அதனைக் கேட்ட சீவகசாமி, "ஐயரே, உம்மால் கூறப்படுஞ் சிறுவன் யார்?" என, குரவர், "அவன் நீயே," என்றனர். சீவகன், "அந்தோ! என் தாய் தந்தையர் கதி இங்ஙனமாயிற்றே!" என்று அலறிக் கீழே வீழ்ந்து மூர்ச்சித்தான். ஆசிரியர் அவனை வாரி எடுத்து மார்போடணைத்து, இழந்த உணர்ச்சி தோன்ற ஆவன புரிந்தார். சீவகன் சிறிது மூர்ச்சை தெளிந்தான். அவன் அமைதியுறுமாறு பல கூறினர் அச்சணந்தியார். நம்பி மடங்கல் போலக் கர்ச்சித்துக்கொண்டு வில்லையேந்தி, "இக்கணத்திலேயே கட்டியங்காரன் முடித்தலையைத் துணிப்பேன்!" என வீரத்துடன் விரைந்தெழுந்தான். ஆசிரியர் அவனை அமர்த்தி, "இன்னும் ஓர் ஆண்டுக்குப் பின்னரே பகையை முடிக்கவேண்டும்," என்று கூறி, அதன்பொருட்டு அவனிடம் வாக்குறுதியும் பெற்றுப் பின்னர்த் தமது வரலாற்றைக்கூறுகின்றார்:

"மாசற்ற மாணவ, வாரணவாசி என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்த உலோக பாலன் என்பான் தன் மக்கள்மேல் அச்சுமையை ஏற்றிவிட்டுத் தான் காடு சென்று தவம் புரிந்தான். அவன் முன் செய்த தீவினை வந்து அடைய, யானைத்தீ என்னும் நோயாற்பீடிக்கப்பட்டு, அல்லல் பல அடைந்து, இறுதியில் இவ்

ஊரின்கண் உள்ள ஒரு வீட்டிற் புகுந்தான்,” என்று வரலாற்றை முடிக்கு முன்னமே நம்பி, “ அவன் யார்? அவன் வாழ்க!” என்றான். சீவகன் வியந்து மற்றப் பகுதியையுஞ் சொல்லும்படி வேண்ட, “உத்தம, யான் கந்துக்கடன் வீட்டிற்புகுந்து அவனோடு பொற்கலத்தில் அடிசில் அயின்றேன்; எனது நோய் சிறிது விலகியது; அதனால், என் நோய் நீங்குதற்குரிய பொருள் ஒன்று அங்கே உள்ளது எனக் கருதிச் சின்னாள் அங்குத் தங்கினேன்; கந்துக்கடன் வீடு முழுதும் துறவிகளுக்கு உரியதாகலின், ஒரு நாள் அவ்வீட்டினுள்ளே புகுந்தேன்; ஐயனே, நின்னைக் கண்டேன்; நோய் விண்டேன்; மகிழ்ச்சி கொண்டேன்; இங்கு உனக்குக் கலைகள் பயிற்றும்பொருட்டே தங்கினேன்; இனி யான் தவத்திற்குச் செல்வேன்,” என்று கூறினர். நம்பி தவத்திற்செல்வாரைத் தடுத்தலாகாமைபற்றி அரிதின் இசைந்தான். அச்சணந்தி என்பார் கந்துக்கடனுக்கும் சுநந்தைக்கும் பல அரிய நீதி மொழிகளைக் கூறிவிட்டு, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தவஞ் செய்தற்குரிய இடம் நாடிச் சென்றனர்.

## 6. நிரை மீட்சி

சீவகன், “நாமகள், அழகுத் தெய்வம், வீரமகள், இசைத் தெய்வமாகிய நால்வரும் இவனல்லது வேறு இல்லை,” என்று கண்டார் கூறுமாறு ஞானம், அழகு, வீரம், வீணைச் செல்வமாகிய இவற்றால் ஒப்புயர்வின்றி விளங்கினன்.

**வேடர் நிரை கவர்தல்**

இவன் இத்திறமுடையனாக, வேடர் அனைவரும் ஒரு நாள் குன்றின்மேல் வந்து கூடி, “மன்னன் பசுக் கூட்டங்கள் இக்காலத்தில் இங்கு வரும்; அவற்றைக் கவர்வோம்,” என்று கருதிக் கொண்டிருக்க, நிமித்தம் வல்ல அறிவுடையான் ஒருவன், அப்பொழுது ஒரு புள் கூவிய குரலின் குறிப்பைக்கொண்டு, “நாம் கருதியபடியே இது போழ்து நிரையைக் கவர்வோம்; அக்காலை அரசன் படை வந்து பொருது ஆற்றாது ஓடும்; பின்னர் ஒருவன் தேர்மீது வந்து நம்மை எதிர்ப்பான்; நெருப்புச் சுடுதலாலே தேனீக்கள் ஓடுதல் போல நாமனைவரும் புறங்கொடுத்து ஓடுவோம்,” என்றனன். வேடர் அவனை நோக்கி எள்ளி நகையாடி,

"ஏழை வேட்டுவீர், கூற்றமே ஆயினும் ஒருவனுய்வரின் அவனால் செய்யத்தக்க செயல் சிறிதுமில்லையாகலின், இன்றே நிரை கொள்ளக் கடவோம்; எழுக!" என்று கூறி எழுந்தனர்; எழுந்து கட்குடித்துப் பறைகளையும் துடிகளையும் முழக்கி, முருகனை வணங்கிப் பசுக்கள் நிற்குமிடஞ் சென்று அவற்றைக் கவர்ந்தனர். ஆயர் அவர்களோடு எதிர்த்துப் போர் புரிந்து ஆற்றாராய் ஓடித் தமது இடைச்சேரியிற்சொல்லி வருந்தினர். ஆங்குள்ள ஆய மகளிரனைவரும் வலையிற்பட்ட மான் போலவும் மயில் போலவும் மனங்கலங்கித் தத்தம் மனையில் நிற்கும் ஆன்கன்றுகளைக் கட்டித் தழுவிக்கொண்டு, "எம் அன்னைமீர், நும் அன்னைமார்களை வேட்டுவர் வருத்தி அடித்துக்கொண்டு போய்விட்டார்களே! இனி நீவிர் எங்ஙனம் உய்வீர்!" என்று புலம்பி அழுதனர்.

பின்னர்ப் "பசுக்களுக்கு நேர்ந்த துன்பத்தை அரசனிடஞ் சொல்வோம்," எனச் சில ஆயர் ஓடி வந்து, கட்டியங்காரன் வாயிலாளருக்கு உணர்த்த, அவர்கள் அங்குச் சென்று அரசனுக்கு அறிவிக்க, அவன் விரைவில் தெரிவிக்காமைக்கு வெகுண்டு பின்னர்ச் சிறிது தணிந்து, தன் படையை நோக்கிக் "காற்றினுங் கடுகச்சென்று நிரையை மீட்பீராக!" என்று கட்டளையிட்டான்.

கட்டியங்காரன் சேனை அவன் கட்டளைப்படியே சென்று வேட்டுவரோடு பொருது ஆற்றாதாய்ப் புறங்காட்டிற்று. இச் செய்தியை ஆயர் சிலர் ஓடிக் கட்டியங்காரனுக்குத் தெரிவிக்க, அவன் யாதுஞ் சொல்லாது வாளாவிருந்தான்.

**சீவகன் வெற்றி**

ஆயர்களுக்குத் தலைவனாயிருந்த நந்தகோன் என்பான், "நிறையை வேட்டுவர் கையினின்று மீட்டு வந்தவர் எவரோ அவர்க்கு என் கன்னி உரியளாவாள்," என்று பறை சாற்றுவித்தான். இதனைக் கேட்ட ஆடவர்களோ, "பெண், பெறுதற்கரிய தெய்வ மாதுதான்; ஆனால், வேடர்களை வெல்ல நம்மாலாகாது," எனக் கூறினார்கள். ஒருவன் ஓடிச் சீவகற்கு இதனைச் செப்பினான். அந்நம்பி உடனே, "நல்லொழுக்கம் பசு இவற்றையும், பெண்டிர், பாலர், துறந்தார் முதலியோரையும் யான் காவேனாயின், வேடரிடத்துத் தனது ஆண்மையைக் கொடுத்து, நிரையையும் பறிகொடுத்துப்

பாலடிசில் உண்டற்கு உயிரோடிருக்குங் கட்டியங்காரனுவேன்!" என வஞ்சினங் கூறித் தேரின்கண் ஏறி, வேடரோடு பொருதற்குச் சென்றனன்.

முன் நிமித்தங் கூறியவன் வேடர்களை நோக்கி, "அங்கு வருபவனோடு போர் செய்வதற்கு இது தக்க பருவமன்று; நிரையை விட்டு நாம் செல்வோம்," என்றனன். வேடர், "கடலிலே முதலையினும் வலியது ஒன்றிருக்குமாயின், காட்டின்கண் நம்மினும் வலியாரும் இருப்பர்," என்று கூறிப் பறையுங் கொம்பும் முழங்க எழுந்து பொருதற்கு விரைந்தார். சீவகன், வேடர் தனக்கு நிகரன்மையாலும், ஆட்சி இல்லாமையால் அவர் தனக்குப் பகையன்மையாலும், தனது அருளையும் வீரத்தையும் புலப்படுத்தற்குச் சென்றவனுதலாலும் அவர்களைக் கொல்லாமலே தனது தேர் ஒன்றே அவர்கட்குப் பலவாகத் தோன்றுமாறு அதனைக் கொள்ளி வட்டமும் காற்றாடியும் போலச் சுழலச் செய்து, அவர்கள் அஞ்சியோடாநிற்க நிரையை மீட்டான். வேடர் நிமித்திகனை நோக்கிப் "பேதாய், ஒரு தேர் வருமென்று கூறி நிமித்தந் தப்பினுய்; வந்தன பல தேரன்றோ?" எனச் சொல்லிக் கொண்டு உயிர் தப்பினுற்போதும் என்ற எண்ணமுடையவராய் ஓடி ஒளிந்தனர். இதனைக் கேட்டுக் கட்டியங்காரன் அழுக்காற்றினுல் வெகுண்டான். நகரிலுள்ளாரனைவரும் இதனை அறிந்து மகிழ்ந்தனர். சீவகன் தன் மனைக்குச் சென்றனன். மங்கையர் பலர் அட்டமங்கலமேந்திச் சீவகனை வரவேற்றனர். கந்துக்கடனும் சுநந்தையும் சீவகசாமியைக் கட்டித் தழுவிக் கண்ணேறு போக்க ஆவன புரிந்தனர்.

நந்தகோன் போந்து நம்பியைக் கண் குளிரக் கண்டு மகிழ்ந்து, "ஐய, இதனைக் கேட்பாயாக: வேந்தன் விசயைமேற்கொண்ட விருப்பத்தினுல் ஆட்சியைக் கட்டியங்காரனிடம் வைத்தான். அதனுல் முன்னர் நாட்டிற்குக் கேட்டினைப் புரிந்து பின்னர்த் தானும் இறந்துபட்டனன். அவன் இறந்த ஞான்றே மலையிலேறி வீழ்ந்து எனது உயிரை மாய்க்கச் சென்றேன்; சென்ற யான் தேவி கருவுற்றிருந்தமையறிந்தேன்; ஆதலால், ஆலம் விதை போலத் தெற்றுப் போய் மறைந்து பின் தோன்றுவது இல்லையானுல் உயிரைப்

**நந்தகோன் நல்லுரை**

போக்கிக்கொள்ளலாம் எனக் கருதி, இவ்வுயிர்ப்பொறையைச் சுமந்துகொண்டிருக்கிறேன்; என் பெயர் கோவிந்தன் என்பது; என் மனைவி கோதாவரி என்பாள் பெற்ற நங்கை கோவிந்தை என்பவள் அழகினாலே திருமகளையொத்தவள்; பொறையினாற் பூமி தேவியைப் போன்றவள்; பால்போலும் இனிய சொல்லையுடையவள்; கருவிள மலர் போன்ற கண்களையுடையாள்; நடையால் அன்னத்தையும், சாயலால் மயிலையும் வென்று விளங்குபவள். அவ்வணங்கை நீ மணஞ்செய்துகொள்வாயானால், நறுமணங்கமழும் நெய், பால், தயிர் ஆகிய இவற்றாலே பாதலமெல்லாம் நிறையுமாறு செய்வேன். நம்பி, நீ என் குலத்தைக் கருதி மாறுபட மாட்டாயென்று நினைக்கிறேன். குறமகளாகிய வள்ளிநாயகியைக் குமரக் கடவுளும், கோவலர் குலத்து நப்பின்னைப் பிராட்டியைத் திருமாலும் மணஞ்செய்துகொண்டதை நீ அறிவாயன்றோ?" என்று இன்னன கூறி, "அப்பாவையைப் பொற்பாவை எழுடனே நினக்குத் தருகின்றேன்; அருள் கூர்ந்து நின் அடிச்சியை மாலை சூட்டுவாயாக!" என்றான்.

இவற்றைக் கேட்ட நம்பி, நந்தகோன் தன் தந்தையிடம் வைத்திருக்கும் அன்பினை எண்ணி அகமகிழ்ந்து, "இவன் நம்மிடம் அளவு கடந்த அன்பு வைத்துத் தன் புதல்வியை மணஞ் செய்துகொள்ள வேண்டுகிறான்; நம் குலத்தவர் தமது குலத்திற் கொள்வாத மாதரை முற்பட மணஞ் செய்துகொள்வதில்லை; இடையரினும் வாணிகஞ் செய்வோர் சிலர் இருக்கின்றாராதலின், இவர்கள் சிறிது வணிக வகுப்பினைச் சார்ந்தவர் ஆவர்; நம் தோழருள் பதுமுகன் வணிகனாய் இருக்கின்றான்; ஆதலின், அந் நங்கையை நாம் மணமுடித்துக்கொள்ளாவிடினும், அப்பதுமுகற்கு முடித்து வைக்கலாம்; ஆனால், இச்செய்தியை இப்பொழுது தெரிவித்தால் இவன் உடன்படான்; தந்திரத்தால் இதனை முடித்தலே சாலும்," எனக் கருதி, அவனிடம் இரு பொருள்படுமாறு பேசி இயைவித்துப் பின்னர் அவன் நங்கையை அழைத்து வந்து மணப் பந்தரில் தாரை வார்க்க, அதனைப் பதுமுகற்கென்று சீவகன் தன் கையிலேற்று, அவற்கு அப்பெண்ணை மணமுடித்து வைத்தனன். கோவிந்தன் கோவிந்தைக்கு இரண்டாயிரம் பசுவும், எழு பொற் பாவையுங் கொடுத்தான். மணமக்கள் மகிழ்ச்சி மிக்கு வாழலானார்கள்.

# 7. யாழ் வென்றி

அவ்விராசமாபுரத்திலுள்ள யவதத்தன் என்னும் வணிகன் புதல்வனும், பதுமை என்பவள் நாயகனுமாகிய சீதத்தன் என்பான், வாணிகத்தால் அளவிறந்த பொருளை இழந்து, முயற்சி குன்றுதவனுய் மீண்டுந் திரைகடலோடித் திரவியம் தேடவேண்டுமென்னும் விருப்பம் மேற்கொண்டு, "பிறரிடம் அடிமையாயிருக்கும் வறிஞரும் தமக்கு வரும் சிறு பொருளைச் சிறிது சிறிதாகத் தொகுத்துப் பெரும் பொருளாக்கி யானைமீதேறி உலாவரக் காண்கின்றோம்; இதற்குக் காரணம் யாது? அவர்கள் முயற்சியேயன்றோ! உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ! இவ்வாறு தமது முயற்சியால் கீழ் நிலையிலிருந்து மேன்மை அடைபவரையும், அஃதின்மையால் உயர்நிலையிலிருந்து தாழ்வடைபவரையுங் கண்டும் சிலர், "சுரையாழ அம்மி மிதப்பதுபோலத் தாழ்ந்தோர் உயர்ந்தனர்; உயர்ந்தோர் தாழ்ந்தனர்; இவற்றிற்குக் காரணம் அவரவர் முன் செய்த வினைகளே யாகும்; நாம் முயற்சி செய்வதாற்பயனில்லை; வருவது தானே வரும்," என எண்ணிச் சோம்பித் தமது காலத்தைக் கொன்னே கழிப்பர். இவர்கள் மூடர்களே. இவர்கட்கு எப்போதும் துன்பமேயன்றி இன்பமென்பது எட்டுணையும் இன்று; ஆதலின், எல்லா இன்பங்கட்கும் துணைக் காரணமாகவுள்ள பொருளை ஈட்ட வேண்டும்; ஆனால், அஃது அறவழியில் ஈட்டப்படல் வேண்டும்; அதுதான் இன்பமளிப்பதாகும்; இந்நிலவுலகில் பணமில்லாதவன் பிணமெனப்படுவான்; நேரிய முறையிலே தேடிய பொருளைக் கொண்டு ஒருவன் தன் சீரிய கிளைஞரைப் பேணுதலே மனிதப் பிறவியின் பயனாகும்," என்று தனக்குள்ளே எண்ணி, எஞ்சிய பொருளை ஒரு மரக்கலத்திலேற்றிக்கொண்டு, ஒரு நல்லோரையில் வங்கத்தைச் செலுத்தி, அழகிய தீவு ஒன்றிலே தங்கி, அங்குள்ள அரசனை முத்தாரமொன்றினைக் கையுறையாகத் தந்து கண்டு, அவனது நட்பைப்பெற்றுத் தான் கொண்டுபோன பண்டங்கள் அனைத்தையும் அங்கேயே விற்றுப் பெரும்பொருளீட்டிக்கொண்டு, அரசனிடம் விடை பெற்றுத் தன் கலத்திலேறி ஊரை நோக்கிப் புறப்பட்டான். கப்பல் கரையை அடைதற்கு ஒரு யோசனை அளவில் வந்துவிட்டது. அதன்கண் உள்ள அனைவரும், "நமது

சீதத்தன் செலவு

ஊரை அடைந்துவிட்டோம்!'' என மகிழ்ந்தனர். அவர்கள் மகிழ்ச்சி அடியோடு தொலையுமாறு திடீரென எங்கும் இருள் சூழ முகிற்கூட்டம் பெருங்காற்றுடன் கூடி இடித்துப் பெரு மழையைப் பொழிந்தது. காற்று மிகுதலும் கடல் கொந்தளித்து மரக்கலத்தைப் பல விதமாகச் சுழற்றியது. சீதத்தன் இனிக் கப்பல் மூழ்கிவிடுமென்று கருதினானாயினும், தைரியத்தைக் கைவிடாமல் கப்பலில் உள்ளவர்களை நோக்கி, ''எமரங்காள், இறைவன் செயலால் நமது கலம் இடையூற்றில் அகப்பட்டுக்கொண்டது; ஆயினும், நாம் மனங்கலங்சல் தகாது; அபத்து நேர்ந்த காலத்தில் கலங்குதலும், இன்பம் வந்தபோது மகிழ்தலும் அறிவுடையோர்கண் இரா; 'இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்தூர்வ தஃதொப்ப தில்,' என்னும் பொய்யாமொழியை மெய்யாகக் கடைப்பிடிமின்; அனைவீரும் ஒரே மனமாக ஆண்டவரைப் பரவுமின்; அவர் நும்மை ஆதரிப்பார்,'' என்று அவர்களைத் தேற்றினான். இங்ஙனம் அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே தரன் என்னும் ஒரு வித்தியாதரனது விஞ்சை வன்மையால் பாய்மரம் முறிந்து கப்பல் தலை கீழாகக் கடலுக்குள் மூழ்குவது போலவும், ஒடிந்த பாய்மரத்துண்டு ஒன்று தனக்கெதிரே மிதப்பது போலவும் சீதத்தனுக்குத் தோன்றியது. அவன் உடனே அத்துண்டைப் பற்றிக்கொண்டு தனது கப்பல் முழுகிவிட்டதாகவே கருதி நீரின்மேல் மிதந்தான். அலையானது அவனைக்கொண்டு கரையிற் சேர்த்தது. அவன் தனது வினையை வியந்து, ஒரு மணல் மேட்டினை அடைந்தான். ஆங்கு அன்னம் ஒன்று தன் கால் நடுவே ஞெண்டு ஒன்றினைத் தள்ளத்தள்ள, அஃது மறித்து மறித்து ஆங்குச் செல்ல, அவ்வன்னம் அதனைக் கொல்லாமையைக்கண்டு, ''இந்நன்னிமித்தத்தால் நமக்கு இறப்பு இல்லை; நம்மை ஏற்றிக் கொண்டு செல்ல ஏதேனும் ஒரு கப்பல் இங்கே வரலாம்,'' என எண்ணிக் கடலையே நோக்கிக்கொண்டிருந்தான். அப்போது தரன் ஒரு வழிப்போக்கன் போல ஆங்குச் சென்றனன். அவனைச் சீதத்தன் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, தான் அடைந்த துன்பங்களனைத்தையும் அவனிடம் கூறித் தன்னை ஆதரிக்க வேண்டுமென அவனை வேண்டினன். தரன், ''நண்ப, நீ ஒன்றுக்குங் கவலையுற வேண்டுவதில்லை; யான் விஞ்சை பல தேர்ந்தேன்; மூழ்கிய நின் கப்பலையும் பொருள்களையும் நின் நண்பர்களையும்

மீட்டுக்கொடுப்பேன்; ஆதலின், இனி அது பற்றிக் கவலற்க! என்னுடன் வருக!" என்று தன் ஆட்டு வாகனத்தில் அவனையும் ஏற்றிக்கொண்டு மேலே பறந்து வெள்ளி மலையை அடைந்தான். சீதத்தன் ஆங்குள்ள கனிகளைத் தின்று களை தீர்ந்தான்.

கலுழ வேகன் நட்பு

பின்னர், தரன், "நேய, இம் மலையில் ஒரு காவதங் கடந்து செல்லின் ஒரு நகருண்டு; ஆங்குக் கலுழ வேகன் என்னும் அரசன் ஒருவன் உளன்; அங்குச் செல்வோம்; வருக!" என அழைத்துக்கொண்டு போய், அந்நகருட்புகுந்தனன். சீதத்தன், 'இது விண்ணுலகமோ!' என ஐயுற்ருன். அவனைத் தரன் தன் மனையிலிருத்தி, அமுதருத்திப் பின்னர் அரசனிடம் அழைத்துச் சென்ருன்; செல்லுங்காலை, "நண்ப, இந்நகர்க்கிறைவனுக்கு அவன் மனைவி தாரணி வயிற்றிலே தோன்றிய அருந்தவப் புதல்வி காந்தர்வதத்தை என்பாள்; அவள் பிறந்த ஞான்று நிமித்திகன் சாதக மியற்றி, 'இவளுக்கு நாயகன் இராசமாபுரத்திலேயுளன்,' என்ருன். அந்நங்கை இதுபோது மங்கைப் பருவமெய்தி நின்ருள்; மன்னர் பலர் மணம் வேண்டி வந்தனர்; மன்னன் மறுத்தனன்; அவன் கருத்து யாதோ! அதனை அறிய முடியவில்லை; நீ இங்கு வந்தபடியால் அக்காவலன் கருத்தினை அறியக்கூடுமென நினைக்கிறேன்," எனக் கூறிக்கொண்டே அரண்மனைக்குட்சென்றனன்.

சென்றவன், தங்கள் வரவை அரசனுக்கு அறிவித்து, அவன் ஆணையின்படி சென்று காவலனைக் கண்டனன். சீதத்தன் மன்னனை வீழ்ந்து வணங்கினன். அரசன் முகமன் பல கூறி ஆதனத்தில் இருத்தினன்; இருத்தி, அவன் தந்தை, தாய், தாரம், மக்கள், சுற்றம் ஆகிய அனைவரையும் வினவி, "நம்மிருவருக்கும் உறவு இன்று உளதானதன்று; எழு தலைமுறையாக ஏற்பட்டது; ஆதலின், 'யான் அரசன்; நீ வணிகன்,' என்ற வேறுபாடில்லை; இவ்வீடு உன் வீடாகும்," என்ருன். சீதத்தன் அதனைக் கேட்டு அக மகிழ்ந்து, "ஐயனே, என் தந்தையின் தந்தை ஒருகால் எங்களை நோக்கி, 'எமரங்காள், வேதண்ட மலையில் தென்பாகத்திலுள்ள காந்தார நாட்டில் விச்சாதர லோகமாநகரியினின்று நீங்காத கலுழ வேகனென்னும் வேந்தன் நமது குலதெய்வமாவன்; நீவிர் இதனை

அறிந்து உய்மின்,' என அறிவுறுத்தினன்; ஆதலின், என் குலம் நின் குற்றேவலேச் செய்யுங் கடமையுடையது,''' என்றான்.

மன்னன் மனமகிழ்ந்து, அவன் கையைப் பிடித்துக்கொண்டு போய்த் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான். ஆங்குள்ள காந்தர்வ தத்தையைக் கண்ட சீதத்தன், "இவ்வுருவம் கொடியோ, மின்னோ, பொன்னாற்செய்த பாவையோ!" என ஐயுற்று நின்றான். தத்தனுக்குத் தத்தையைக் காவலன் காட்டி, "அன்ப, நின் மகளாகிய இவளை நினது நகராகிய இராசமாபுரிக்கு அழைத்துக் கொண்டு போய், அந்தணர், அரசர், வணிகர் என்னும் முத்திறத் தவரில் இசையாற்பொருது இவளை வெல்வார் யாரோ அவருக்கு அளிப்பாயாக!" என்றான். சீதத்தன் களிப்புடன் அதனை ஏற்றுக் கொண்டனன். தாரணி, தன் தவப் புதல்வியைப் பிரிதற்கு நேர்ந் ததே என வருந்தினள். நாயகன் பல நன்மொழிகளால் அவளைத் தேற்றினன். தத்தையின் துன்பத்தைத் தாய் போக்கினள்.

**தத்தன் தந்தையோடு தன்னூடு அடைதல்**

பின்னர், மன்னன் மகளுக்கு அணிகலம் நிறைத்து வைரம் இழைத்த பெட்டி ஐஞ்ஞூறும், முத்தும் மணியும் நிரப்பிய யவன தேசத்துப் பெட்டி இரண்டாயிரமும், வீணைகள் ஆயிர மும், வாளேந்திய பதினாயிரம் மகளிரும், பிறவும் நல்கி, வீணாபதி என்னுந் தோழியை நோக்கி, "உடம் பின் உயிர்போல என்றும் இவளை நீங்காத அரிவையே, நின் தலைவிக்கு எம்மைப் பிரிதலால் நேருந் துன்பத் தைப் போக்கி, நீ தந்தையும் தாயும் ஆவாயாக! அல்லாமல், இருவிரும் நமது ஆணையை விட்டுச் சீதத்தன் ஆணை வழி ஒழுகுவீராக!" என்றான். தத்தை தன் தாயை வணங்கிப் பின் தந்தையை வணங்க, அவன் அவளது வருத்தத்தை நீக்க, "என் தவச்செல்வமே, வலம்புரி பெற்ற முத்து அணிவோர்க்குப் பயன்படுமேயன்றி அவ்வலம்புரிக்குப் பயன்படாது; அத்தன்மை யரே மகளிருமாகலின், நீ வருந்தாது செல்க!" எனக் கூறி விடுத் தான். தத்தை பலர் சூழத் தன் விமானத்திலேறினாள். விமான மும் படையுடன் தத்தன் மரக்கலம் மூழ்கிய இடத்தைச் சார்ந்தது.

தரன் சீதத்தனை நோக்கி, " நண்ப, இவளை உன்னுடன் இராச மாபுரிக்கு அனுப்பும்பொருட்டே அரசன் ஆணையால் என் விஞ்சை

கொண்டு இத்துணையும் செய்தேன். இதோ பார் நின் கப்பல் முதலியவற்றை!''' என்று காட்டினான். சீதத்தன் எண்ணவொண்ணாத இறும்பூதுற்று, மரக்கலத்திலிருந்த நண்பர்களைக் கட்டித் தழுவிக்கொண்டு, "ஐயன்மீர், கப்பல் மூழ்கிவிட்டது; நீவிர் அனைவீரும் இறந்துவிட்டீரென்று யான் சொல்லவொண்ணாத துன்பமுற்றிருந்தேன்; நீவிர் எங்ஙனம் பிழைத்தீர்?" என்றான். அவர்கள், "ஐயனே, நமது கப்பல் மூழ்கவில்லை; நாங்கள் அனைவரும் சிறிதும் ஊறின்றி மகிழ்ச்சியுடனே இருந்தோம்," என்றார்கள். சீதத்தன் தனக்கு நேர்ந்த அனைத்தையுங் கூறினான். அவர்கள், "யாங்கள் ஒன்றுங் கண்டிலோம்; இந்நாடகத்தைத்தான் கண்டோம்," எனக் கைகொட்டிச் சிரித்தார்கள். தத்தன் மகிழ்ச்சி மீக்கூர்ந்து, தரனிடம் விடை பெற்றுக்கொண்டு தத்தையோடு இராசமாபுரம் வந்து சேர்ந்தான்.

**யாழ்ப்போர்**

இராசமாபுரம் வந்த சீதத்தன் தன் மனைவி பதுமைக்குத் தத்தையின் செய்தி அனைத்தையுங் கூறினான். அவள் தத்தையை அன்புடன் வரவேற்று மகளாகக் கொண்டனள். தத்தன் தத்தைக்கு அழகிய கன்னி மாடம் ஒன்று அமைத்து அவளை அதிலிருத்தினான்.

பின்னர் மங்கையர் சுயம்வரத்திற்கு மன்னன் அநுமதி வேண்டுவதாகலின், சீதத்தன் கட்டியங்காரனிடஞ் சென்று காந்தர்வ தத்தையின் செய்தி அனைத்தையுங் கூறி, அவன் இசைவு பெற்றுப் பின்னர் யாழ்ப்போர் நடத்துவதற்கு ஓர் அழகிய மண்டபத்தை அமைத்து, முரசு அறைவதன் மூலமாக அனைவருக்குஞ் செய்தி விடுத்தனன். அரசர் பலரும் வந்து குழுமினர். அந்தணரும் வணிகரும் வந்து நிறைந்தனர்.

தத்தை தன் இயற்கை அழகுடன் செயற்கை அழகும் சேர்ந்திலங்க, தோழிகளால் செய்யப்பட்ட ஒப்பற்ற ஒப்பனையுடன் வந்து அம்மண்டபத்தின் திரை மறைவிற் சென்றனள். அவளைக் கண்டோர் அனைவரும், "இவள் இலக்குமியோ, வித்தியாதர மகளோ, அறியோம்! இவளை யாழால் வெல்லாமல் வலிதிற் கொள்ள யாரேனுங் கருதின், அவருடன் போர் புரிவோம்; யாழால் ஒருவரும் வெல்லாவிடின், இவளைப் பெறுதற்குரிய தவஞ் செய்வோம்," என்று எண்ணியிருந்தனர்.

தத்தை யாழ் மண்டபத்துள் திரை மறைவில் இருந்து, தனது யாழை எடுத்துப் பண்ணை எழுப்பி, நரம்பைத் தெறித்தனள். கின்னரர் அவ்வோசையைக் கேட்ட அளவில் அங்கு வந்து கூடினர்.

தத்தை இங்ஙனம் யாழ் வாசித்தற்கு அமைந்தவுடனே வீணாபதி என்பாள் வெளியே வந்து அவையினரை நோக்கி, "அவையீர், எம் மாது வாயினாற்பாடுவள்; அதற்கு அமைய யாரேனும் யாழ் வாசியுங்கள்; அன்றேல், அவள் யாழ் வாசிக்க நீவிர் பாடுமின்," என்று கூறித் திரைக்குள்ளே சென்றனள். உடனே தத்தை பளிக்குச் சுவருக்குப்பின்னே இருந்துகொண்டு, தானே யாழை வாசித்து கொண்டு பாடினள். சோலைகள் உருகி வளைந்தன; பட்ட மரங்கள் தளிரையீன்றன; கின்னர மிதுனமென்னும் பறவைகள் ஆங்கு வந்து மெய்ம்மறந்து வீழ்ந்தன; அவள் பாடுவதைக்கண்ட அரசர் முதலியோர், அவள் புருவம் மேல் ஏறாமலும், கண்கள் ஆடாமலும், கண்டம் வீங்காமலும், பற்கள் தோன்றாமலும் பாடியதை எண்ணி இறும்பூதுற்றனர்.

இப்படித் தத்தை பாடி நிறுத்திய அளவில் அரசர் ஒவ்வொருவராக யாழை வாசித்து உச்சத்தே பாடினர்; பாடுங்காலை மெய்ம்மறந்து கிடந்த புட்களெல்லாம் அவ்விசைக்கு அஞ்சி அவரைச் சிரிப்பன போலப் பறந்து போயின. தத்தை கண்டத்தாற் பாடினள்; அவைகள் வந்தன. அரசர் பாடினர்; பறந்தன. இவ்வாறே பலரும் தோற்றனர். கட்டியங்காரன், "இனி இவளை யாழ்ப்போரில் வெல்வாரில்லை; ஆதலால், யாழ் வாசித்தலை ஒழிவீராக!" என்றனன்.

இச்செய்தியை அறிந்த சீவகன் புத்தி சேனன் என்னும் மறையவனை நோக்கி, "நண்ப, மன்னர் முதலியோர் சூழ்ந்து ஆறு நாட்கள் நடந்த இந்த யாழ்ப் போரில் இக்கூட்டங் கலைவதற்கு முன்னர் யாமும் சென்று அப்போரிற் கலந்துகொள்வோம்; 'கன்னியின் காதலால் செல்கின்றானல்லன்; புலமையைப் புலப்படுத்தற்குப் போகின்றான் சீவகன்,' என என் தந்தை கருதுமாறு நீ அவற்குக் கூறி வருக," என விடுத்தான். புத்தி சேனன் கந்துக்கடனிடம் வந்து அதனைத் தெரிவித்தான்.

**காந்தர்வ தத்தையின் கடிமணம்**

கந்துக்கடன் "நம் ஐயனுக்கு இன்பம் அளிப்பதில் அமுது போல்வாராய், நீங்கலாகாமையின் கொல்லியப்பாவையை ஒத்தாராய், மூப்பில்லாதவராய்க் கலைகளென்னும் அறுபத்து நால்வர் (அறுபத்து நான்கு கலைகள்) மங்கையர் முன்னரே அமைந்திருக்கின்றனர்; சென்றால், நமது காளை வெற்றி பெறுதல் திண்ணம்; ஆனால், முன்னரே பல காரணங்களாற் பொறாமையுற்றிருக்குங் கட்டியங்காரன் மேலும் அழுக்காறு கொண்டு தீங்கு விளைப்பானோவென்று அஞ்சுகின்றேன்!" என்று கூறினான்.

அங்ஙனம் அவன் கூறிக்கொண்டிருக்குங்காலத்தே, சச்சந்தன் அகப்பரிவார மகளிருள் ஒருத்தியாகிய நாகமாலை என்பாள், சீவகனிடம் பேரன்புடையவளாதலின், "நம் சீவகசாமி ஒருவாறு இந்த யாழ்ப் போருக்கு வந்தாலும் வரக்கூடும்; அங்ஙனம் வரின், கட்டியங்காரனால் ஏதேனுந் தீங்கு நேரும்; அவ்வாறு நேரா வகை ஓர் உபாயஞ் செய்ய வேண்டும்," எனக்கருதி, குவளை மலரின் இதழ்களினால் ஓர் ஓலையில் சித்திரம்போலச் செய்திகளை வரைந்து, அவ்வோலையைச் சுருட்டிக் குவளை மலர்களால் மறைத்து, அதனைத் தன் அருமைத் தோழி ஒருத்தி கூந்தலில் அணிவித்து, அதனைக் கந்துக்கடனிடங் கொடுக்கும்படி அனுப்பினாள். அதனை அவள் கந்துக்கடனிடம் கொடுக்க, அவன் அதனை வாங்கி விரித்து வாசித்தான். அதில், "சீவகன் வெற்றியினாலும் புகழினாலும் கட்டியங்காரன் பொறாமையும் சினமுங் கொண்டு, 'அவனை எப்படியாவது தொலைத்துவிட வேண்டும்,' என்று என்னிடம் வெளியிட்டிருக்கிறான்; ஆதலால், சீவகனை வேற்றூருக்கு அனுப்பிவிடுக!" என எழுதப்பட்டிருந்தது.

இதனை அறிந்த கந்துக்கடன், "நாம் எண்ணியவாறே கட்டியங்காரன் கருத்துள்ளது; இதற்கென் செய்வது!" என ஓலை கொண்டு வந்தவளுடைய முகத்தை நோக்க, அவள் கந்துக்கடனையும் புத்தி சேனனையும் நோக்கி, "ஐயன்மீர், ஓலையிற்கண்டவாறு கட்டியங்காரன் பகை கொண்டிருப்பது உண்மையே; அவன் பகை கொள்ளப் பல காரணங்கள் உண்டு; அவற்றுள் ஒன்றினைக் கூறுவேன்; கேட்பீராக: ஒருநாள் கட்டியங்காரன் முன்னிலையில் நாடக மேடையில் அநங்கமாலை என்னும் நிருத்த மாது நடித்

தாள்; அதற்குச் சீவகன் முதலனைவரும் வந்திருந்தனர்; அவளை நாடக நூலாகிய பரத சேனபதியம் என்னும் நூலிற்கூறியபடி அலங்கரிப்பதற்குச் சீவகசாமியே தக்கவன் என்று அனைவருங் கூறினர்; அவர்கள் வேண்டுகோட்கிணங்கி ஐயன் அவளை ஒப்பனை செய்தான்; அந்நங்கை அந்நம்பிமீது அளவற்ற ஆர்வம் உடையவளாய், அவனையே நோக்கி நடித்தாள்; கட்டியங்காரனைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை; அதனல், அவன் அடங்காச் சினங் கொண்டு, அவளைத் தன் அரண்மனைக்கு வலிதில் இழுத்துக் கொண்டுபோய்த் துன்புறுத்தியும் அவள் நம்பிமீது வைத்த அன்பை மாற்ற முடியவில்லை; அவன் தன் பக்கத்திலுள்ளாரை நோக்கி, 'யான் அரசனய் இருக்க, இந்நகரிலுள்ளாரனைவரும் என்னை ஒரு பொருளாக மதியாமல், புல்லிய அந்தச் செட்டி மகனகிய சீவகனையே கொண்டாடுகிருர்கள்; இந்நடன மங்கையும் அவனையே மதிக்கின்ருள்; ஆதலின், அவனைக் கொன்ருலன்றி என்னை ஒருவரும் மதியார்; அவனை இனிக் கோறலே அமையும்,' எனக் கூறினன். அதற்கு அவர்கள், 'ஐயனே, முன்னெருநாள் ஆயிரம் வீரர்கள் தூக்க முடியாத திரண்ட கல்லொன்றினை அவன் ஒருவனகவே தூக்கித் தன் தோளில் ஏந்தியாடினன்; மற்றெரு நாள் இரண்டு யானைகள் தூக்க முடியாத இரண்டு கற்களைச் செண்டு போலத் தூக்கி எறிந்தான்; பின்னெரு நாள் வேடர் கொண்டு சென்ற பசு நிரையை மீட்டான்; பிறிதொரு நாள் நாங்கள் பசியால் வாடத் தேவாமிர்தம் போலும் இனிய உணவினையருத்திப் பசிப்பிணியைப் போக்கினன்; இன்னும் எத்தனையோ நன்மைகள் செய்திருக்கின்ருன்; இனியுஞ்செய்வான்; அவன் இருப்பது நமது நாட்டிற்கே ஒரு சிறப்பல்லவா? அவனைக்கொல்லுதல் எவ்வாற்ருனும் பொருந்தாது,' என்று கூறினர்கள். ஆனல், கட்டியங்காரன் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை; நம் நம்பிக்குத் தீங்கு விளைக்குங் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருன். இஃது அரண்மனையில் நடந்த மந்தணமான செய்தியாகும்," என்றனன்.

கந்துக்கடன் அவட்கு அளவிறந்த சிறப்பினைச்செய்து, "இன்னும் ஆங்கு நடக்கும் இது போன்ற விஷயங்களை இங்கு வந்து தெரிவிப்பாயாக!" என்று சொல்லி அனுப்பினன்; பின்னர்,

புத்தி சேனனை நோக்கி, "கட்டியங்காரன் கருத்தினை நாம் ஐய மறத் தெரிந்துகொண்டோம்; ஆதலின், நீங்கள் யாழ்ப்போருக் குச் சென்றால் அங்கு அவன் சூழ்ச்சியால் செரு விளையினும் விளைய லாம்; எதற்கும் நீங்கள் படையுடன் செல்வதே சாலப்பொருத்த வாகும்," என்றனன். புத்தி சேனன் நடந்த செய்திகள் அனைத்தையும் சீவகனிடம் வந்து தெரிவித்தான்.

நம்பி புன்னகை புரிந்து, "நமக்கு யாதொரு தீங்கும் வாராது," என்று கூறி, தன்னைப் புனைந்துகொண்டு தோழர் அனைவரும் புலித் திரள் போலத் தன்னைச் சூழ்ந்துவர, இளஞாயிறென்று குன்றின் மேல் ஏறியது போல அலங்கரிக்கப்பட்ட யானைமேலேறி, கட்டி யங்காரனது பொருத மனத்தைத் தனது தோற்றமென்னும் மத்திகையாலே அடித்து யாழ் மண்டபத்தைச் சார்ந்து யானையி னின்றும் இழிந்து, சூரியனனைவன் சந்திரன்மேல் இருந்தது போல ஆங்குப் புதிதாக இடப்பட்டிருக்கும் வெள்ளிய தவிசின்மேல் இருந்தான்.

இருந்த சீவகசாமியைக் காந்தர்வ தத்தை கண்ணுற்று, "இவன் நம்மை வென்று மணம் புரிவான்," எனத் தன் எதிர்கால அறிவால் உணர்ந்தனள்; பின்னர் வீணபதியை நோக்கி, "நங்காய், நல்ல யாழை நீ வைத்துக்கொள்; இவன் கல்வியை அறிதற்கு முதலில் மற்ற யாழ்களையெல்லாம் கொடுத்து இறுதியில் நல்ல் யாழைக்கொடு," என்று கூறி விடுத்தனள். அவ்வாறே வீணபதி ஒவ்வொரு யாழாக நம்பி கையில் நல்க, அவன் வீணபதியை நோக்கி, "இம்மரமெல்கிற்று; இம்மரம் அழுகினது. இம்மரம் வாட்புண்ணுற்றது; இந்த மரம் இடியேறுண்டது; இந்த மரம் வெந்தது; இந்த மரம் முறிந்தது," என்பன போன்ற குற்றங் களைக்கூறி, அவள் கொடுத்த யாழ்களையெல்லாம் கீழே வைத்து விட்டனன். பின்னர் வீணபதி நல்ல யாழை நல்கினள். அவன் அதனை வாங்கி, "இது நல்ல யாழ்," என்று கூறி, நரம்பின் தீமையை நெடும்பொழுது ஆராய்ந்து, "இந்நரப்பின் முறுக்கில் மயிர் ஒன்று உளது," என்று அம்முறுக்கினையுடைத்து, தத்தை காணும்படி அம்மயிரினை எடுத்துக்காட்டினன். காட்டவே, அவையினர், "இனி நம்பிக்கு நங்கை தோற்றாள்," எனக் கூறினர். சீவகன் தத்தையின் யாழை மட்டும் நன்றெனக்கொண்டு, நபுலன்

வைத்திருந்த நரம்பினை வாங்கி அந்த யாழிற்சேர்த்து வாசித்தான். மாந்தரனைவரும் அது கருவியென்று அறியாமல் கண்டமென்றே கருதினர்; கின்னரமும் அசுணமும் ஆங்கு வந்து அடைந்தன; மரமுங் கல்லும் உருகின; அவ்விசைக்கு ஏற்ப நம்பி தன் கண்டத்தாலும் பாடினன்; அப்பாடலைக் கேட்ட அளவில் கின்னரர் தாம் வாசித்துக்கொண்டிருந்த யாழைக் கைவிட்டனர்; விஞ்சையர் நெஞ்சுருகி மெய் சோர்ந்தனர்; மாந்தர் தம் நிலை அழிந்தனர்; முனிவர் அதனைப் பேரின்பமெனவே கருதி நுகர்ந்தனர். தத்தை, "மருந்தும் நிழலும் போல யாழொலியும் கண்டத்தொனியும் ஒன்றுபடப் பாடுவது சீவகற்கே சிறந்ததொன்றாகும்," எனக் கருதித் தனது யாழை வாசித்துக் கண்டத்தாற்பாடினள். நம்பி பாடல் ஒரு வகையாயும் நங்கை பாடல் மற்றொரு வகையாயும் இருந்தனவெனினும், எடுத்த பாடலில் நங்கை நம்பிக்குச் சிறிது தோற்றனள். அங்ஙனம் தான் தோற்றதற்கு நாணித் தனது கையிலுள்ள மாலையைக் காளையின் கழுத்திலணிந்து வணங்கி, அவையில் நிற்றற்கு வெட்கி, மின்போல நுடங்கி நிலத்தை நோக்கி நிற்க, அவள் நாணத்தால் துன்புறுதலைப் போக்கக் கருதித் தோழியர் நான்கு பக்கமும் திரையை வீழ்த்தினர்.

மாந்தரனைவரும், "இச்சீவகன் இம்மங்கையை அடைதற்கு அரிய தவஞ்செய்தான்!" என்று ஆரவாரித்தனர். கட்டியங்

**கட்டியங் காரன் கலகம்**

காரன் முன்னரே அழுக்காற்றால் புழுங்கிக்கொண்டிருந்தவனாதலின், இந்நிகழ்ச்சியால் இன்னும் அதிகரித்த பொறாமையுடையவனாய், "மன்னர்களுக்கும் சீவகனுக்கும் போரை மூட்டி விட்டு இவனை ஒழித்து விட வேண்டும்," என்று எண்ணி, அரசர்களை நோக்கி, "வேந்தர்காள், வணிகன் மகளை மன்னர் கொள்வது முறையேயன்றி, காவலர் மகளைக் கேவலமான ஒரு செட்டி கொள்வது முறைன்று; நீவிர் இந்நங்கையை இந்நம்பிக்கு இப்போது விட்டுவிட்டால், பெரு மலையைப்போலச் சீரிய நுமது உயர்வையெல்லாம் உகுத்தவராவீர்; இந்த இழிவு இவ்வுலகம் உள்ள வரையும் ஏகாது; ஆதலின், யாழ்ப் போரால் இவன் பெற்ற மங்கையை வாட்போரால் நீவிர் பெற்று நுமது குடிக்கு வந்த பழியை நீக்கிக்கொள்விராக! இன்னுமொன்று கேட்பீராக: இந்

நங்கை எல்லாச் சிறப்புக்களையும் தரத்தக்க அழகு வாய்ந்தவள்; ஆதலின், இவளைப் பெறுபவன் இந்நில மங்கையையும் தனக்கே உரியளாகப்பெறுவான்; ஆதலின், இவளை விடாதீர்கள்; 'நாமனை வரும் போர் புரிந்து இவளைப் பெற்றாலும் நம்மில் யாரடைவது? அதனால் நமக்குள் போர் நிகழும்; முடிவில் எல்லோரும் மடிந்து எஞ்சிய ஒருவனே இவளை அடைவான்; அதில் என்ன பயன்!' என்று நீங்கள் கருத வேண்டா; அதற்கு யான் ஒருபாயங் கூறு வேன்; கேளுங்கள்: எல்லோரும் தடாகத்திலிறங்கி நீர்த்துருத்தி கொண்டு ஒருவர்மீதொருவர் நீரை அடித்தலாகிய போரைச் செய்யின், உயிருக்கு அபாயமில்லை; அவ்விளையாட்டில் வென்றவர் களே இவளைப் பெறுதற்குரியவராவர்; ஆதலின், விரைந்து போரைத் தொடங்குவீராக!" என்று போரை மூட்டினன்.

இங்ஙனம் கட்டியங்காரன் இடித்திடித்துக் கூறி வேந்தர் களுக்கு வீரத்தையும் போர் செய்யுந் தீரத்தையும் உண்டாக்க, அவன் கூறிய மித்திர பேதமான வார்த்தைகளை உண்மையெனத் தெளிந்து மன்னர் அனைவரும் நம்பி யோடு மாறு கொண்டு போருக்கெழுந்தனர்.

**மன்னர் மாறுபாடு**

அப்பொழுது பதுமுகன், கட்டியங்காரனுடைய கபட வார்த் தைகளையும் மன்னவர்களின் மதியின்மையையும் எண்ணி, சாமம், பேதம், தானம், தண்டமென்னும் நான்கு வகையுபாய மொழி களாற் போரை விலக்கி இவர்கள் பிழைத்துப் போமாறு செய்ய லாமெனக்கருதி, அவர்களை நோக்கி, "வேந்தீர், நீவிர் சீவக சாமியை வெல்லுந்திறமை வாய்ந்தீரல்லீர்; யாழ்ப் போரில் வெற்றி கொண்டு நீதிப்படி நம்பி நங்கையைக் கைக்கொண்டனன்; அவ னுடன் நீவிர் போருக்கெழுதல் அநீதியாகும்," எனச் சாமோ பாயமான வார்த்தைகளையும்;

"மன்னர்காள், கடங்கொண்ட களிறொன்று அதிமதுரக்குள கினைக் கைக்கொண்டிருப்பின், அதனை அதன் கையினின்றும் பிடுங்குதல் எவராலாவது ஆவதொன்றோ? ஒருக்காலும் ஆகாது; அது போல, வீரவுருவினனாகிய எங்கள் நம்பி கைக்கொண்ட தத்தையை எவ்வாற்றானும் நீவிர் பெற முடியாது," என்ற பேத மொழிகளையும்;

"அறிவற்ற அரசர்களே, போர் மூட்டி அதன்கண் உங்களனைவரையும் மடித்து, இறுதியில் நாட்டையுங் கைப்பற்றக்கருதிய கட்டியங்காரன் சூழ்ச்சியில் அகப்பட்ட உங்கள் மதியிருந்தவாறு என்னே! பொருது கொன்னே அழியாதீர்கள்; நாங்கள் உங்களோடு போர் செய்யாமல் நீங்கள் இழக்கவிருக்கும் உங்கள் நாடுகளைத் தந்தோம்; பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் செல்விர்களாக!" என்னும் தான மொழிகளையும்;

"மதியற்ற மன்னர்காள், யரன் சொன்னவற்றைப் பொன்னே போலப் போற்றிக்கொண்டு போரை ஒழிவீர்களாயின், பிழைப்பீர்கள்; அன்றேல், நீவிரனைவிரும் மடிவது உண்மையே!" என்னுந் தண்ட வழியான சொற்களையுங் கூறினன்.

பதுமுகன் இங்ஙனம் கூறியும், 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது,' ஆதலின், அவர்கள் கேளாமல், பறை முழக்கிப் போருக்குப் புறப்பட்டார்கள். நம்பி, "போர் நிகழின், தத்தை அஞ்சுவாள்," என்று எண்ணி, அவளை நோக்கி, "நங்காய், இவ்வரசர்கள் தங்கள் அழிவு காலத்தை உணராமலே போருக்கு எழுகின்றார்கள். ஒரு கடிகைப்பொழுதில் இவர்கள் என் படைக்கு இரையாவார்கள். எனக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்று நீ அஞ்சற்க!" என்றனன். தத்தை, "அந்தோ! போர் நிகழின் யாதாய் முடியுமோ! இச்செருவுக்குக் காரணம் யானன்றோ! இப்பாவியேன் எதற்காக உயிர் வைத்திருக்க வேண்டும்!" எனப்புலம்பி அழுதனள். அது கண்ட வீணாபதி, "மங்காய், நம் தலைவர் படை மிக்க வன்மையுடையது; வெற்றி நமக்கே உண்டாகும்; சிறிதும் ஐயமில்லை; இதுபற்றி நீ கவலற்க!" எனத் தேற்றித் தன் முன்றானையால் அவள் கண்ணீரைத் துடைத்தனள்.

மன்னர் போர்

அப்பொழுது தத்தையுடன் சென்ற பெண் படைகள், "இந்த ஆண் மக்கள் வீரத்தினும் எங்கள் வீரம் சிறந்தது என்பதை இப்பொழுது காட்டிவிடுகின்றோம்!" என ஆரவாரித்து, வாட்படை தாங்கிப் போருக்கு எழுந்தன.

சீவகசாமி இதனைக்கண்டு சிரித்து, "மாதே, உன்னையும் உன் பரிவாரங்களையும் பதுமுகன் பாதுகாப்பான்; நீவிர் அஞ்சாதிருப்பீராக!" என்று கூறிப் பதுமுகற்கு அக்கட்டளையை இட்டு, புத்தி

சேனன், தேவதத்தன், சீதத்தன், நபுல விபுலர் ஆகிய ஐவரையும் நால்வகையாக அணி வகுக்குமாறு ஆணை தந்து, தான் நந்தட்டனுடனே தேரிலேறிப் பகையரசர்முன் சென்று, "அறிவிலிகாள், தத்தையைப் பெறலாமென்று வந்து இப்போது என் கையம்பினல் மடியப்போகின்றீர்களே! அந்தோ! நீங்கள் புறப்படுங்காலை வேறொரு பெண்ணை விரும்பிச் செல்கின்றீர்கள் என்று ஊடியிருக்கும் மனைவிமார்களின் ஊடலைத் தீர்ப்பார் யார்?" என வீரவுரைகள் கூறினன். காவலர் அக்காளையை நோக்கி, "பேதாய், உன் குலத்தார் உணவினைக்கூடச் சுருக்கி ஈட்டிய முதலுக்கும் இலாபத்துக்கும் கேடு வருவதாயின், இலாபத்தை விட்டு முதலைப் பேணுவர்; நீ அவ்வணிக குலத்தில் பிறந்து முதற்பொருளாகிய உன்னைக் காத்துக்கொள்ளாமல், இலாபப் பொருளாகிய தத்தையின் பொருட்டுப் போர் புரிந்து, முதற்பொருளையே இழக்கப் போகின்றாய்; இதனல் வணிக முறையைச் செவ்வனே நீ இன்னங் கற்றுக் கொள்ளவில்லையென அறிகிறோம்; இனியாவது இலாபப் பொருளாகிய தத்தையை விட்டு, முதற்பொருளாகிய உன் உடலைப் போற்றிக்கொள்வாயாக!" என்றனர். நம்பி, "பேதைகாள், தம் பண்டத்தைப் பிறருக்குக் கொடுத்து அவர் பொருள்களைப் பெறுதல் எம்மவர் இயல்பு; அங்ஙனமே யானும் என் கையம்பை நுங்கட்குக் கொடுத்துப் பண்டமாற்ருக நுங்கள் வீரத்தையும் புகழையும் பெற்றுக்கொள்ளப்போகிறேன்; வலியீராயின், அவற்றைப் பேணுமின்," என வில்லை வளைத்து அம்பு மாரியைப் பொழிந்தனன். அவர்களும் எதிர்த்துச் சிறிது நேரம் பொருது ஆற்ருராய், "தத்தையின் கண்ணம்பினும் இவன் கையம்பு மிகக் கொடிது!" எனச் சொல்லிக்கொண்டே புறங்காட்டியோடினர்கள்.

இங்ஙனம் மன்னர்களெல்லாம் ஓடி மறைந்த பின்னர்ச் சீவக சாமி போர்க்களத்துச் சுற்றிப் பார்த்துத் தன் படைகளில் காயம் பட்டவர்கட்கெல்லாம் தக்க மருத்துவஞ்செய்து தன் மனைக்குச் சென்று, தத்தை மொழியாளாகிய தத்தையை மணமுடித்துக் கொண்டு இனிது வாழ்ந்தனன்.

## 8. சுண்ணச் சோதனையும் யானை வென்றியும்

இவ்வாறு இராசமாபுரத்தில் சீவகசாமி இன்புற்றிருக்கும் காலத்து இளவேனிற்பருவம் வந்தது. அந்நகர மாந்தர்

கள் சோலை சென்று பூக்கொய்து புனலாடி இன்பம் நுகர்வான் வேண்டித் தம்மை அலங்கரித்து ஆடை அணிகலப் பெட்டிகளையும், மாலைகளையும், பிறவற்றையும் எடுத்துக்கொண்டு சிவிகைகளிலும், யானைகளிலும், குதிரைகளிலும் ஏறிப் பல வகை இயங்கள் ஒலிக்கச்சென்று, தளிர் அரும்பு மலர் காய் கனிகளால் நிறையப்பெற்று மேகமண்டலத்தைக் கிழித்து விறிட்டு நிற்குஞ் சோலை ஒன்றில் கூடாரங்களிட்டு அவற்றிலே தங்கிக் களிப்பு மிகக் காலம் போக்கினர். அவர்களுள் குணமாலை என்பாளும் சுரமஞ்சரி என்பாளும் ஒத்த நட்புடையவர்களாதலின், ஒரு தனிக் கூடாரம் அமைத்து, அதில் தங்கியிருந்தார்கள்.

சுண்ணச் சோதனை

குணமாலையின் சேடியாகிய மாலையென்பவள் தங்கள் தலைவி கொணர்ந்த சுண்ணத்தை (வாசனைப் பொடியை) எடுத்து வந்து அவ்விருவருக்கும் நடுவில் வைத்தாள். சுரமஞ்சரி அதனைப் பார்த்துக் குணமாலையை நோக்கி, "நங்காய், இதுவும் ஒரு சுண்ணமா! இதனைச் சுண்ணமென்று கருதி இங்குக் கொண்டு வந்ததுபற்றி யான் பெரிதும் வியக்கின்றேன்! என் வாசனைப் பொடிக்கு இஃது இணையாகுமா?" என்று இகழ்ச்சியுரை கூறினாள். குணமாலை, "பேதாய், என் பொடிக்கு இணை இவ்வுலகில் எதுவும் இல்லை," என்றனள்.

என்றலும், சுரமஞ்சரி சொல்லொணாச் சினங்கொண்டு, "நம் பொடிகளில் உயர்ந்தது எதுவென்பதைத் தெளிதற்கு அறிஞர்பால் அனுப்புவோம்; அவர்கள் நன்கு ஆராய்ந்து, இன்னது சிறந்தது எனக் கூறிய பின்னர், சிறப்பில்லாத பொடியினையுடையார் நீர் விளையாடலைக் கைவிட்டு அருகக் கடவுளுக்குக் கோடிப் பொன் கொடுக்க வேண்டும்," எனக் கூறினள். குணமாலையும் அதற்கு இசைந்தனள். பொடியின் உயர்வு தாழ்வு அறிந்து வருமாறு சுரமஞ்சரியின் தோழியாகிய கனக பதாகையும், குணமாலையின் தோழியாகிய மாலையும் அனுப்பப்பட்டனர். இருவருஞ் சென்று பல ஆடவர்களிடங் காட்ட, அன்னார் ஒருவாறு கூறினரேனும், "இவ்வாராய்ச்சியைப் பிழையின்றிச் செய்து முடிவு கூற வல்லுநன் சீவகன் ஒருவனேயாதலின், அவனிடம் இவற்றைக் காட்டிநும் ஐயந் தெளிமின்," என்றனர். அவர்கள் அவ்வாறே சென்று

நம்பியிடங் காட்ட, அவன் குணமாலையின் பொடியைச் சுட்டி, 'இவை நல்ல,' என்றான். பல பொருள்கள் சேர்ந்து இடிக்கப் பட்டிருத்தலாலே சீவகன், 'இவை' என்னும் பன்மைச் சொல்லாற் கூறினான். அதனையுணராத கனக பதாகை, "காளாய், மற்றவர் கள் பார்த்தும் நுகர்ந்தும் அருந்தியும் 'இரண்டும் நல்ல' என்றனர்; நீயோ, ஒன்றனையும் பாராது இங்ஙனம் கூறுகின்றனை; இவ்வாறு கூறின், நின்னை அனைவரும் 'அறிஞன்' என்று அறிவர் போலும்! நன்று நன்று! நீ நன்றாக இவற்றை ஆராய்ந்து, உயர்ந்தது இது வெனக் கூறவேண்டும்," என்றனள். சீவகன், "குணமாலையின் பொடி கோடை நாளில் இடிக்கப்பட்டது; ஆதலின், சிறந்தது. சுரமஞ்சரியின் பொடி மாரிகாலத்தில் இடிக்கப்பட்டதாதலின், அத்துணைச் சிறந்ததன்று," என்றனன்.

கனக பதாகை, "ஐய, ஒருவரை விரும்பிய காலத்து அவர் செய்யுந் தீயனவும் நல்லனவாகத் தோன்றும்; விரும்பாத காலத்து நல்லனவும் தீயனவாகத் தோன்றும்; ஆதலின், இன்னும் செவ்வ னம் சிந்தித்துத் தக்க சான்றினைக்காட்டின், யான் மகிழ்வுடன் ஒப்புக்கொள்வேன்; அன்றேல், நினது முடிவை நீதியோடுபட்ட முடிவு என்று கொள்ளேன்; அச்சான்றும் தேவர், மனிதர்களில் நின் கருத்தை மறுப்பார் ஒருவருமில்லையாகலின், அவர் நீங்கப் பறவைகள் அல்லது விலங்குகளாயிருக்க வேண்டும்," என்றனள்.

நம்பி உடனே வண்டுகள் உலாவுமிடத்தை அடைந்து, அவ் விரு பொடிகளையும் மேலே தூவினான். வண்டுகள் சுரமஞ்சரி யின் பொடியை இகழ்ந்து, குணமாலையின் பொடியை உண்டு களித்தன.

சீவகன், "மங்கைமீர், நுமது ஐயம் நீங்கிற்றா? இனியாவது தெளிந்து நும் தலைவியர்க்கு இதனை உணர்த்துமின்," என்றான். அவர்கள் சென்று சுரமஞ்சரிக்கும் குணமாலைக்கும் நிகழ்ந்தவற் றைக் கூறினார்கள். சுரமஞ்சரி அதைக் கேட்டு அளவற்ற ஆகு லங்கொண்டு, "இஞ்ஞான்று என் பொடியைப் பொருட்படுத்தாத சீவகன் பின்னர் என்னை மதிக்கும்படி கன்னி மாடத்திலிருந்து ஆடவரை அறவே வெறுத்துத் தவம் புரிவேன்!" என்று கூறி,

முன்னே தோற்றவர்க்குச் சொன்னவற்றை எல்லாம் செய்து விட்டு, குணமாலை எத்துணைச் சமாதானங் கூறியுங் கேளாது சென்று, தன் கன்னி மாடம் புக்கனள். அவள் செயலை அவளது வாட்டத்தினாலறிந்த தாயாகிய சுமதி என்பாள், தன் கணவனாகிய குபேர தத்தனுக்குத் தெரிவித்தனள். அவன் தன் புதல்வியின் விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டுக் கட்டியங்காரனிடஞ் சென்று, அவன் அநுமதி பெற்றுத் தன் மகள் இருக்குங் கன்னி மாடத் தெருவில் ஆடவர் நடவாவாறு செய்தான். சுரமஞ்சரி அதன்கண் இருந்து, தான் கருதியவாறே நோற்று வந்தனள். குணமாலை, "விளையாட்டே வினையாக முடிந்தது," என்று கருதிச் சுரமஞ்சரியின் பிரிவுக்காக வருந்தி நீராடச் சென்றனள்.

நாய்க்கு நல்லுபதேசம்

சோலை விளையாட்டில் அனைவரும் மகிழ்ந்திருக்குங்காலை, ஒரு பக்கம் அந்தணர்க்கு ஆக்கி வைத்திருந்த சோற்றில் ஒரு நாய் வந்து வாய் வைத்துவிட்டது. அதைக்கண்டு அடங்காச் சினங்கொண்ட மறையவர், "நாயே, என்ன காரியஞ் செய்தனை! இனி, நீ பிழைத்துப் போதல் யாங்ஙனம்?" எனக் கற்களையுந் தடிகளையுங் கொண்டு அதனைத் தாக்கித் துரத்தினர். அந்நாய் அஞ்சி ஓடி ஒரு குளத்தில் வீழ்ந்து நீந்திற்று; அங்கும் விடாது சென்று அக்கன்மனத்தார் அடித்து அதன் ஒரு காலை முறித்துக் குற்றுயிராக்கிவிட்டனர். அதனை வளர்த்த களிமகன் ஒருவன், கட்குடந்தாங்கிய தன் மனைவிமார் இருவருடனே ஆங்குச் சென்று, தன் நாயின் நிலை கண்டு, அதனை அடித்தவர்களை நோக்கி, "வன்னெஞ்சு படைத்த மதியிலீர், நீவிர் சிறிதும் அருளின்றி என் நாயைக் கொன்றீர்; விரைவில் அது பிழைக்குமாறு செய்க! இன்றேல், என் கைவன்மையை உங்களிடங் காட்டுவேன்! கட்குடத்தை (கண்ணையுடைய குடம் போன்ற தலையை) உடைப்பேன்!" என்று கூறிக் கலகம் விளைத்தான்.

இதனையறிந்த சீவகன் வல்லே ஆங்குச் சென்று அக்குடியனுக்கு நல்லன கூறி, அவன் சினத்தைப் போக்கி, அந்தணர் உற்ற வருத்தத்தையும் அகற்றி, அவ்விருபாலாரையும் அனுப்பிவிட்டு, இறக்குந் தறுவாயில் உள்ள நாயைப் பார்த்து, மனமிரங்கிக் கண்ணீர் விட்டு, "நாயே, யான் கூறும் மந்திரத்தை ஒரு மனப்பட்டுக்

கேட்பாயாயின், இக்கீழான நாயுடலை விட்டு மேலான தேவவுடலைப் பெறுவாய்,'' என்முன். நாய் தன் கண்களில் நீர் வடிய அச்சொற்களைக் கேட்டு, அவற்றிற்கு இசைந்தமையைத் தனது வாலாட்டத்தாற்காட்டியது. அதன் குறிப்பையுணர்ந்த சீவகன், உடனே அதன் காதின்கண் 'பஞ்சநமஸ்கார' மந்திரத்தை உபதேசித்தான். உடனே அந்த நாய் தனது வடிவம் நீங்கித்தேவ உடல் பெற்றது. அத்தேவன் போய்ச் சங்க வெண்மலை என்னும் வெள்ளி மலையில் 'சுதஞ்சணன்' என்னும் பெயருடைய தேவனாய இயக்கர்கட்கு இறைவனாய்ச் சந்திரோதயம் என்னும் நகரில் பரிவாரங்கள் பல சூழ வீற்றிருந்தான்.

இருந்தவன், "யான் இவ்வாறு உயர்நிலையை அடைதற்குக் காரணம் சீவகசாமி உளங்கனிந்து செவியின்கண் ஓதிய மந்திர மன்றோ! அவ்வுபகாரிக்கு என்னாற்செய்யத்தகுங் கைம்மாறு யாதுளது? அந்நண்பனைக் கண்டு எனது நன்றியறிவைக் காட்டி வருதலே அமையும்,'' எனக் கருதி, ஆங்கு வந்தனன். சீவகன் அவனைக் கண்டு, "நீ யாவன்?'' என வினவ, "ஐயனே, யான் இங்கு நாயாய் இருந்து நீ உபதேசித்த மந்திர வலியினாலே இவ்வுடல் பெற்று இயக்கர்களுக்குத் தலைவனாயினேன்; ஆதலின், நின்னைக் கண்டு போதற்கு வந்தேன்; கருணைக்கடலே, நீ செய்த உதவிக்கு எதிருதவி செய்வது என் கடமையன்றோ? இவ்வுலக முழுதையும் நின்னடியின்கீழ் ஆக்க வேண்டுமானாலும், அங்ஙனமே செய்வேன்; நின் விருப்பத்தை அறிந்து யான் அவ்வாறு நடக்கச் சித்தனாய் இருக்கின்றேன்,'' என்றான். அது கேட்ட நம்பி, "நண்ப, பகைவர்கள் வளைத்து எனக்கு இடர்புரியுங் காலத்து நின்னை யான் நினைப்பேன்; அது போது வந்து உதவி புரிவதே யான் வேண்டுவதாகும்,'' என்றான். சுதஞ்சணன் சீவகனைக் கட்டித் தழுவி, "என் ஆருயிர்த் துணைவ, யான் எப்பொழுதும் நின் நிழல்போல நின்னை விட்டு நீங்கேன்; நீ கூறியவாறே இடையூறு நேருங்கால் என்னை நினைப்பாயாக!'' என்று கூறி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு வானிற்பறந்து சென்றான்.

நம்பியும் தோழர்களும் நகர்க்குச் சென்றுகொண்டிருந்தார்கள். ஆடவரும் பெண்டிரும் நீர் விளையாடிக் கரையேறித்

தத்தம் வாகனங்களில் இவர்ந்து நகர்க்குச் சென்றனர். அங்ங னம் அனைவருஞ் செல்லுங்காலை, கட்டியங்காரனது 'அசனி வேகம்' என்னும் பட்டத்து யானை மதங் கொண்டு, கட்டுத்தறியை முறித்துக்கொண்டு வெளி யேறி, இடியேறு போலப் பிளிறிட்டு ஓடி வந்தது. அதனைக் கண்ட மாந்தரனைவரும் ஆதித்தனைக்கண்டு நாண்மீன்கள் மறைவது போலக் கடிதின் மறைந்தனர். நீராடிச் செல்லுங் குணமாலை அதற்கு எதிர்ப்பட, அது சினந்து அவள் சிவிகையை நோக்கிச் சென்றது. பல்லக்குத் தாங்குவோர் அவ்யானையைக் கண்ட அளவில் சிவிகையைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போயினர். யானை குணமாலையின்மேற்பாய்ந்தது. அவள் தோழியாகிய மாலையென்பாள், "யான் உயிரோடிருக்கும் வரையும் என் தலைவியைக் கொல்ல விடேன்! முன்னே யான் இதற்கு இரையா கின்றேன்; பின்னர் என் தலைவிமீது இது செல்வதற்குள் யாரே னும் ஒரு வீரமகன் வந்து இவளைக் காப்பாற்றுவான்," என்று கருதி, யானையின் சினத்திற்கு இலக்காகத் தான் முன்னே சென்றாள்.

**யானை வென்றி**

ஆங்குத் தோழரோடு சென்றுகொண்டிருந்த சீவகன், குண மாலையின் அபாயமான நிலையையும், மாலையென்பாள் இரண்டு கரங்களையும் தலையின்மேற்குவித்துக்கொண்டு, "இங்கு ஆடவர் யாருமில்லையோ?" என்று அரற்றி யானைக்கு எதிரே செல்வதையுங் கண்டனன். கண்டவன் மனம் பதறியது. "அந்தோ! அணங்கு ஒருத்தி அநியாயமாக இரையாவதோ! இங்ஙனம் ஒரு பெண் இறப்பதைக் கண்டும் அவளைக் காவாமல் சென்று உயிர் வாழ்தலி னும், சாதல் சிறந்ததன்றோ?" எனக்கருதி, தன் கழுத்தில் தொங்கிய மாலையைச் சுற்றி, கையில் அணிந்திருந்த பொற்கடகங் களை மேலேற்றி, கச்சையினாலே ஆடையை இறுக்கிக் கட்டிக் காற்றைப்போல ஒய்யெனச் சென்று, "மதங்கொண்ட களிறே, யாது செய்யத் துணிந்தாய்! என் பக்கம் திரும்பு," என்று அதட்டி, அது தன் துதிக்கையால் மாலையென்பாளை வளைத்துப் பிடிக்காம லிருக்கும்பொருட்டுத் தன் குண்டலங்களைக் கழற்றி அதன்மீது வீசி, அஃது அவளை விட்டுத் தன் பக்கந் திரும்பிய அளவில், மலை யின்மேல் மடங்கல் ஒன்று பாய்ந்தது போல அதன் மத்தகத்தின்

நடுவே பாய்ந்து கையாற்குத்தித் தந்தங்களிடையே நின்று கூற்றென ஆரவாரித்தான். அக்களிறு அவனைத் தன் கையால் வளைத்தது. அவன் அதற்கு அணுவளவும் அஞ்சாமல், "குணமாலையை அப்பாற்கொண்டு செல்லுங்கள்," எனக்கூறிக் கொண்டே தந்தங்களினிடையே நழுவிக் காலிற்குள் நுழைந்து கரந்து, பின் புறமாகப் போய்விட்டான். தன் இரு பாய்ச்சலும் பயன்படாமற்போனதைக் கண்ட யானை, மனமொடிந்து மதமொழிந்து வாட்டத்துடன் தன் இருப்பிடஞ்சென்றது. ஆண்டகையும் தோழர் ஐஞ்ஞூற்றுவருடனே தன் மனை போய்ச் சேர்ந்தான். குணமாலை தன் உயிரொத்த தோழியுடனே இல்லின் கட்புக்கனள்.

**குணமாலை மணமாலை சூட்டல்**

இங்ஙனம் உயிர் தப்பி வீடு சென்ற குணமாலை, "இன்று என்னை யானை வாயினின்றும் மீட்ட சீவகசாமிக்கே என் உடலும் உயிரும் உரியன," என்று எண்ணி வாட்டமுற்றிருந்தனள். அவள் தாயாகிய விநயமாலை, "புதல்வியின் வாட்டத்திற்குக் காரணம் என்ன?" என்று அவள் தோழியை வினவ, அவள், "யானை வாய்ப்பட்ட செய்தியைக் கூறின் அன்னை மிகவும் வருந்துவாள்," என்று கருதி, அதனை மறைத்து, "அன்னாய், இது விளையாட்டு மிகுதியால் நேர்ந்தது," என்று கூறினள். தாய் மகளைத் தழுவி, அன்பு கனிந்த மொழிகள் பலவற்றைக் கூறி, "நின் கிள்ளைக்குப் பாலமுது ஊட்டினேன்; நீ இல்லையென்று அஃது உண்ண மறுத்துவிட்டது; நீ விரைவிற்சென்று அதன் வருத்தத்தையும் பசியையும் போக்குவாயாக!" என்று புகன்று போயினள்.

குணமாலை தனது அருமைக் கிளிக்குப் பாலுணவு அளித்து, "ஆருயிர்க் கிள்ளாய், உன்னினும் எனக்கு உற்ற துணை யாருளர்? என்னுயிர் காத்த சீவக சாமிக்கு என் துன்பத்தை உணர்த்தி, அவர் என்னை மணந்துகொள்ளுமாறு செய்வையேல், எழுமை எழுபிறப்பும் அதனை மறவேன்!" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள். கிள்ளை, "அன்னாய், வருந்தற்க! யான் சென்று நினது கருத்தை நிறைவேற்றி வருகின்றேன்," எனச்சென்று சீவகனைக் கண்டது. சீவகனும் அப்போது குணமாலையை மணக்க வேண்டு

மென்ற எண்ணமுள்ளவனாய், அஃது ஆமாறு யாங்ஙனமென எண்ணி வருந்திக்கொண்டிருந்தான். கிளி அவனிடஞ் சென்று குணமாலை கூறிய செய்திகளைச் சொல்ல, அவன் தன் காதலை வெளிப்படுத்துஞ் செய்திகளைச் செப்பினான்.

தத்தை அவனது இசைவினை அவட்கு ஐயமின்றி உணர்த்துவதற்கு அவனிடம் ஓலை ஒன்றும் கணையாழியும் பெற்று, அவற்றை மறைத்து வைத்த தினைக்கதிரைத் தன் மூக்கிற்கொண்டு குணமாலையிடம் பறந்து வந்து கொடுத்தது. அவள் அதற்கு முகமன் பல கூறிப் பாலும் பழமும் அளித்துத் தன் வயிற்றிலணைத்துக் கொண்டு, நம்பி அனுப்பிய ஆழியை மறைத்து வைத்துவிட்டு, ஓலையைப் பன்முறை படித்துப்பார்த்து மனமகிழ்ந்திருந்தனள்.

இவ்வாறு இருக்குங்காலை ஒரு நாள் அவள் தோழி வந்து, "தாயே, நின் மாமன் மகனுக்கு நின்னை வாழ்க்கைத்துணையாக்க நின் தந்தையார் கருதியிருக்கின்றார்," என்றாள். அதனைக் கேட்ட குணமாலை, "தோழி, யானையினின்றும் என்னைக் காத்த வள்ளலுக்கே யான் உரியவள்; என் கருத்திற்கு மாறாக நடக்குமாயின், என் உயிரை இழந்துவிடுவேன்; இதனை என் தாயிடம் தெரிவிப்பாயாக!" என்றாள். அச்செய்தியைத் தோழி விநயமாலைக்குச் சொல்ல, அவள் தன் கணவனாகிய குபேரமித்திரனுக்குத் தெரிவித்தாள். அவன் மிகவும் மகிழ்ந்து, "நம் குணமாலைக்குத் தக்க மணமகன் சீவகசாமி ஒருவனே!" எனக் கூறிச் சில பெரியோர் மூலமாகக் கந்துக்கடனுக்குத் தன் கருத்தைத் தெரிவித்தான்.

அவன் மகிழ்ச்சியோடு அதற்கு இசையக் குணமாலை சீவகனுக்கு மணமாலை சூட்டினாள். சீவகன் தன் மனைவிமார்களுடன் இன்பமாய்க் காலங்கழித்தனன்.

நீர் விளையாட்டன்று சீவகனோடு செய்த போரில் தோல்வியுற்ற அசனி வேகம் என்னும் யானையானது வெட்கி, கரும்பந்துண்டும் கவளமுங் கொள்ளாமல், தந்தங்களிடையே கையைத் தொங்கவிட்டுக்கொண்டு சினத்தோடு நின்றது. அதனையறிந்த கட்டியங்காரன், நடந்த செய்தி அனைத்தையும் பாகனால் அறிந்தனன்.

**சுதஞ்சணன் சொல்லுறுதி**

அறிந்தவளவில் அவற்கு அடங்காக்கோபம் உண்டாகியது. உடனே அவன் தன் மைத்துனனுகிய மதனனென்பானை நோக்கி, "மதன, வேடர்களை வென்று பசுக்கூட்டத்தை மீட்டமையாலும், தத்தையின் மணங்கருதிய யாழ்ப்போரில் வெற்றி பெற்று எதிர்த்த அரசர்களைத் தோல்வியுறச்செய்தமையாலும் சீவகன் செருக்குற்று நம்முடனும் போர் செய்யக் கருதியே நம் களிற்றுக்கு இவ்வாறு துன்பம் விளைத்திருக்கின்றுன். அச்செட்டி மகன் ஆண்மையை இன்றே அகற்றுகின்றேன்! நீ படைகளுடன் கடிதிற்சென்று அவனைப் பிணித்து, என்முன் கொண்டு வருக!" என்று கட்டளை யிட்டான். இவ்வாணையை மேற்கொண்ட மதனன் முதலாய வீரர்கள், கூற்றுவன் தூதர் போலச் சென்று, அரியேறு ஒன்றினை நரிக்கூட்டம் வளைவது போல நம்பி மனையைச் சுற்றி வளைத்தார் கள். அது கண்ட சேடியர், குணமாலையுடனிருந்த சீவகற்குச் செய்தியையுணர்த்த, அவன் எரிபோல வெகுண்டு வெளியே வந்து, அவர்கள் வளைத்த குறிப்பினையோர்ந்து, போர்க்கோலங்கொண்டு, வில்லேந்தி, அம்புகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அவர்கள்பால் வந்து, "வந்தது எற்றுக்கு? கடிதிற்புகல்வீராக!" என்று இடி போல முழங்கினுன்.

அவர்கள், "ஐய, நீ அரசனது பட்டத்து யானையாகிய அசனி வேகத்தை அடக்கி, மன்னர்க்குரியனவெல்லாம் மேற் கொண்டு ஒழுகுதலாலே, எம் அரசன் சினந்து உன்னைக்கொண்டு வருமாறு பணித்தான்; அதனை நிறைவேற்றுதற்பொருட்டே இங்கு வந்தோம்," என்றுர்கள். அதனைக் கேட்ட சீவகன், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளைப் போலச் சினந்து, நந்தட்டனை நோக்கி, "வீர, தேரை அலங்கரிப்பாயாக! கட்டியங்காரன் காலம் முடிந்துவிட்டது போலும்! ஒரு கணத்தில் இவர்களைக் கால னுருக்கு அனுப்புகின்றேன்!" என்றுன். அவனும் அங்ஙனமே செய்ய முயன்றுன்.

அப்பொழுது கந்துக்கடன் புதல்வனது போர்க்கோலத்தைக் கண்டு, "மன்னனேடு பகைத்தால் தீங்கு நேரும்; இவனை அமை திப்படுத்தி அனுப்பினுல் அரசன் இவன் செய்தவற்றை நன்கு ஆராய்ந்து, இவன்மேல் தவறில்லையெனத் தெளிந்து, சினந்தணிந்து

மன்னித்துவிடுவான்," என்று தனக்குள் எண்ணிச் சீவகற்கு இதனைக் கூறப்புக்கனன். அதுபோது நம்பிக்கும் தன் ஆசிரியர் கூறிய 'இன்னும் ஓர் ஆண்டு கடந்த பின்னரே நீ பகையை வெல்ல வேண்டும்,' என்ற செய்தி நினைவிற்கு வந்தமையால், சிறிது சினந்தணிந்து நின்றான். கந்துக்கடனும் சுநந்தையும் அவனை நோக்கி, "எங்கள் குலக்கொழுந்தே, வேந்தர் ஆணைக்கு அடங்கி நடத்தலே மேன்மையைத் தருவதாகும்; நீ எங்கள் சொல்லைக் கேட்டு நடத்தலால், உலகம் உன்னைப் பழியாது," என்றனர்.

இருமுதுகுரவர் ஆணை கேட்ட நம்பி, போர் புரியுங் கருத்தை விடுத்து நின்றான். வேந்தன் வீரர் அவனை வளைத்துக் கொண்டு சென்றனர். சுநந்தை, "மகன் போர் செய்யக் கூடாது," எனத் தானே தடுத்து அனுப்பினாளெனினும், அன்பு மேலீட்டால் "நம்பிக்கு யாது விளையுமோ!" என உன்னி உளங் கலங்கி, "காளாய், சீவகசாமி, நீ அங்குப் போதியோ! போனால், என்ன தீங்கு விளையுமோ!" எனக் கதறிக் கண்ணீர் விட்டு அழுதனள்.

மணமகளாகிய குணமாலை, "என் ஆருயிர்க் காதலரே, எளியேன் உயிரைக் காக்க வேண்டுமென்ற பெருங்கருணையினாலல்லவோ அந்தக் கொடிய களிற்றினை அடக்கினீர்! அதனால் அன்றோ நுமக்கு இத்துன்பம் நேர்ந்தது! இதற்கு மூலகாரணம் யானன்றோ! கொடியேன் உயிர் இனி எதன்பொருட்டு இவ்வுலகத்தில் இருக்க வேண்டும்!" எனக் கதறிக் கதறிக் கண்ணீர் வடித்தாள். நெருப்பிற்பட்ட மாலை போலக் கருகி அழுகின்ற குணமாலையையும், அவள் காதலனாகிய சீவகனையுங் கண்டு நகரமக்கள் கொண்ட துன்பமோ, அளவிட முடியாது.

சீவகன், "கட்டியங்காரனால் எனக்கு ஒரு தீங்கும் வாராது; இன்னும் சின்னாட்களில் என் கைவாளுக்கு அவன் தலை இரையாகி, அது நிலத்தில் வீழ்ந்து கிடக்குங் காட்சியைக் காண்பீர்கள்; ஆதலின், என்பொருட்டு நீங்கள் இரங்கி அழவேண்டா," என அனைவர்க்கும் ஆறுதல் கூறி, அவ்வீரர் இடையே சிலம்பி நூலாற்கட்டப்பட்ட சிங்கம் போலச் சென்றனன்.

அவனைக் கொண்டு போதற்கு முன்னரே கட்டியங்கார னிடஞ் சென்ற கந்துக்கடன், பன்னிரு கோடிப் பசும்பொன்னை அவன்முன் காணிக்கையாக வைத்து வணங்கி, "கருணை மிக்க காவல, அசனி வேகம் அநியாயமாக அணங்கு ஒருத்தியைக் கொல்லச் சென்றது; அக்கொலை நேருமாயின், அஃது உனக்கே குறைவைத் தருவதாகும் என எண்ணியும், பெண் கொலையைக் கருதியும் சீவகன் அதனை அடக்கினான்; இதனை ஒரு குற்றமாக நீ கருதுவது அறமன்று," என்று கூறினன். அதற்குக் காவலன் காது கொடுக்கவில்லை. பின்னரும் கந்துக்கடன், "வேந்தே, என் புதல்வன் செய்தது குற்றமே ஆயினும், நீ அவனை மன்னித்தருள வேண்டும்," என வேண்டினான். அதற்கும் அவன் இசை யாமையை அவன் குறிப்பாலுணர்ந்து, "மன்ன, என் பொரு ளனைத்தையும் தருவேன்; நீ பிழை பொறுத்தருள வேண்டும்," என்று இரந்து வேண்டினன். கட்டியங்காரன் கண் சிவந்து தலை நிமிர்ந்து கந்துக்கடனைப் பார்த்து, "என் வேழத்தை வருத்திய அக் காளை மார்பில் அக்கரியின் கொம்பு பாயும்படி செய்தாலொழிய, என் சீற்றஞ் சிறுகாது; இனி நீ அவனைப்பற்றிச் சிறிதும் என் னிடஞ் செப்பாமல் நின் இல்லம் செல்வாயாக!" என்று கடுகடுத் துக் கூறினான்.

கந்துக்கடன் பின்னர் ஒன்றுஞ் சொல்லாமல் வேழமுண்ட விளங்கனி போன்று வெறுவியனாய் நின்று, முன்னே தனக்கு ஒரு முனிவர் கூறிய குறிப்புக்களை நினைத்து, "நம் சீவகசாமிக்கு யாதொரு தீங்கும் வாராது," என்ற உறுதியுடையவனாய்த் தன் வீடு சேர்ந்தனன். நாயகனோடு மகன் வருவானென்று எதிர் பார்த்து நின்ற சுநந்தை, கணவனை மட்டும் கண்டவளவில் ஓவென்று அரற்றி அழுதனள். கந்துக்கடன் அவளைத் தேற்றி, "மாதே, வருந்தற்க! நீ முன்னே சில புதல்வர்களைப் பெற்று, அவர்கள் இறந்தமையாலே வருந்தியிருக்குங் காலத்தில் ஒரு முனி வர் நம் மனைக்கு வந்து நம் உபசாரங்களை ஏற்று, நமது வருத் தத்தையுணர்ந்து, 'நீவிர் வருந்தற்க! உலகமனைத்தையும் ஆளத் தக்க ஒரு புதல்வனை அடைவீர். இளம்பருவத்தில் அவனைக் கொல்லக் கருதி அரசன் சிறைப்படுத்திச் செல்வான்; இயக்கன் ஒருவன் வந்து யாருமறியா வகை அவனைத் தூக்கிக்கொண்டு

போவான்; எட்டுத் திங்கள் கழிந்த பின்னர் அவன் வந்து தனது பகையை முடித்து, இந்நிலவுலகத்தை ஆள்வான்,' என்று கூறிச் சென்றனர் அல்லவா? ஆதலால், நமது தவப் புதல்வனுக்கு யாதொரு தீங்கும் நேராது,'' எனக் கூறினன். சுநந்தையும் குண மாலையும் இதனைக் கேட்டு மனந்தேறியிருந்தனர்.

இந்நிகழ்ச்சி இவ்வாறிருக்க, நம்பியின் தோழர்கள் நந்தட்ட னுல் செய்தியுணர்ந்து குணமாலையின் தந்தையாகிய குபேரமித்திர னேடும் நம்பியின் சிறை மீட்கக் கருதிப் போருக்கெழுந்தார்கள். தத்தையும் தனது மந்திர வலியால் தேவர்களைத் தியானித்து, அவர் களைத் துணைக்கொண்டு காதலன் சிறை மீட்கக் கருதினள். இவற்றையெல்லாம் உணர்ந்த நம்பி, "இவர் நம்மீதுள்ள அன்பி னுல் இங்ஙனஞ் செய்யத் துணிந்தனர்; இவர்கள் சிறை மீட்க நாம் உயிர் வாழ்தல் மானக் கேடாகும்; நாமே பகை முடித்தற்கு இது காலமும் அன்று; ஆதலின், நாம் வேறோருபாயத்தால் தப்பிப் போதலே தகுதியாகும்,'' என எண்ணித் தன் தோழனுகிய சுதஞ் சணனை நினைத்தான்.

உடனே அவ்வியக்கன் தன் ஊர்தியாகிய முகிலிலேறி அங்கு வந்து சேர்ந்து, தன் மாயையால் ஒரு மாறுதலை உண்டுபண்ணி னன். 'இஃது ஊழிக்காலமோ!' எனக் கண்டோர் நடுங்குமாறு பேரிருளும் பேரிடியும் பெருமின்னலும் பெருமழையும் உண்டா யின. அண்மையிலுள்ளாரையும் அறிய முடியாத அக்காரிருளில் ஒருவரும் அறியாமல் சீவகசாமியைத் தன் மார்போடு தழுவி எடுத்துக்கொண்டு வான் வழியே சென்றனன் சுதஞ்சணன். அவன் கொண்டுபோதலைத் தத்தைமட்டுங் கண்டு, "நம் காதலனை இனி எப்போது காண்பேம்!'' எனச் சிறிது கலங்கிப் பின் மனந் தேறி, "நன்மையே உண்டாவதாக!'' என வாழ்த்தி, பின் தன் வேண்டுகோளால் வந்த தெய்வங்களை வணங்கி, "எந்தையீர், நீவிர் போவிராக!'' என்று அனுப்பினள்.

மதனன் முதலியோர் சீவகனைக் காணுது மதி மயங்கி, "இறை வன் இதை உணரின் நமக்கு ஏதம் வரும்!'' என்று அஞ்சி, வழி யிற்சென்ற ஒருவனைப் பிடித்து அவன் உருத் தெரியாதவாறு வெட்டி எறிந்துவிட்டு, அரசனிடஞ் சென்று, "காவலர் பெரும,

சீவகனைக் கொண்டுவருங்கால் பெருமழையும் பேரிருளும் போந்தமையால், தப்பி ஓடிவிடுவானென்று கருதி, அவன் மார்பைப் பிளந்து சின்னபின்னமாக வெட்டியெறிந்துவிட்டோம்,'' எனக் கூறினர். கட்டியங்காரன், "சீவகனைக் கொல்லுதல் எளிதன்று; நீவிர் செய்தது நன்றே!'' என அவர்கட்கு வேண்டிய சிறப்புச் செய்து கவலையின்றி மகிழ்ந்திருந்தான்.

## 9. விட வென்றி

சீவகனைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு வான் வழியே சென்ற சுதஞ்சணன், தான் இருக்கும் மலையிலே கொண்டு போய்ச் சேர்த்து, ஏவலாளரால் அவனுக்கு மங்கள நீராட்டு முதலியன செய்வித்து, தன் தேவிமார்க்கு அவன் வரலாற்றினையும், அவன் தன் நாய்ப் பிறப்பைப் போக்கிய செய்தியையும் கூறினான். சீவகன் கட்டியங்காரனால் சிறைப்பட்ட போதும், சுதஞ்சணனால் விடுவிக்கப்பட்ட போதும் முறையே துன்பமும் மகிழ்ச்சியுமின்றி இரண்டையும் ஊழ்வினையென்றே கருதினான்.

சுதஞ்சணனும் சீவகனும்

இங்ஙனம் 'மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்துரவோன்' ஆகிய சீவகசாமி, சின்னாள் அங்குத் தங்கியிருந்து, பின்னர்ச் சுதஞ்சணனை நோக்கி, "நண்ப, யான் பற்பல மலைகளையும் காடுகளையும் தேசங்களையும் பார்க்கும் ஆவலுடையவனாயிருக்கிறேன்,'' என்று தேச சஞ்சாரத்தாலுளவாகும் நன்மைகள் அனைத்தையும் எடுத்துக் கூறினான்.

சுதஞ்சணன் அவன் செலவிற்கிசைந்து, செல்லும் வழிகளையும் அவ்வழிகளிலுள்ள விசேடங்களையும், ஆங்காங்குள்ள ஆபத்துக்களையும் எடுத்துக் கூறி, "இறுதியில் மத்திம தேசத்திற்சென்று தங்குவாயாக! அவ்வரசன் தன் மகளை நினக்கு மணஞ்செய்து கொடுப்பான்; நீ அவளோடு அங்கிருக்குங்காலத்து நந்தட்டன் வந்து உன்னைக் காண்பான்; நீ அவனுடன் சென்று பகை முடித்து நின் நாட்டைக் கைப்பற்றுவாய்; அதற்கு இன்னும் பன்னிரண்டு திங்களாகும்,'' என்று சொல்லி, அழகிய உடலைத்தரும் மந்திரமொன்றும், விஷங்களையும் நோய்களையும் போக்கும் மந்திரமொன்

றும், வேண்டிய வடிவமெடுக்கும் மந்திரமொன்றும் அந்நம்பிக்கு உபதேசித்து, அவனைத் தன் மார்பில் அணைத்து எடுத்துக்கொண்டு பூமியில் ஒரு சோலையில் கொண்டு வந்துவிட்டுப் போயினன்.

சீவகன் செலவு

நம்பி அச்சோலையைக் கடந்து சென்றான். அப்போது ஒரு வேடன் எதிர்ப்படவே, அவனது ஊண் முதலியவற்றை வினவி அறிந்து, அவற்கு நல்லுபதேசஞ்செய்து, ஊனுண்ணல், கொலை புரிதல் முதலிய பாவங்களினின்று அவனை நீக்கினான். பின்னர்ப் பல காவதங்கள் கடந்து சென்று, காட்டுத் தீயால் வளைக்கப்பட்டுத் துன்புறும் யானைத்திரள்களைக் கண்டு மனமிரங்கி, தனது மந்திர வலியால் மழை பெய்வித்து அந்நெருப்பை அணைத்து, அவ்வேழங்களைக் காப்பாற்றி, அரண பாதம் என்னும் மலையை அடைந்து, ஆண்டுள்ள இருடிகளை வணங்கி, அங்குள்ள கோயிலை அடைந்து, கடவுள் திருவடியில் பல மலர்களையிட்டு வழிபட்டு,

"இன்னாப் பிறவி யிகந்தோய்நீ; இணையி லின்பம் உடையோய்நீ;
மன்னா வுலக மறுத்தோய்நீ; வரம்பில் காட்சிக் கிறையோய்நீ;
பொன்னா ரிஞ்சிப் புகழ்வேந்தே! பொறியின் வேட்கைக் கடலழுந்தி
ஒன்னா வினையி னுழல்வேங்கள் உயப்போம் வண்ண முரையாயே."

என்றின்னோரன்ன மொழிகளாற்றுதித்துப் பின்னர் ஓர் இயக்கியால் விருந்து செய்யப்பெற்று, அம்மலைச் சாரலைக் கடந்து, பல்லவ நாடு போய்ச் சேர்ந்தான். சேர்ந்தவன், ஆங்கு நன்செயிற் களை பறித்து நின்ற இரண்டு மங்கையரை வழி கேட்டுக்கொண்டு அந்நாட்டின் தலை நகராகிய சந்திராபம் என்னுந் தலைநகரைச் சார்ந்தனன். சார்ந்த நம்பி, அந்நகரின் இறைவனாகிய தனபதியின் புதல்வன் உலோக பாலனோடு நட்புக்கொண்டு, அவன் ஏவலாளரால் உபசரிக்கப்பெற்று, தேசிகப்பாவையின் நிருத்தத்தைக் கண்டு மகிழ்ந்திருந்தான்.

விட வென்றி

இங்ஙனம் இருக்குங்காலை ஏவலாளன் ஒருவன் விரைந்தோடி வந்து சீவகனோடு மகிழ்ந்து அளவளாவிக்கொண்டிருக்கும் உலோக பாலனை நோக்கி, "புரவலர் புதல்வீர், நும் தங்கையைப் பாம்பு தீண்டிற்று," என்றான். அதனைக் கேட்ட உலோகபாலன் உளநடுங்கி, "ஐய, நீ இங்கு இருப்பாயாக!" என்று சீவகற்கு இன்மொழி கூறிப் பதுமை

என்னும் தங்கையிடம் வந்து, பல மருத்துவர்களைக்கொண்டு மணி மந்திர ஔடதங்களைப் பிரயோகித்தும் பயன்படவில்லை. உலோகபாலன், "இவ்விஷத்தைப்போக்கிப் பதுமையைப் பிழைக்கச்செய்தாற்கு இந்நாடும் பிறவும் உரியனவாதலோடு அந்நங்கையும் அவற்கே உரியவள்; இது தனபதி கட்டளை," என நகரெங்கும் முரசறைவித்தான். செய்தி அறிந்த மந்திரவாதியர் பலர் வந்து தாம் கற்ற அனைத்தும் காட்டியும், நங்கை நல்லுயிர் பெற்றாளில்லை; 'உயிர் உண்டோ, இல்லையோ!' எனும் ஐயத்திற்கிடமாகிவிட்டது.

இந்நிலையில் ஆங்கு வந்த சோதிடன் ஒருவன், "இந்நகர்க்குப் புதியனாய் வந்துள்ளான் ஒரு கட்டழகன்; அவனால் இவள் விஷம் நீங்கிப் பிழைப்பாள்," என்று கூறினன். அதனைக் கேட்ட அரசிளங்குமரன், "அந்தோ! இது வரையில் மறந்தேனே!" என்று ஒரு தூணில் ஓங்கித் தன் கையை அறைந்து, ஓர் ஏவலாளனை அழைத்து, "என்னுடன் சோலையிலிருந்த நம்பியை அழைத்துவா," எனக் கட்டளையிட்டான். அவன் வந்து சீவகற்குச் செய்தியை உணர்த்த, நம்பி ஆங்குச் சென்று பதுமையின் நிலையினைக் கண்டு, அவளைச் சூழ்ந்தழுதுகொண்டிருக்கும் மகளிரை நோக்கி, "இந் நங்கைக்கு உற்ற தீங்கென்ன?" என்று வினவினன். உலோகபாலன், "நண்ப, இவளை அரவந்தீண்டிற்று; நீ எல்லா விஞ்சைகளிலும் வல்லவனாதலின், இவள் விஷத்தைப் போக்கிப் பிழைப்பிக்க வேண்டும்," என இரந்து வேண்டினன்.

உடனே நம்பி அந்நங்கையை உற்று நோக்கி, "இவட்குச் சாக்காடு இல்லை; நீ வருந்தாதே!" என்று உலோகபாலற்குத் தேறுதல் கூறிவிட்டுப் பின்பு பாம்புக்கடியின் மரபுகளையும், கடித்த நேரமுதலியவற்றின் தன்மைகளையும் நன்கு ஆராய்ந்து, "இந் நஞ்சினை ஒரு நொடிப்பொழுதிற்போக்கி இம்மங்கை எழும்படி செய்கிறேன்; நீவிர் வருந்தற்க!" என அனைவர்க்கும் ஆறுதல் கூறி, ஒரு குவளை மலரை எடுத்து, அதில் தான் வல்ல மந்திரத்தை மூன்று உரு ஓதி, அதனைப் பதுமையின் தலையிலே அழுத்தி, மருங்கில் ஒதுங்கி நின்று இரண்டு உரு ஓதி, அவள் முகத்தை நேரே நோக்கினன். நோக்கவே, இரவியைக் கண்ட இருள் போல விஷம் நீங்கிற்று; பதுமை கண்களை விழித்துப் பார்த்தாள்; அனை

வரும் மகிழ்ந்து, அவட்கு மேலும் வேண்டுவன செய்து, சீவக சாமியைக் கொண்டாடினர். கண் விழித்த பதுமை, அக்கண்களால் நம்பியின் அழகாகிய அமிர்தைத் தேக்கெறிய உண்டு, "எற்கு உயிர் அளித்த இக்காளையையே மணப்பேன்!" என மனத்தில் உறுதி பூண்டாள். இவற்றையெல்லாம் உணர்ந்த தனபதி, சீவகனை அழைத்து, அவற்கு விருந்தளித்து, அவன் கற்ற கலைகளையெல்லாங் கேட்டறிந்து, "இவனை ஒத்தவர்கள் இந்நிலவுலகில் இருக்க மாட்டார்கள்," என்று கூறி, அவனைப் பாராட்டினுன். சீவகன் சின்னுள் அங்குத் தங்கியிருந்தனன்.

ஒரு நாள் தனபதி தன் அமைச்சனுகிய மதிதரனை நோக்கி, "மந்திரி, இங்கு வந்து நம் புதல்வனேடு நட்புக் கொண்டிருக்குங் காளை பதுமைக்கு உயிர் கொடுத்தான்; அவன் உத்தம இலக்கணங்களையெல்லாம் உற்று நோக்கின், இவ்வுலகமனைத்தையும் கட்டி ஒரு குடைக்கீழ் ஆள்வானென்று கருத இடந்தருகிறது; ஆதலின், அவற்கே பதுமையைக் கொடுக்கக் கருதுகின்றேன்; நின் கருத்தென்னை?" என்று வினவ, அம்மதிதரன், "காவல, யானுமுன்னரே அங்ஙனம் எண்ணினேன்," என்று அரசன் கட்டளை பெற்று, சீவகனிடஞ் சென்று இச்செய்தியையுணர்த்தி, அவன் இசைவு பெற்று, அரசனிடம் வந்து கூறினுன்.

**பதுமையின் புது மணம்**

தனபதியும், அவன் மனைவி திலோத்தமையும், உலோகபாலனுங் கூடி, "நாம் முரசறைவித்தபடி நம் பதுமையை அவள் விடந் தீர்த்து உயிரளித்த அக்காளைக்குக் கொடுத்தலே சரி," எனக் கருதி நகரத்தை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டனர். அங்ஙனமே நகரம் ஒப்பனை செய்யப் பெற்று மணத்திற்கு வேண்டுவனவும் அமைக்கப்பெற்றன. கணி பார்த்துச் சொன்ன நன்னுளில் பதுமை போன்ற பதுமைக்கும் அவட்குச் சீவன் தந்த சீவகனுக்கும் செவ்வனே திருமணம் நடந்தேறியது.

மணமுடிந்த பின் நம்பி அந்நங்கையுடன் ஆங்கு அணிவன அணிந்தும், பூசுவன பூசியும், உண்பன உண்டும், கேட்பன கேட்டும், நோக்குவன நோக்கியும் இரண்டு திங்கள்வரை மகிழ்ச்சியோடு காலங்கழித்தான். பின்னர் மேல் நடக்க வேண்டுவன

வற்றைக் கருதி அந்நகரை விட்டுப் போகக் கருதி, நள்ளிரவில் பதுமை அறியாவாறு எழுந்து வெளியே போய்விட்டான்.

அவன் போன சிறிது நேரத்திற்குள் பதுமை கண் விழித்துப் பார்த்துத் தன் காதலனைக் காணுமல், அவன் இருப்பிடங்களெல்லாந் தேடினுள்; காணவில்லை; கிளியை நோக்கிக் "கிள்ளாய், நீ என்மீது அன்புடையை போல நடிப்பாயே! என் நாயகர் சென்ற இடத்தை நவிலாயோ?" என்றுள்; பூவையை நோக்கிப் "பூவையே, 'என் பாவை வருந்துமாறு நீ படுக்கையினின்று நீங்கிப் போதல் பாவம்,' என்று கூறவில்லையே! நீ மிகவுங் கொடியை!" என்றுள்; அன்னத்தைப் பார்த்து, "மடவன்னமே, 'நீ தனியே செல்லுதல் தக்கதன்று! நங்கையோடு செல்க!' என அவர்க்கு நவின்றிலையே! நீ வாழ்வாயாக!" என வைதனள்; மயிலைக் கண்ணுற்று, "மூடாத கண்களை மெய்யெங்கும் உடையாய், ஐயர் சென்றவிடத்தை நீ உண்மையாக அறிவையே! அதனை அறைக!" என்று வணங்கினுள்; விளக்கை நோக்கி, "நீ எப்பொருள்களையும் காட்டுந் தன்மையுடையாய்; நீ செம்மையுடையை; தூய்மையுடையை; என் உயிர் ஒளித்திருக்குமிடத்தை, விளக்கே, நீ விளக்காய்," என வேண்டினுள். வண்டினத்தை நோக்கி, "வண்டுகாள், யான் நும் போலப் பிரியாதிருந்தேனேயன்றித் தனித்துறைதலை அறியேன்; அவர் வெறுப்பனவற்றைச் செய்தறியேன்; ஆதலால், அவர் உறையுமிடத்தை விரைவில் மொழிமின்; உயிர் போய்க்கொண்டேயிருக்கின்றதாதலின், காலந்தாழ்த்து மொழிவதிற்பயனில்லை," எனக் கதறினுள். "செய்குன்றே, நீரே, வழையே, குழையே, பொழிலே, மதியே, என் காதலர் சென்ற இடத்தைச் சாற்றீரோ?" என்றுள். நாயகனைக் குறித்து, "தண்ணளியுடையீர், நும் மாமனும் மைத்துனனும் தத்துவத்தை ஆராயும் அறிவைப் பெறுவதற்கு அவாவ, அவர்க்கு அறமே மொழிகின்ற நீர் என் திறத்து அதனைக் காட்டுகின்றிலை; அதனுல், 'சொல்லுதல் யார்க்கு மெளிய; அரியவாம் சொல்லியவண்ணஞ் செயல்,' என்னும் பொய்யா மொழிக்கு மெய்யான இலக்காயினீர்," என்று இங்ஙனம் பலபடக் கூறிக் கீழே வீழ்ந்து புரண்டு அழுதனள். இங்ஙனம் மெழுகாற்செய்த பாவை ஒன்று அனலிற்பட்டாற்போல உருகி அழுங்காலத்துத் தோழி வந்து பல காரணங்கூறி ஆற்றுவித்தாள்.

**கன்னியின் கலக்கம்**

பொழுது புலர்ந்ததும் தாயாகிய திலோத்தமை இதனை அறிந்து, மனம் வருந்தி, மகளைக் கண்டு ஆறுதல் கூறி, "கோதாய், அவர் தாம் பிரியுங் குறிப்பினை எவ்வகையாலேனும் நினக்கு உணர்த்தினரா?" எனக் கேட்டனள். பதுமை, "அன்னாய், நெருநற்போது அவர் என்னை நோக்கி, "கற்பிற்சிறந்த பொற்பாவாய், போர்த்தொழிலையும் பொருளீட்டலையுங் கருதி ஆடவர் தம் ஆருயிரனைய மனைவியரைப் பிரிதல் இயல்பு; அதற்காக இறந்துபடாமல் நாயகர் வருந்துணையும் நங்கையர் ஆற்றியிருத்தலும் இயல்பாகும்," எனக் கழறினார்; அதனை ஐயுறாது பாவியேன் இருந்தேன்!" எனப் புடைபடக் கவன்றாள். அதுகேட்ட நற்றாய், "நங்காய், அவர் கூறியதிலிருந்து ஏதோ ஓர் இன்றியமையா வினையை மேற்கொண்டுதான் அவர் சென்றிருக்கின்றார் என்பது வெள்ளிடை விலங்கலெனத் தெரியவில்லையா? பேதாய், இதனையறிந்தும் நீ வருந்துவது தக்கதன்று!" என மொழிந்து, தன் தவப்புதல்வியை ஆற்றுவித்தாள்.

இச்செய்தியை அறிந்த தனபதியும் உலோகபாலனும் தாங்கொணாத் துன்பங்கொண்டு, தம் ஏவலாளரைக் கூய், "அவரை அனைத்திடங்களிலுந் தேடிக் கண்டு வாரும்," என்று போக்கினர். சீவகன் தன்னைத் தேடி வருவார் அறியாதபடி தன் அணி முதலியவற்றை வழிப்போக்கன் ஒருவனுக்கு நல்கித் தான் வேற்று வடிவெடுத்துச் சென்றனன். தேடிச் சென்றவர் அவனைக் கண்டு, "காளாய், நின் போலவே இளமையும் வடிவுமெய்தினான் ஒரு விடலையை ஈங்குக் கண்டதுண்டேற் கூறுக!" என்றனர். சீவகன், தான் கூறுவதை அவர் மெய்யென்று உணர்ந்து போதற்குச் சோதிடத்தாலே கூறுவான் போல நடித்து, "ஐயன்மீர், நீர் தேடி வந்த காளையை ஒன்பதாந் திங்களிற்றான் காண்பீர்; அதற்குமுன் காணீர். யான் கூறியது பொய்யுரையன்று. இதனை நும் புரவலற்கும் அவன் புதல்வற்கும் புகல்வீராக!" என்று கூறிப் போயினன்.

## 10. கேமசரி மணம்

அங்ஙனஞ் சென்ற நம்பி, சில காவதங் கடந்து, ஒரு மலையிலேறி, அங்குள்ள அருகக் கடவுளை வணங்கிக் கீழேயிறங்கி,

தாபதர் தெளிவு

வனத்தில் மனைவியருடன் இருந்து விரத முதலியவற்றை மேற்கொண்டொழுகுந் தாபதர் பலரைக் கண்டனன். அவர்கள் அவனைக் கண்டவுடன் அகமகிழ்ந்து, வள்ளிக் கிழங்கையும் பல கனிகளையும் கொடுத்து உபசரித்து, அவன் கலைகளனைத்தையுங் கற்றவன் என்பதை அவன் வார்த்தையால் அறிந்து, தம் கொள்கைகளிற்சிலவற்றை அவனிடம் கூறினர். அவற்றைக் கேட்ட நம்பி, “இருடிகாள், நும் கொள்கை நேரியதன்று; கல்லைக் கழுத்திற்கட்டிக்கொண்டு ஒருவன் கடலை நீந்துதல் கூடுமாயின், மனைவியருடனிருந்து விடு பேற்றையடையலாம்; வீட்டினை விரும்பிச் சடை வளர்ப்பதாலும், கல்லாடை அணிவதாலும், திருவோடு ஏந்தலாலும், ஒரே அங்கியைத் தரிப்பதாலும் பயனில்லை; இவையனைத்தாலும் பிறவியைப் போக்க இயலாதெனத் தத்துவமுணர்ந்தோர் கூறுவர்,” என்றான். “நம்பி, எங்கள் நேரிய வழியை நீ மறுக்குமாறு யாங்ஙனம்? அதனை விளங்கக் கூறுக!” என்றனர் முனிவர். சீவகசாமி, “அந்தோ! தாபதர்களே, நீங்கள் சிற்றின்பங்களை நுகர்ந்து கொண்டே உறியிற்றொங்கினால் தீவினையொழியும் எனக் கருதுகின்றீர்கள்; இதனினும் அறியாமை வேறு யாதுளது? இதனால் நற்கதி கிடைப்பதாயிருப்பின், தம் வயிறாரக் கனிகளை உட்கொண்டு மரங்களில் தொங்கும் வௌவால்களும் முத்தியை அடையலாமன்றோ? அன்றி, ‘அல்லியரிசியும் புல்லரிசியுமாய இவற்றாலாகிய கஞ்சியை அருந்தி, ஐந்து நெருப்பினடுவே நின்று நோற்பின் இதனைப் பெறலாம்,’ எனக் கருதின், கொடிய வேனிற்காலத்தில் கற்களையுண்டு பாலை வனத்தில் உலாவும் புறாக்களுக்கும் அவ்விடு கிடைக்கலாமல்லவா? இதுவன்றி, ‘சடையை வளர்த்து உடம்பை வாட்டி நீரில் மூழ்கி நிலத்திற் சேர்ந்திருப்பேமானால் வினை கழிந்து வீடு பெறுவோம்,’ எனின், காட்டின்கண் தங்கள் உடல்முற்றும் உரோமங்கள் வளரப்பெற்று நீரில் மூழ்கி நிலத்திற்கிடந்து புரளும் கரடிகளுக்கும் அது வாய்க்குமல்லவா? ‘அன்று அன்று! சிறு குடிலிலிருந்து தரையிற்படுப்பதால் தீவினையைப் போக்குகின்றோம்,’ எனின், அவற்றை இயல்பாகவேயுடைய வேடர்கட்கும் அது கிடைக்குமல்லவா? இன்னுங் கேட்பீராக: தூய ஆடையிற் பட்ட குருதிக் கறையை அக்கறையினாலே போக்க முடியாது; அதுபோலக் குடும்ப பந்தத்தால் வந்த இத்தீய வினையை அச்சமு

சாரக் கட்டாலே போக்குதல் இயலாது; ஆடை எரிந்து போமென அஞ்சிய ஒருவன், அதனை எரிக்கும் நெருப்பினை அவ்வாடையுட் பொதிந்து வைப்பானே! அது போல, குடும்ப பந்தம் நீங்கு செய்யுமென்று அஞ்சிக் காட்டிற்கு வந்த நீவிர், இங்கும் மனைவி மார்களை அழைத்து வரலாமோ? இவற்றையெல்லாம் நீவிரே நன்றாக எண்ணிப் பார்மின்; இவற்றாலெல்லாம் ஒரு போதும் நற் கதியுண்டாகாது; ஆக்கை நிலையில்லாதது; இஃது இருக்கும் போழ்தே பிறவித் துன்பத்தைப் போக்கி வீட்டின்பத்தை ஆக்கிக் கொள்ளக் கருதின், உடனே மெய்த்துறவு பூண்டு நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கமாகிய மூன்றையும் பெற வேண்டும்; இம்மூன்றையும் பெற்றாலன்றி, மேற்கதி சேறல் இயலாது. நன் ஞானமாவது, உண்மையை உணர்தல்; நற்காட்சியாவது, அங்ஙன மறிந்த பொருளை நிச்சயித்துத் தெளிதல்; நல்லொழுக்கமாவது, ஐம் பொறிகளையும் ஐம்புலன்கள்மேற்செல்ல விடாது ஒழுகுதலாகும். இம்மூன்றும் ஒருவனிடத்தே பொருந்தினால், அவன் இரு வினையும் கெடுதல் ஒருதலை," என்று நல்லுபதேசஞ் செய்தான்.

இவற்றைக் கேட்ட அம்மாதவர், "ஐயனே, இன்று உன்னால் அரிய நெறியினை அறிந்தோம்!" என்று அந்நம்பியைப் பாராட்டி, அக்கணமே மெய்த்துறவிற் சிந்தை வைப்பாராயினர். நம்பி அன் றிரவு அங்குத் தங்கி, மறுநாட்காலையில் அம்முனிவர் வழி காட்ட அவ்வனத்தை நீங்கி, வளம் பொருந்திய தக்க நாட்டை அடைந் தான்.

அந்நாட்டையடைந்த நம்பி, நாட்டு வளங்களையெல்லாம் கண்டு களித்து, நரபதி தேவன் என்பவனால் ஆளப்படுவதாகிய

**கேமசரியின் மணம்**

கேமமாபுரம் என்னும் நகரத்தை அடைந்து, அங்குள்ள ஓர் ஆலமரத்தின் நிழலிலமர்ந்து, கடவுள் மந்திரத் தைச் செபித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு இருந் தான். இவன் இங்ஙனமிருக்க, அந்நகரத்தில் அரசனையொத்த திருவினையுடைய சுபத்திரன் என்னும் வணிகனொருவன் உளன். அவன் மனைவி நிப்புவி என்பாள். அவர்கள் அருந்தவப் புதல்வி கேமசரி என்பவள். அவள் பிறந்த ஞான்று சோதிடனொருவன் வந்து, "இந்நங்கை தன் மங்கைப் பருவத்தில் எவனைக் கண்டு நாணுகின்றாளோ, அவன்றான் இவள் கணவனாவான்," என்று

கூறிப் போயினன். அவள் மங்கைப் பருவமடைந்தது முதல் ஒவ்வொரு நாளும் அந்த ஊருக்குப் புதியவர்களாய் வரும் இளைஞர்களை அழைத்துக்கொண்டுபோய்ச் சுபத்திரன் தன் வீட்டில் விருந்து செய்வான்; அன்றும் வழக்கம்போல நகரத்திற் புதியவர்களாய் வந்தவர்கள் தங்கும் இடங்களையெல்லாம் பார்த்துக் கொண்டு வருங்கால் ஆலமரத்து நிழலில் மன்மதன் உருப்பெற்று வந்தாற்போல விளங்கும் காளையைக் கண்டான்; "கண் படைத்த பயன் கை கூடினது இன்றுதான்!" என மனமகிழ்ந்து, அந்நம்பியோடு வார்த்தையாடி நட்புப் பூண்டு, அவனைத் தேரிலேற்றிக் கொண்டு தன் மனைக்குட்புகுந்தான்.

அதுகாலை கேமசரி என்பாள் தன் வீணையை மீட்டி அழகிய குரலால் ஆண்டவனைப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பாட்டினை நுகர்ந்த அவள் தாய் அகமகிழ்ந்து, "என் அருமைச் செல்வி இப்பொழுது ஒரு நாயகனை அடைய வேண்டும்," என ஆண்டவனடியைத் தொழுதாள். அந்நிலையில் அவள் கருத்துப்படியே சீவகனும் சுபத்திரனும் அங்குச் சென்றார்கள். சீவகனைக் கண்டதும் கேமசரி பெரிதும் நாணுற்றாள். அது கண்ட அனைவரும், "இவனே இவட்கு நாயகன்," என்று அந்நம்பியைக் கொண்டாடினர். சுபத்திரன் அவற்கு அறுசுவையுண்டி அளித்தான். நம்பி அந்நல்லுணவுகளை உண்டு, அடைக்காய் அருந்தி, அகமகிழ்ந்திருக்குங்காலை, சுபத்திரன் தன் கருத்தைச் சீவகற்கு அறிவித்தான். அவன் அதற்கு இசையவே, கேமசரிக்கும் சீவகற்கும் செவ்வனே திருமணம் நடந்தது.

அன்று முதல் நம்பியும் நங்கையும் பல இன்பங்களை நுகர்ந்து வந்தனர். இங்ஙனம் இரண்டு திங்களாயின. நம்பிக்கு மேல் நடக்க வேண்டிய செயல்கள் ஞாபகத்திற்கு வந்தன. அன்றிரவு பிரிந்து போதலை உட்கொண்டு மாலைப் பொழுதிலே சோலையிற்காதலியுடன் களித்திருக்குங்கால் அங்கே வந்த ஆண் வண்டு ஒன்றை நோக்கி, "வண்டே, நீ இங்குத் தேனுண்ண வந்த போது நின் பிரிவு பெண் வண்டிற்குத் துன்பந்தருவதாயிருப்பினும், அது, 'யான் இறப்பின் என் துணையும் இறக்கும்; யான் உயிரோடிருப்பின், அது தன் தொழில் முடித்துக்கொண்டு விரைவில் மீளும்,' என்பதையே கருதி

நம்பியின் பிரிவு

உயிரோடு ஆற்றியிருக்குமன்றே? அது நல்லறிவுடையதாதலின், வாழ்வதாக!" என்றான். கேமசரி அதன் உட்பொருளை ஆராய்ந்து அறிந்துகொள்ளவில்லை. பின்னர் இருவரும் தம் மாளிகை போய்ச் சேர்ந்தனர். அன்றிரவு சீவகன் தான் கருதிய வண்ணமே கேமசரி அறியாவாறு பிரிந்து போயினன்.

அவன் அங்ஙனம் செல்ல, நங்கை, நம்பி தன்னைப் பிரிந்து போதல் போலக் கனவு கண்டு பொருக்கென எழுந்தாள்; எழுந்தவள், நாயகனைக் காணாது பலவிடங்களிற்றேடினள். முதல் நாள் மாலையில் சோலையில் வண்டை நோக்கி அவன் சொன்னது நினைவிற்கு வந்தது. "ஆ! மதி மோசம் போனேனே!" என்று கீழே வீழ்ந்து புரண்டழுதனள்; வெண்ணெயாற்செய்த பாவை வெயிலெதிர்ப்பட்டாற்போல மனம் வெதுப்பியுருகினாள்.

விடிந்தவுடனே இஃதுணர்ந்த தாயாகிய நிப்புதியென்பாள் வந்து, நடந்த செய்தி அனைத்தும் தெரிந்து, தன் புதல்விக்குப் பல நீதிகள் புகன்று, ஊழ் வினையின் வன்மையையும் உரைத்துத் தேற்றினாள்; தேற்றியும், கேமசரி காதலனைக் காண வேண்டுமென்னும் அவா அகலாதவளாயிருந்தாள்.

வெளியே சென்ற சீவகன் ஊரைக் கடந்தவுடன் விடியற்கால நிலவின் உதவியால் வழியை அறிந்து சென்றான்; பொழுது புலர்ந்தவுடன் தன் அணிகளையெல்லாம் கழற்றி வழிப்போக்கன் ஒருவனுக்குக் கொடுத்தான். அவன் நம்பியை நோக்கி, "ஐயா, நீர் எவ்வூரிலே இருப்பவர்? எவ்வூருக்கு வந்தீர்? நுமக்கு மனைவியர் எத்தனை பேர்? எத்துணைப் புதல்வர் உளர்? அவருள் ஒழுக்கமுடையாரும் அஃதில்லாருமாகியவரின் தனித்தனி சங்கியை என்ன?" என்று கேட்டனன். நம்பி தனது உணர்வினாலே உயர்ந்த கருத்தை அவற்கு அறிவுறுத்துவான் வேண்டி, "நண்ப, யான் இது போது இவ்வுடம்பிலேயுள்ளவன்; இவ்வுடலை எடுத்தற்கே இங்கு வந்தேன்; என் காதலியர் நால்வர்; அந்நால்வரது வயிற்றிலும் பிறந்த ஒழுக்கமுடைய புதல்வன் ஒருவனேயுளன்; ஒழுக்கமில்லாத பிள்ளை இல்லை," என்றான்.

**வழிப்போக்கற்கு அறிவுரை**

அவன் இவற்றைக் கேட்டு, "இஃதென்ன! இவன் கூறுபவை இறும்பூதை விளைக்கின்றனவே!" என்று தன்னுட்கருதிச் சிரித்து,

பின்னரும், "இவனை நோக்கின் அறிவற்றவனாக எண்ணுதற்கில்லை; பெரிய அறிவாளியாய்க் காணப்படுகின்றான்," என்று எண்ணி, "ஐயன்மீர், நீர் கூறியதை யான் செவ்வனே உணர்ந்துகொள்ள முடியாதவனாய் இருக்கிறேன்; நால்வர் வயிற்றில் ஒரு புதல்வன் பிறத்தல் எவ்வாறு இயலும்? விரித்துரைக்க வேண்டுகிறேன்," என்றனன். என்றாற்கு நம்பி, "தோழ, கேட்பாயாக: தானம், சீலம், தேவபூசனை, தவம் என்ற நான்குமே மேற்கூறிய மனைவியர்; இந்நால்வர் வயிற்றிற்பிறந்த நல்வினையே வீடு பேற்றை அளிக்க வல்ல நற்புதல்வன்; அம்மதலையைப் பெற்றோரைத்தான் அறிவுடையார் மகப்பெற்றாரெனக் கூறுவார்; அல்லாதார் புத்திரப்பேறற்றவராவர்; அவர்கள் பெற்ற மற்றப் பிள்ளைகளும் பிள்ளைகளாகமாட்டார்கள்; தானமுதலியவற்றின் விளக்கங்களையுங் கூறுகிறேன்; கேள்: புலனடக்கமுள்ள பெரியார்க்கு அறத்தாறு ஈட்டிய பொருளை அகமகிழ்ந்து கொடுத்தலே தானமாகும். கள், ஊன் முதலியவற்றை உண்ணாது விடுதலே சீலமாகும்; இறைவன் திருவடிகளை மலர் முதலியன கொண்டு மனமொருங்கி வழிபடலே பூசனையாகும்; நிறைமதி நாள் முதலிய நன்னாட்களில் பட்டினியிருந்து உடம்பை வாட்டி ஒழுக்கத்தை விடாது காத்தலே தவமாகும். இந்நான்கும் மனைவியராக, நல்வினையென்னும் புதல்வனை அடைந்தவர், தேவ உலகஞ்சென்று இந்திரபதவி பெற்று இன்ப நுகர்ந்து, பின்பு பூவுலகத்திற்பிறந்து சக்கரவர்த்திகளாய் இந்நிலவுலகம் முழுதையும் ஆண்டு, ஆண்டவனுக்கு வழிபாடுகளாற்றி, இறுதியில் வீடு பெறுவாரென்பது ஒருதலை; கிளைஞர் வாழும் ஊருக்குச் செல்வதாயிருப்பினும், மாந்தர் பொதிசோறு கொண்டு செல்வர்; அங்ஙனமிருக்க, நமர் யாருமில்லாத ஊருக்கு நமனார் வந்து அழைத்துச் செல்லுங்காலத்து உதவுமாறு நல்வினை அல்லது அறமாகிய தோட்கோப்பு ஈட்டி வைத்துக்கொள்ள வேண்டாவா? அங்ஙனம் தேடாதார் மதியீனத்தை என்னென்று சொல்வது! உலக வாழ்க்கையே உறுதியுடையதென்று எண்ணிப் பொருள் தேடி முடிப்புக் கட்டி வைத்தவர்கள் தங்கட்கு மரணங் குறுகி வாயடங்கிய காலத்து அப்பொருளால் ஏதோ ஓர் அறஞ் செய்யக் கருதிக் கைகுவித்து அப்பொருள் முடிப்பைக் கொண்டு வருமாறு சாடை காட்ட, அவர் மனைவியர், "அந்தோ! பொருள் போய்விடுமே!" என்று கருதி, அவர் கேட்பதை மற்றவர்க்கு

வேறென்றாக மெய்ப்பித்துக் காட்ட வேண்டி, "ஐயோ! விளம் பழங் கேட்கின்றீர்களே! உங்கட்கு இப்போது விக்கல் மேற்பட் டிருப்பதால் அதனை உண்ணலாகாதே! என் செய்வது!" எனக் கூறியும், இங்ஙனமே அவ்வறிவிலிகள் கேட்டவற்றிற்கெல்லாம் பொருந்துமாறு வெவ்வேறு பொருள் கற்பித்தும் அவர்கள் சாகும் வரையிற்சாதிப்பார்கள்; இக்கதி நேருதற்கு முன்னே மக்கள் இயன்றவரை அறஞ்செய்யவேண்டும்; இவ்விழி குணங்களையுடை யார்க்கு ஒரு காலமும் நற்கதி கிட்டாது; இன்னுஞ்சிலர் புலாலை விரும்பி உயிர்களைக் கொன்று அவற்றின் உடலைத் தின்கின்றனர்; அங்ஙனந் தின்று கொழுத்த அவருடம்பைப் பின்னர் நாயும் நரியுங் கழுகுந்தின்னும்; புலாலுண்ணாமையாகிய அறத்தையும் கொல் லாமையாகிய அறத்தையும் அவ்வோட்டைச்செவியர்க்குக் கூறினு லும் அவர் கேளார்; இவ்வறங்களைக் கடைப்பிடித்தொழுகு வோர்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் வாரா," என்றின்னோ ரன்ன பல அறவுரைகளைக் கூறினான். வழிப்போக்கன் அவனை வலம் வந்து வணங்கி மகிழ்ந்து, "ஐயன்மீர், யான் பிறந்த பயனை இன்றே பெற்றேன்!" என்று பாராட்டிச் சென்றனன்.

## 11. வில்லாசிரியன்

நம்பி இவ்வாறு வழிப் போக்கனுக்கு நல்லுரை நவின்று அவனை அனுப்பிய பின் வழி நடந்து மருத நிலங்களின் வளங்களைக் கண்ணுற்றுக் களித்து, குறிஞ்சி நிலத்தைக் குறுகி, அந்நிலத்தின் வனப்புக்களைப் பார்த்து மகிழ்ந்து, முல்லை நிலத்தைச் சார்ந்து அதன் அழகை நோக்கி வியந்து, அதனைக் கடந்து எதிரே தோன்றிய வனகிரி என்னும் மலையிலேறி ஆங்குள்ள ஆண்டவனடியை அன்பு கனியத் தொழுது மனமுருகி வழுத்திப் பின்னர் அவ்விடத்தினின்று நீங்கி மத்திம தேசத்தை அடைந்தான்.

**ஏமமாபுரம் எய்தல்**

அடைந்தவன் அந்நாட்டின் கண் கொள்ளா வளப்பங்களைக் கண்டு களித்து, அந்நாட்டின் தலைநகரைச் சார்ந்து, புற நகரினின் றும் எதிரே போந்த மணமகனொருவனைக் கண்டு, அந்நாடு நகர முதலியவற்றையும் பிறவற்றையும் வினவினான். அவன், "ஐய,

இந்நாடு மத்திம தேசமென்னும் பெயரை உடையது; இந்நகரத்தை ஏமமாபுரம் என்று இயம்புவர்; இந்நகர் இறைவன் நடமித்தன் என்று சாற்றப்படுவான்," என்று கூறிப் பின்னும், "ஐயனே, நீ இந்நாட்டிற்குப் புதியைபோலும்!" என, நம்பி, "ஆம்," என்முன். மணமகன் நம்பியை நோக்கி, "நண்ப, நீ இங்கு என்னை முதலிற் கண்டு அளவளாவியபடியால் எனக்கு உற்ற நண்பனுயினை; உண வருந்தும் வேளையும் ஆயிற்று; ஆதலின், என் இல்லில் தங்கி அமுதுண்டு ஆயாசந் தீர்ந்து செல்லுமாறு வேண்டுகின்றேன்," என்முன். நம்பி அவனை நோக்கி, "தோழ, உன் அன்புக்கு என்றும் நன்றியறிதலுடையேன்; இந்நகரிற்புகுந்த பின் நின்னைக் காண்பேன்," எனக் கூறி, அந்நகருட்புகுந்து, மண்டபத்தைப் போன்ற பளிங்கறை சேர்ந்த பொய்கை ஒன்றைக் கண்டு, அது தன் கண்ணையுங் கருத்தையுங் கவரக் களிகூர்ந்து, அங்குள்ள ஒரு மாமரத்தடியில் உட்கார்ந்தான். அத்தடாகத்தில் அன்னப்பறவைகளும் வேறு சில பறவைகளும் தத்தம் இனத்தோடு தழுவி விளையாடுவதைக் கண்ட நம்பிக்குத் தத்தையின் நினைவு வந்தது. அந்நினைவு வரவே, ஆகுலம் மேலிட்டவனாய், 'அந்தோ!' எனப் பெருமூச்செறிந்து, "நமது ஆருயிர்த்துணைவியாகிய தத்தை, நம்மைச் சிறைப்படுத்திச் சென்ற காலத்துத் துன்பக்கடலுள் மூழ்கியிருந்தாளே! நாம் யாரும் அறியாதவாறு அந்நகரை விட்டு வந்த செய்தியை அந்நங்கை அறியாளே! நமது பிரிவெனும் அழல் அவளை எங்ஙனம் சுடுகின்றதோ! அதனால், தன் உயிரைப் போக்கியிருப்பாளோ! நாம் ஒன்றும் அறிய முடியவில்லையே!" என மனங்கலங்கிப் பின்னர், "தத்தை விஞ்சையில் வல்லவள்; 'பகை முடிக்கப் பன்னிரண்டு திங்கள் கழிய வேண்டும்,' என அப்பொழுது ஆசிரியர் கூறியதையும் பிறவற்றையும் அவ்விஞ்சையின் வலியால் அறிவாள்; அதனால், தன் உயிரைத் தாங்கியிருப்பதோடு பிறரையுந் தேற்றி வைத்திருப்பாள்; நாம் இனிக் காலந் தாழ்த்தலாகாது; விரைவிற் சென்று பகையை முடிக்க முயல வேண்டும்," என்று மனந்தேறி, அக்குளத்திலுள்ள காட்சிப் பொருள்களைக் கண்டு களித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்நகர்க்கு அரசனுகிய நடமித்தனுக்கு அவன் மனைவி நளினை வயிற்றிற்பிறந்த விசயன் என்னும் அரச குமாரன்

அங்குச் சென்ற, நம்பியைக் கண்டு, "அரச குடும்பத்தினர் தவிர அன்னியர் வர முடியாத இவ்விடத்தில் இவன் வந்திருக்கின்ருனுதலின், இவன் இவ்வூரினனல்லன்; புதியவனுகத்தானிருக்கவேண்டும்," எனத் தன்னுட் கருதி, அவன் அண்மையிற்சென்று, அவனை நோக்கி, "நீ எந்நாட்டினன்? நின் ஊர் யாது? நின் பெயரென்ன?" என வினவினன். நம்பி தனது ஊர், பெயர் முதலியவற்றை வெளிப் படையாகக் கூருமல், பொருளால் மட்டும் அவை விளங்குமாறு மறைத்த மொழியாற்கூறினன்.

வில் வித்தை பயிற்றல்

விசயன் அச்சொற்களால் அவனை ஒரு சிறந்த வீரனென்று கருதி, "இவனை நம் தாதையரிடம் அழைத்துச் செல்லவேண்டும்; ஆனல், இவன் அதற்கு இசைவானு என்பதை அறிவோம்," என்று அவனை நோக்கி, "புகலரும்புகழினேய், நீ எனது நட்புக்குரியவ னுயாதலின், இந்நாடு நின்னுடு; இவ்வூர் நினது ஊர்; யாங்க ளனைவரும் நின் சுற்றத்தாராவோம்," என்று இன்மொழி பல பகர்ந்தான். நம்பியும், "காளாய், யான் நின் விருப்பப்படியே நின் உறவை ஏற்றுக்கொண்டேன்," என்ருன்.

இங்ஙனம் நம்பியின் உடன்பாட்டினைப் பெற்ற விசயன், ஆங் குள்ள மாமரத்திலிருந்த கனி ஒன்றை உண்ணக்கருதி, வில்லே வளைத்து ஓர் அம்பினை அப்பழத்திற்கு இலக்கு வைத்து எய்தனன்; அஃது அதன்மேற்படாது போயினமை கண்டு, அவ்வெண்ணத் தைக் கைவிட்டு நின்றனன். அதனைக் கண்ட சீவகசாமி, அக்கனி மீது தான் ஒரு கணையை ஏவி, அதனை அறுத்து, அஃது ஒரு வில் லுயரத்தில் வரும்போதே பாணமெய்த கரத்தினலே அதைப் பற்றிக்கொண்டான். அவன் விற்றிறத்தைக் கண்ட விசயன், "நாம் முன் எண்ணியது உறுதியாயிற்று," என்று கருதி, அவனைத் தழுவிக்கொண்டு, "தோழ, வில்லைப்படைத்த கடவுள் நீ எனவே எண்ணுகிறேன்; 'இராமன் மராமரம் ஏழும் உருவுமாறு ஏவினுன்,' எனப் பிறர் கூறக் கேட்டேனேயன்றிக் கண்டேனில்லை; அத் திறத்தை இது போது நின்னிடம் நேரிற்கண்டேன்!" என்று புகழ்ந்து, அவ்வள்ளலை அரண்மனைக்கு அழைத்துச்சென்று, வழி நடந்ததாலுண்டாகிய அவன் இளைப்பினை உணவு முதலிய உபசா

ரத்தால் நீக்கித் தன் தந்தையாகிய நடமித்தனுக்கு அவன் திறமை களையெல்லாம் எடுத்து விளங்கக் கூறினன்.

நடமித்தன் அவனை உற்று நோக்கி, அவன் கையில் யானைத் தோல் போலக் காழ்ப்பேறிச் சிறு மீனையொத்த சிலைத்தழும்பு மூன்று விரல் நீளத்தில் இருத்தலைக் கண்டு, "இவன் விற்றொழி லுக்கு வேந்தன்; 'வில் வல்லவருள் துரோணசாரிக்குப் பின்னர் விஞ்சையர் உலகினன்றி மண்ணுலகில் யாருமில்லை!' என்பார் வாயொடுங்க, இத்தோன்றல் தோன்றினன் போலும்!" என்று கூறி, அவனைப் புகழ்ந்து, அவற்குப் பல இன்மொழி பகர்ந்து, மீண்டும் அவனை நோக்கி, "வில் வீர, யான் நின்மீது பேரன் புடையனாயினேன்; நம் அன்பு என்றும் வளர்வதாக! என் புதல்வ னாகிய விசயன் விற்றிறம் அறியான்; இவனன்றி இன்னும் என் மைந்தர் நால்வர் உளர்; அவர்களும் அன்னர்களே! ஆதலின், நீ இவர்கட்கு நல்லாசிரியனாயிருந்து வில் வித்தை முதலியவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும்," என வேண்டிக்கொண்டனன். நம்பியும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தான். அது முதல் விசயன் முதலியோர், நம்பி திருவடிகளை நீங்காராய், நிழல்போலத் தொடர்ந்து அவன் நினைந்தவற்றையெல்லாம் ஒரு கணப்போதில் முடித்துத் தலை மாணவர்களாய் ஒழுகிக் கல்வி கற்று வந்தார்கள்.

நம்பி அவர்கட்குக் கொடிய வாளிகளையும் இருப்பு நாராசங் களையும் எய்யும் விதங்களையும், தம்மேல் வருங்கணைகளைத் தடுக்குந் தந்திரங்களையும், பகைவர் படை விடுங்காலத்திற் கருவியினால் தம்மை மறைத்துக்கொள்ளும் நெறிகளையும், தம்மேல் யானை சீறி வரும்போது அதன் காலிடையே புகுந்து மறையும் தன்மை களையும், அது கையாலே வளைக்குங்கால் அதன் கைக்கு நடுவே உடம்பைப் பிறழ வைத்து ஒதுங்கும் உபாயங்களையும், அது வாலால் வீசும்போது அவ்வீச்சுப்படாவாறு அதன் காலிடையே சென்று புகுங்காரியங்களையும், அது தந்தங்களாற்குத்திக் கொல் லப் பாயுந் தருணத்தில் அத்தந்தம் இரண்டுக்கும் நடுவே விலகிக் கொள்ளும் விதங்களையும், தேர்ப்போரையும், குதிரைச் செருவை யும், வாகனங்களிலிருந்து வாள் எறிகோல் முதலிய படைகளைச் செலுத்தும் பாங்குகளையும், தாம் தனியாகப் பகைவர் படையுள் அகப்பட்ட ஞான்று அப்படையைக் கெடுக்கும் பகுதிகளையும்,

இவற்றையொத்த பலவற்றையுங் கற்றுக்கொடுத்தான். அவர்களும் அவையனைத்திலும் வல்லவர்களாயினார்கள்.

அவ்வாறு மக்கள் செருத்தொழிலிற்சிறந்த வீரர்களாயினமையைச் சிலர் சென்று நடமித்தனுக்குச் சாற்றினர். உடனே அவன் அவர்கள் தேர்ச்சியைக்காண விரும்பி, ஒரு நன்னாள் பார்த்து, அவர்களை வரவழைத்து, அவர்கள் கற்ற வித்தையைக் காட்டுமாறு கட்டளையிட்டான். விசயன், கதம்பன், கனகன், அசல கீர்த்தி, சேனன் என்னும் புதல்வர் ஐவரும், தந்தையின் ஆணையை முடிமேற் கொண்டு, மழையையுந் துளியையும் சரக்கூடங்கட்டி நீக்கிக் காட்டியும், நூல் பிளக்குமாறு அம்பினை எய்தும், வாளாலே நூல் பிளவுபட வெட்டியும், நூல் இரண்டாகுமாறு வேலாலே எறிந்தும், மின் திரிவது போலச் சாரியை திரிந்தும் தம் போர்ப் பயிற்சியைக் காட்டினர். அவற்றைக் கண்ட அனைவரும் 'விற்போருக்கு விசயன் விசயனே (அருச்சுனனே)! வேற்போருக்குக் கதம்பன் கடம்பனே (முருகனே)! வாட்போருக்குக் கனகன் பரசுராமனே! யானைப்போருக்கும் தேர்ப்போருக்கும் அசல கீர்த்தி அசலனே (சச்சந்தன் சேனாதிபதி)! குதிரைப்போருக்குச் சேனன் நகுலனே!'' என்று கொண்டாடினார்கள்.

நடமித்தன் மக்கள் கல்வித்திறனைக்கண்டு கழிபேருவகையுடையவனாய், அவர்கள் அவ்வாறு மேம்படுமாறு செய்த நம்பிக்குக் கைம்மாறாகத் தன் நங்கை கனக மாலையைக் கொடுத்து அவனை அங்கேயே வைத்துக்கொள்ளக் கருதித் தன் பணியாளரை நோக்கி, "என் மக்கட்கு இங்ஙனம் கல்வி அளித்தவன் அரசனாகவோ, அன்றி அந்தணனாகவோ இருத்தல் வேண்டும்; ஏனையோர்க்கு இக்கல்வி உண்டாகாது; ஆதலின், யான் அவற்கு நீங்காததொரு தளையிட்டு இங்குச் சிறை செய்வேன்; நீவிர் இப்பொழுதே சென்று அவனைக் கொண்டு வருவீராக!'' என்று பணித்தான். அம்மொழிகளைக் கேட்ட அனைவரும், அரசனது அந்தரங்கக்கருத்தை அறியாமல், மெய்யாகவே நம்பியைக் காவலன் சிறை செய்யப் போகின்றான் என்று கருதி, "அந்தோ! மிக்க கல்வியும் மக்கட்குத் தீங்கையே விளைவிக்கும்போலும்! காவலன் கருத்து நன்று நன்று!'' என்று மனம் வருந்தினர். ஏவலாளர் சென்று நம்பியைக் கொணர்ந்தனர்.

**கனக மாலையின் கடிமணம்**

காவலன் நம்பியைத் தனியிடத்திற்கு அழைத்துச் சென்று, "யானையை நிகர்த்த அண்ணல், மண்ணுலகும் வானுலகும் வந்து வணங்குமாறு எல்லாச் சிறப்பினையும் எற்குநீ அளித்தாய். யானும் அவற்றைப் பெற்று ஆகண்டலனுனேன்; காளாய், யான் இதற்கிலன் ஒரு கைம்மாறு; எனினும், என் பாவை கனக மாலையை உனக்கு மணஞ்செய்து கொடுக்கக் கருதியுள்ளேன்; யான் இதனையே நீ செய்த பேருதவிக்குக் கைம்மாருக எண்ணுகின்றேன்; நீ இதனை மறுது ஏற்றுக்கொள்ள வேண்டும்," எனக் குறையிரந்து வேண்டினன். நம்பி விருப்பமில்லாதவன் போன்று முதலிற்பேசி, மன்னன் வற்புறுத்தலுக்கு இணங்கியது போல நடித்து, அவன் வேண்டுகோளுக்கு இசைந்தனன். அரசன் அவ்வாண்டகையை நோக்கிக் "காளாய், என் பெண் பிறந்த காலத்துச் சோதிடன், 'இவட்குக் கலையும் வடிவும் நிறைந்த காளை ஒருவனே கணவனுவான்,' எனக் கூறினன்; அது முற்றிலும் மெய்யாயிற்று," என்று அவன் கையைப் பிடித்துக் குலுக்கிக் கனிந்த மொழி பல பகர்ந்தான். பின்னர் அச்செய்தியை அவன் அனைவருக்கும் அறிவிக்க, அறிந்தவர்கள், "இதைத்தான் நம்பிக்குச் சிறையென்று வேந்தன் விளம்பினன் போலும்! நாம் இவ்வுட்பொருளை அறியாமல் வருந்திளேம்," என்று எண்ணி மகிழ்ந்தார்கள். மன்னன் நம்பிக்கும் நங்கைக்கும் மணமுடித்து வைத்தனன். காதலனுங் காதலியுங் களிப்புற்றனர். இது நிற்க.

## 12. பிரிந்தவர் கூடல்

இராசமாபுரியில் நம்பி காணமற்போன அன்று நந்தட்டன் திங்களை இழந்த உரோகிணி போல மதி மயங்கி, பற்பல நாடுகளிலும் மலைகளிலும் காடுகளிலும் சென்று தேடித் தமையனைக் காணுமல் வருந்திச் சில திங்கள் கழிந்த பின்னர் (சீவகன் ஏமமாபுரத்திலிருக்கும்போது) தனது நகராகிய இராசமாபுரி வந்து, "இன்று நம்பி உயிரோடிருக்குஞ் செய்தி அறிந்தாலன்றி உயிரை விட்டுவிடுவல்!" என்ற உறுதியுடன் குணமாலை வீட்டிற்குச் சென்றனன். அவள் தன் வருத்தத்தோடு அவனுக்கு விருந்தளித்தாள்; அவன் உண்டு கொண்டிருக்குங்காலை அவள் துக்கம் பொறுளாய், "என் சாமியின்றி நீர் தனித்துண்ணுங் காலமும் நேர்ந்ததே!" எனக் கூறிக்

நந்தட்டனும் தத்தனும்

கதறி அழுதனள். அவன் அவளைத் தேற்றித் தத்தையிருக்கும் இடம் சென்றான்.

அவள் தனது வீணையை மீட்டித் தன் காதலன் பிரிவைப் பொறுக்கலாற்றாளாய், "அந்தோ! என் நாளெல்லாந் துக்கமாகவே கழிகின்றனவே! என் நாதனைக் கண்டு களிக்கும் நாள் எந் நாளோ !" என்பன போன்ற துன்பமான சொற்களை அமைத்த சோகப் பாடல்களைப் பாடிவிட்டுத் தன் கண்ணீரால் உடையெல் லாம் நனைய, அவ்வருத்த மிகுதியால் பஞ்சணையிற்சாய்ந்து முகம் வாடியிருந்தாள். இந்நிலையிலிருந்த அக்கற்பரசியினைக் கண்டு நந் தட்டன் வணங்கித் துன்பத்தின் கரை காணா முகத்தையுடையவ னாய் அவளுக்கும் தனக்கும் இடையில் ஐந்து வில் நிலமிருக்குமாறு விலகித் தலை குனிந்து நிலத்தைப் பார்த்த வண்ணமாய் நின்றான். தத்தை அவனைத் தன் புதல்வன் போலவே கருதி, அன்பு மிக்கவ ளாய், "மைந்த, இங்கு வந்து இருப்பாயாக!" என்றாள்.

அவன் மூன்று விற்கிடை நீளத்திற்போய், உட்காராமல், அவள் வாடிய முகத்தையும் மாசடைந்த மேனியையும் பாராமல், தலை குனிந்து வணங்கிய வண்ணமாக அவள் பாதச் சிலம்பை மட்டுங் கண்டான்; கண்டவன், அவள் அணிகளை அணிந்துகொண் டிருப்பதில் அருவருப்புடையவனாய், "அன்னாய், அடிகள் எங்குள் ளார்? அவ்வற வடிவினர் பொன்றிவிட்டாரோ? அங்ஙனமாயின், நீ உடனே தீப்பாய்ந்து உடலைப் போக்கவேண்டும்; அன்றேல், கைம்மை நோன்பை மேற்கொள்ள வேண்டும்; அவ்விரண்டுமின்றி இவ்வணிகளையும் அழகையும் சுமந்துகொண்டிருக்கின்றாயே! இங் ஙனமிருப்பாரை யான் எங்குங் கண்டதில்லையே!" என்று சொல் லித் தீப்பற்றிய கற்பகத் தருவைப்போல அன்பாகிய நெருப்பின் வெம்மையாலே வாடிக் கண்களில் நீர் வார உளங்குன்றி நின் றான். அவன் தத்தையை நிமிர்ந்து பார்த்து அவள் வாட்டத்தை உணராமையால் இங்ஙனம் கூறினான்.

இம்மொழிகளைக் கேட்ட தத்தை, "நமது வாட்டத்தை அறி யாமையால் இங்ஙனங் கூறினான்; தூர திருஷ்டியை உண்டாக்கும் 'மதி முகம்' என்னும் மந்திரத்தை உணர்ந்த நாம் இனி இவ்வாறு வருந்தல் தக்கதன்று; அவ்விஞ்சை மூலமாக நம் காதலர் இருக்கும்

நிலையினை அறிந்து இவனுக்குக் காட்டுவோம்,'' எனக் கருதி, அம் மனுவின் உதவியால் தன் நாயகன் சில மணங்களை முடித்துக் கொண்டு ஏமமாபுரத்திலிருக்கும் நிலையினை உணர்ந்து, நந்தட்டனை நோக்கி, "வில் வீர, உன் ஐயரை உனக்குக் காட்டினால் எனக்கு நீ அடிமைத் தொழில் புரிவையோ?" என்று புன்னகையோடு விளையாட்டாக வினவினாள். அவன், "தாயே, என் ஆருயிரைக் காட்ட வல்லையேல், இப்பிறப்பில் மட்டுமன்றி, எழு பிறப்பும் உனக்கு ஆட்செய்வேன்,'' என்றனன்.

தத்தை ஒரு மனுவை ஓதித் தன் முகத்தைத் தடவினாள். அம் மந்திரம் நம்பியிருக்கும் இடத்தை நந்தட்டனுக்குக் காட்டிற்று; அப்போது சீவகன் ஏமமாபுரத்தில் கனகமாலையோடு அமளிமேல் இருந்து இன்பமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தான்; அத்தோற்றத்தை நந்தட்டன் கண்டான்; வறியன் எடுத்த தனம் போலத் தன் அண்ணன் அடிகளை வணங்கி அதிசயமுடையவனாய் நின்றான். தத்தை அதனை மாற்றவே, அக்காட்சியும் நந்தட்டன் பார்வையிலிருந்து மறைந்தது. நந்தட்டன் அண்ணியின் அடியில் வீழ்ந்து வணங்கி, "அன்னாய், அடியேன் இப்போதே சென்று அண்ணனைக் காண்பதற்கு அருள் செய்ய வேண்டும்,'' என மன்றாடி வேண்டினான். தத்தை தன் மந்திர வலிமையால் நந்தட்டனைச் சீவகன் போலும் வடிவினனாக்கி, ஓர் இடத்தைத் தூய்மை செய்து அவனைப் படுக்க வைத்து, 'ஆகாச காமினி' என்னும் மந்திரத்தை ஓதினாள். உடனே அம்மனுவுக்கு அதிதேவதை ஒன்று வந்து, அவனை மயக்கி, வான் வழியாக எடுத்துக்கொண்டு போய், ஏமமாபுரத்திலுள்ள இராச மாளிகைக்குள்ளே வைத்துவிட்டது.

**தமையனும் தம்பியும்**

மந்திர பலத்தால் மயங்கிக் கிடந்த நந்தட்டனைக் கனக மாலையின் தோழியாகிய வசுந்தரி என்பாள் கண்டு, சீவகனென்றே கருதி, அவன் தரையிற்கிடந்ததற்கு வருந்தி, அதனைக் கனகமாலைக்குத் தெரிவிக்கச்சென்று, அங்கும் ஒரு சீவகன் இருக்கக்கண்டு, இவ்வியத்தகு செயலை விசயற்குணர்த்தினாள். அவன் வந்து ஆங்குக் கிடப்பவன் ஒன்றும் பேசாமலிருத்தலையறிந்து, அதனை நம்பிக்கு நவின்றான்.

அதனைக் கேட்ட சீவகன், "தத்தையின் விஞ்சை வன்மையால் நந்தட்டனே நம் உருவினைப் பெற்று இங்கு வந்திருக்க வேண்டும்,''

என நினைந்து மகிழ்ந்து, உடனே அவ்விடத்திற்கு வந்து தம்பியைக் கண்டான். தம்பி தமையனைக் கண்டதும் தருமனைப் பன்னாள் பிரிந்திருந்து கண்ட அருச்சுனனைப் போல அவன் அடியிலே வீழ்ந்து தொழுதான். சீவகன் அன்பின் பெருக்கால் முப்முறை அவனைத்தழுவித் தான் அடைந்த வருத்தமனைத்தையும் போக்கினன்; பின்னர் நந்தட்டனை நோக்கி, "தம்பி, எனது தீவினைப் பயத்தால் குணமாலையின் உயிரைப் பாதுகாக்கக் கருதிப்போய்ப் பல உயிர் கட்குந் தீங்குண்டாமாறு கட்டியங்காரன் பகையைக்கொண்டு, அவனுற்சிறைசெய்யப்பட்டு, நீங்கள் அறியாமல் உங்களைப் பிரிந்து, இங்ஙனம் நீவிர் இனைவிரும் வருந்துமாறு செய்தேன்; ஆயினும், நாமெல்லோரும் ஒன்று சேருங்காலம் சமீபித்தது; ஆதலால், நீ வருந்தற்க!" என்று ஆறுதல் கூறினன்.

நந்தட்டன், "அண்ணு, இங்ஙனம் துன்பப்பட்டது நீர் மாத்திரமல்லீர்! முற்காலத்திலிருந்த இராமனுக்கும் இவ்வாறு நேர்ந்த துண்டு; ஆனல், அவன் இவ்வாறு தன் தம்பியைக் கைவிடாமல், கேடு வந்த காலத்தும் உடனழைத்துச் சென்ருன்; அவ்விளவலும் அவற்குத் தொண்டு புரிந்து பிறவிப்பயனை அடைந்தான்; உடன் பிறந்த மகளிர் போலப் பாவியேன் உமக்கு உதவாமற்போய் விட்டேன்; முற்பிறப்பில் என் தாய் தந்தையர் முதலியோரைப் பேணுதிருந்திருப்பேன்; அதன் பயனுக் இப்போது நுமது பாதத்தைப் பிரிந்து வருந்தும் பாவியானேன்!" என்று கூறி, அவனடிகளைத் தன் முடிமேற்கொண்டு, மனம் நொந்து கதறி அழுதனன். சீவகன், "தம்பி, நடந்ததுபற்றி வருந்தற்க!" என அவனைத்தேற்றி, கனகமாலையிடம் அழைத்துச் சென்ருன். நந்தட்டன் அவளை வணங்கினன். அவள் தன் குறிப்பினலே, "இவன் யார்?" என்று சீவகனைக் கேட்க, அவன், "உன் மைத்துனன்," என நவின்ருன். அவள், "இத்தகைய சுற்றத்தை எழு பிறப்பும் பெறுவேனுக!" என்று மகிழ்ந்து, தமையனும் தம்பியும் எதிரேயிருந்து உண்ணுமாறு விருந்திட்டாள்.

விருந்துண்ட நம்பியும் தம்பியும் தனியிடத்திற்சென்றனர். சீவகன் நந்தட்டனை நோக்கி, "தம்பி, யான் பிரிந்த பின் அங்கு நடந்தவற்றையெல்லாம் சொல்," என்ருன். அவன் அனைத்துங் கூறி, "அண்ணு, உங்கட்கு நேர்ந்தவற்றையுங் கூறுங்கள்,"

என்ருன். சீவகசாமி சுதஞ்சணன் எடுத்துச் சென்றது முதல் ஏமமாபுரத்தில் கனகமாலையை மணமாலை சூட்டியது வரையில் விளங்கக் கூறினன். பின்னர் நம்பி, "தாய் தந்தையரைக் காணப் பெற்றிலமே!" என்று கரைந்தான். தம்பியுங் கண்ணீர் விட்டு அழுதான். நம்பி தம்பியின் கண்ணீரைத் துடைத்து, "நந்தட்ட, என் வருத்தங் கண்டு நீயும் வருந்தற்க! 'தாய் தந்தையரைக் காணப் பெற்றிலமே!' என்று சிறிது வருத்தம் எனக்கு உண்டா யிற்று; ஆயினும், நின்னைக் காண்டலினல் அதுவும் நீங்கிற்று;

"திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையும் நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா! உடன்பிறப் பாக்க லாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரியது?" என்ருன்.

"மிக்க பொருளை அடையலாம்; பகையை அழிக்கலாம்; நட்பை ஆக்கலாம்; பெண்டிரையும் அடையலாம்; நன்மக்களையும் பெறலாம்; உடன் பிறப்பை மட்டும் பெறுதல் அரிது; ஆதலால், என்னுயிரினுஞ் சிறந்த தம்பியாகிய நின்னை அடைந்த எற்கு யாது குறையுளது?" என்று அவனைத் தேற்றினன். பின்னர் இருவரும் அந்நகரிலே தங்கியிருந்தனர்.

இராசமாபுரத்தில் நம்பியின் தோழர்கள் வேனிலிற்பட்ட மாலைபோல மனம் வெதும்பி அனைவரும் ஒரு நாள் ஒன்று கூடி,

**தோழர் காட்சி**

"தத்தைமட்டும்வாட்டமிலாதிருக்கக்காரணமென்ன? நம்பியர் எங்கேனும் கரந்துறைகின்றனரா? இவ்வுண் மையை அவளிடம் சென்று அறிவோம்," எனத் தத்தையின் மனைக்கு வந்து, "சீவகசாமி எங்கேனும் இருக்கின் ருரோ?" என்று வினவினர்கள். தத்தை தன் தலைவன் இருக்கு மிடத்தையும், அவனடைந்திருக்கும் நன்மைகளையும், நந்தட்டனும் அங்கு இருப்பதையுங் கூறினள்.

இவற்றைக் கேட்ட தோழர்கள் போனவுயிரை மீண்டும் பெற்றவர்களைப்போல மனங்குளிர்ந்து, வருத்தம் நீங்கி, நம்பி யிருக்கும் திக்கை நோக்கி வணங்கி, உடல் பூரித்து, "இனி நந் தலைவனைக் காண்பேம்!" என்னும் மகிழ்ச்சியாற் பாடியாடினர் கள்; தத்தையைப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்; பின்னர்

அவளை நோக்கி, "அன்னையே, நாங்கள் இப்பொழுதே நம்பியை காணப் புறப்படுகின்றோம்; அவரிடங் கூறுஞ் செய்தி உளதாயின், விரைவில் அருளவேண்டும்," என வேண்டினார்கள். அவள் தன் நாயகனன்றிப் பிறர் படித்தறியாவாறு ஓர் ஓலையெழுதி, அதில் அரக்கினை வைத்து அதன்மேல் தன் செவிக்குழையினால் முத்திரையிட்டு, அதனை அத்தோழரிடங்கொடுத்து, "நம்பியரிருக்குந் திசை நோக்கி நடப்பீராக!" என்று அவர்களை அனுப்பினாள்.

தோழர்கள் நன்னாளில் நால்வகைப் படையுடன் புறப்பட்டார்கள். அவர்கள் எண்ணற்ற மலைகளையுங் காடுகளையுங் கடந்து பல காவதஞ்சென்று, தண்டகாரணியத்தைச் சார்ந்து, அங்குத் தங்கி, தவசிகளிருக்கும் தாபதப் பள்ளிகள் பலவற்றைக்கண்டு, ஆங்குறையும் முனிவர்களைப் பார்த்து வணங்கிப் போங்காலை ஓரிடத்தில் சீவகன் தாயாகிய விசயையைக் கண்டார்கள். அவளைக் கண்டதும் பதுமுகன் முதலியவர் அவளண்மையிற்சென்று, "இவள் திருமகளோ! நாமகளோ! மண் மகளோ! இவ்வம்மை இத்திருமேனியைத் தவத்தால் வாட்டுதற்குக் காரணம் யாதோ!" எனக் கருதி, அவளை நோக்கி, "அன்னையீர், நுமது குலம் யாது? இங்கு நீர் வந்திருக்குங் காரணம் யாதோ!" என வினவ, அம்மை, "ஐயன்மீர், எனது குலத்தையும் வரவையும் கூறுதல் எளிதாயினும், இவ்வேடத்தாலே அவற்றைக் கூறக் கூடாதவளாய் இருக்கின்றேன்; ஆதலால், நீவிர் நுமது குலத்தையும் வரவையும் கூறுவீராக!" என்றாள்.

உடனே தேவதத்தன் அம்மையை நோக்கி, "அன்னையீர், எங்கள் ஊர் இராசமாபுரம்," என்று கூறி, ஸ்ரீதத்தன் முதலியோரைச் சுட்டிக் காட்டி, அவரவர் வரலாற்றைச் சொல்லி வருங்காலத்து, "கட்டியங்காரன் சீவகசாமிமேற் பகைகொண்டு அவரைக் கொல்ல...." என்ற மாத்திரத்தே மேல் நடந்த செய்திகளைக் கேளாமல் விசயை தன் புதல்வன் இறந்துவிட்டானென்றே கருதி, 'ஆ!' என்றேங்கிக் கீழே வீழ்ந்து அறிவழிந்து மூர்ச்சித்தாள்.

இதனைக்கண்ட பதுமுகன் முதலியோர், "சீவகற்குண்டான தீங்கைக் கேட்ட அளவிலே இவ்வம்மையார் தம் புதல்வற்கு நேர்ந்ததுபோலவே எண்ணித் தரிக்கலாற்றாது இங்ஙனம் கீழே

வீழ்ந்து தம் வசமிழந்தார்; இதற்கு இவரிடத்துள்ள இரக்கந்தான் காரணமாகும்; இவ்விரக்கமும் இவர் தவத்தாற்பெற்றதாகும்; என்னே தவத்தின் பெருமை!" என்று கூறி வியந்து, பல உபாயங்களால் விசயையை மூர்ச்சையினின்றுந் தெளிவித்தார்.

தெளிந்த தேவி, தன் வரலாறுகளைக் கூறிப் புலம்பத் தொடங்கி, "ஆ! என் அருமைக் கண்மணீ! நின் தந்தையாரைப் பாழும் பகைவனாகிய கட்டியங்காரன் வளைத்துக்கொண்டவுடன் அவர் ஆணையை மறுத்தற்கஞ்சிப் பாவியேன் எந்திர மயிலேறிச் சென்றேன்; சென்ற யான் கட்டியங்காரன் முரசொலியைக் கேட்டவுடனே உன் தந்தையார் இறந்துபட்டாரெனக் கருதி மூர்ச்சையாகி, அம்மயிற்பொறியின்மேல் வீழ்ந்தேன்; அஃது என்னை அவ்வூர்ச் சுடுகாட்டிலே இறக்கியது; அங்கு உன்னைப் பெற்றேன்; உன்னைக் கந்துக்கடன் எடுத்துக்கொண்டு போய்த் தன் மனைவி சுநந்தை கையிற்கொடுக்க, நீ அங்கு யாதொரு குறைவுமின்றி வளர்ந்து வந்தாயே! விரைவில் உன் தந்தையாரைக் கொன்ற பாவியைக் கொன்று பழிக்குப் பழி வாங்கிப் பகை முடிப்பாயென்று கருதி ஒருவாறு மனந்தேறியிருந்தேனே! அந்தோ! அவ்வெண்ணத்தின் வாயிலும் மண்ணிட்டு மாண்டாயோ! ஐயனே! யான் கண்ட கனவில் நீ பிறத்தலாகிய ஒரு பகுதி பலித்ததால், மற்றதும் நடக்குமென்ற உறுதி கொண்டிருந்தேனே! இனி என் துன்பத்திற்கு இறுதியும் உண்டோ! ஐயோ! ஐயோ!! இனி யான் என் செய்வேன்! எங்ஙனம் ஆற்றுவேன்! கோமானார் மகனே! குருகுலத்தார் போரேறே! ஏமாங்கத நாட்டார்க்கிறைவா! என் இன்னுயிரே! கடலிற் கலம் கவிழ்த்தாற்போல யான் இப்போது கலங்குகின்றேனே! என் கலக்கத்தை நீ சிறிதும் பொருட்படுத்தாது புறக்கணித்துப் போயினையே! நீ தீங்கின்றி வளர்கின்றதை இங்கு வருவோரால் அறிந்து உன்னை ஒரு காலத்திலேனுங் கண்டு மகிழலாமென்று எண்ணியன்றோ இங்கு யான் மறைந்து நோன்பாற்றி வந்தேன்! நீ இறந்த பின்னர் எனக்கு இந்நிலவுலகில் என்ன வேலையிருக்கிறது? இதோ யானும் நீ சென்ற இடத்திற்கே வந்துவிடுகின்றேன்! இனி அரை நொடிப்பொழுதுந் தரியேன்! தேவர்களே, என் புதல்வனை ஒரு முறை கண் குளிரக்கண்ட யான் மறித்தும்

ஒருகால் காண முடியாதவாறு யான் செய்த தீவினை யாது? பெண் பிறவிகளுள் என் போன்ற பாவிகள் எங்கேனும் உண்டா? நீவிரே கூறுமின்," எனப் பலவாறு புலம்பி, மயங்கிய மயில் போல மாநிலத்தில் வீழ்ந்தனள்.

விசயை புலம்பியதைக் கேட்ட நம்பியின் தோழர்கள் அவளைச் சச்சந்தன் நாயகி என்றும், சீவகனை அவள் புதல்வனென்றும் அறிந்துகொண்டு, ஆச்சரியமடைந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, "நிகழ்ச்சிகள் எவ்வாறு முடிந்துள்ளன பார்த்தீர்களா! இனி, கட்டியங்காரன் நமக்குமுன் எம்மாத்திரம்! நாம் இப்பொழுதே அவன் உயிரைக் கூற்றம்போல உண்டோம்! உலகையுங்கொண்டோம்!" என்று கூறி, உவகையால் ஆடி, மயங்கிக்கிடந்த மாபெருந்தேவியைத் தெளிவித்தார்கள்.

அவர்கள் தங்கள் செயலால் உணர்ச்சி பெற்று எழுந்த அவ்வம்மையைச் சூழ்ந்து நின்று கை குவித்து, "அன்னையீர், முழுதும் அறிவதற்கு முன் புதல்வன்மீது வைத்த பேரன்பால் நீவிர் மயங்கிக் கீழே வீழ்ந்து வீணே துன்பமுற்றீர்; நீவிர் இங்ஙனம் வருந்தத்தக்க தீங்கு ஒன்றும் நடந்திலது; நம் சீவகசாமி இறக்கவில்லை; உமது வருத்தம் ஒழிவீராக!" என்று கூறி, பின்னர் நடந்த செய்திகளையும், தாங்கள் இப்போது நம்பியைக் காண்பதற்கு ஏமமாபுரம் செல்வதையுங் கூறினார்கள்.

தேவி இவற்றையெல்லாங் கேட்டு, "ஆ! என் ஆருயிர்ப் புதல்வனும் உயிரோடு இருக்கின்றான்!" என்று உடல் பூரித்து, அவர்களை நோக்கி, "என் அருமைப் புதல்வீர், இதுவரை யான் அடைந்த துன்பங்கட்கு ஓர் அளவில்லை; என் செய்தியை என் மகனுக்கு அறிவித்து, விரைவில் அவனை இங்கே அழைத்து வாருங்கள்; நம்பியின் வரலாற்றைப் பிறர்க்குக் கூறுதீர்கள்; இவ்விஷயத்தில் எவரையும் நம்பாதீர்கள்; இந்த மறை (இரகசியம்) நினைவின்றியும் ஒரு சமயம் வெளியில் வந்துவிடுமாகலின், இதனைக் குறிக்கொண்டு போற்றுங்கள்; பகைவர் உள்ளமும், பாம்பின் போக்கும், மின்னலும் நேரே செல்லாவாதலின், அறியாதாரிடத்தில் இதனைக் குறித்து எள்ளளவும் பேசாதீர்கள்," என்று கூறி

னுள். அவர்கள் ஒரு திங்களுக்குள் நப்பியை அங்கு அழைத்து வருவதாகக் கூறிவிட்டு, அம்மையிடம் விடை பெற்றுக்கொண்டு சென்று, ஏமமாபுரத்தை அடைந்தார்கள்.

அடைந்தவர்கள், சீவகன் ஏமமாபுரத்திலிருப்பதை அறியும் பொருட்டுச் சில ஒற்றர்களை நகர்க்குள் அனுப்பிவிட்டுத் தாங்கள் ஒரு காட்டிலிருந்து நம்பியைக் கண்டு அவனை அடைதற்குப் பல வழிகளை எண்ணி, முடிவில் அந்நகரை ஆளும் அரசன் பசு நிரையைக் கவர்ந்து, அது காரணமாக நம்பியைக் காணலாமென்னும் உறுதி பூண்டார்கள். ஒற்றர்கள் வந்து வளையசுந்தரம் என்னும் பட்டத்து யானை மதங்கொண்டதாகவும், அதனைச் சீவகசாமி அடக்கியதாகவும் கூறினார்கள். நம்பியின் தோழர்கள் தாங்கள் கருதிய வண்ணமே அரசன் பசு நிரையை மடக்கினார்கள். அதனை மீட்கும் பொருட்டுச் சீவகன் தேரின்மேலேறிப் போர்க் கோலத்துடன் வந்தனன்.

பதுமுகன் வில்லை வளைத்து ஓர் அம்பில் 'அடியேங்கள் உம்மைக்கண்டு உமது அடி நிழலிலே தங்கும்பொருட்டே இங்கு வந்தோம்,' என்று எழுதி, நப்பியின் தேர்த்தட்டில் விழுமாறு எய்தனன்; அக்கணை அவ்வாறே சென்று விழுந்தது. அதனை எடுத்துப் பார்த்த நம்பி, "நம் தோழர்களே இவ்வாறு செய்தார்கள்," எனத் தெளிந்து, போர் தொடங்காவாறு தன் மேலாடையை வீசிப் படைகளுக்குத் தெரிவித்தான். உடனே தோழர்கள் சென்று, நம்பியை மன்னன் மகனென்று தெரிந்துகொண்டமையால் அவனடியில் வீழ்ந்து வணங்கினார்கள். நம்பி அவர்களைத் தழுவித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான். தோழர்கள் துன்பம் நீங்கினார்கள்.

பின்னர், நம்பி அவர்களை யானைமீதேற்றி அழைத்துக் கொண்டு போய், மன்னனும் தன் மாதுலனுமாகிய நடமித்தன் முன்னர்ச் சார்ந்தனன். அவன் தனது கண்ணின் குறிப்பால் அவர்கள் யாரென்று வினவ, நம்பி அவர்கள் வரலாற்றைக்கூறித் தன்னைக் காணும்பொருட்டே அவர்கள் இங்ஙனம் ஒரு விளையாடலை இயற்றினார்கள் எனத் தெரிவித்தான். மன்னன் மனமகிழ்ந்து, அவர்களைக் கனகமாலையின் இருப்பிடத்திற்கு அழைத்துப் போமாறு சீவகற்குக் கூறினன். நம்பி அவர்களைத் தன் மனைவி இல்லத்திற்கு அழைத்துச் சென்றனன். நங்கை அவர்களுக்கு

விருந்திட்டனள். விருந்து அருந்திய பின் தோழர்களால் தாயின் செய்தி அறிந்த சீவகன், அன்னையிருக்குமிடத்தை நோக்கி வணங்கி மகிழ்ந்தனன். பின்னர்த் தத்தை கொடுத்த ஓலையைத் தோழர்கள் கொடுக்க, நம்பி அதனைப் பிரித்துப் படித்துப்பார்த்துக் குணமாலை தனது பிரிவால் படுந்துன்பத்தை அறிந்து மனங்கலங்கி, ஒருவாறு தேறினன். பின்னர் மன்னன், தோழர்களால் நம்பியின் பிறப்பை அறிந்து, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, சீவகசாமியைத் தழுவிப் பல இன்மொழிகள் கூறிப் பின் அமைச்சருடனே மேல் நடக்க வேண்டிய செயல்களை ஆராய்ந்து முடிவு கட்டி, நம்பியை நோக்கி, "நீ இனி உன் பகை முடித்தற்கான செயலை விரைந்து செய்தலே தகுதியாகும்," என, நம்பி கனகமாலையிடத்தும் மைத்துனரிடத்தும் மேல் நடைபெற வேண்டியவற்றைத் தெரிவித்துத் தோழர்களுடனே குதிரையேறித் தண்டகவனம் நோக்கிப் புறப்பட்டான். நன்னிமித்தமாகச் சங்குகள் முழங்கின. அனைவரும் ஏமமாபுரத்தை விட்டு வெளியேறினர்.

## 13. தாயும் சேயும்

நம்பியும் தோழரும் இங்ஙனம் ஏமமாபுரத்தை விட்டு நீங்கி வருங்காலை நந்தட்டன் பதுமுகனை நோக்கி, "மாசேறிக் கிடந்த மணி ஒன்றினை அம்மாசைப் போக்கிக் காட்டியது போல, இது வரை அறியப்படாமலிருந்த நம்பியின் பிறப்பினது உண்மையை அறிந்து வந்து கூறினாய்; இனி நம் சாமி நமக்கு மன்னராவார்; நாம் அவர்க்கு மந்திரிமாரும் துணைவருமாவோம்; ஆதலால், அவரைக் குறிக்கொண்டு பேணுவது நமது கடமையாகும்," என்றனன். பதுமுகனும், "அதுவே ஏற்றதாகும்," என்று கூறினன். இவற்றையெல்லாங்கேட்ட சீவகன், பதுமுகனை நோக்கி, "அன்ப, இன்று முதல் என்னைப் பேண வேண்டுவது நின் கடனாகும்," என்றனன். அதற்குப் பதுமுகன் மகிழ்ந்து இசைந்தான்.

அன்னையின் அன்பு

பின்னர் அனைவருந் தண்டகவனஞ் சென்று, அன்னையிருக்குமிடத்தை அடைந்தனர். நம்பி பதுமுகனை "அன்னையாரின் செவ்வியை அறிந்து வா," என்றனுப்பினன். பதுமுகன் செல்லுங்காலை, விசயை அன்று தன் புதல்வன் வருவதாகக் கனவு கண்டு அவன்

வரும் வழியை எதிர் நோக்கிய வண்ணமாகவே இருந்தாள். பதுமுகன் சென்று வணங்கி, "அன்னையரே, நம்பியார் வந்தனர்," என்றனன். அவள் ஆவலோடு, "ஐயன் எங்கே? ஐயன் எங்கே?" என்று பன்முறை வினவினள். பதுமுகன் விடை கூறுதற்கு முன்னரே, "அன்னையீர், அடியேன் இதோ வந்தேன்!" என்று தொழுது அம்மையின் அடிகளைப்பற்றிக்கொண்டு கீழே வீழ்ந்தான் சீவகன். அப்பொழுது அவ்விருவருக்கும் நேர்ந்த உணர்ச்சியைக் கூற யாரால் முடியும்! அங்ஙனம் வீழ்ந்த மகனைக் கண்ட விசயை, கண்களில் நீர் பெருக, "ஐய, இங்கு வருக!" எனக் கூறி வாரியெடுத்து மடிமீது இருத்தி, "என் கண்ணே, உன்னைப் பெற்ற ஞான்று மடிமீது வைத்துச் சீராட்டுதற்குத் தவஞ்செய்யாத பாவியாயிருந்தேன்! எனினும், அக்குறை இப்பொழுது நீங்கப் பெற்றேன்! என் பாவம் போக்க வந்த பண்ப, இறக்குந் தருணத்தில், என் இறைவரைப் பகைவனிடம் விடுத்தும் உன்னைப் பெற்றுச் சுடுகாட்டில் விடுத்தும் பிரிந்து சென்ற கொடியேனைக் காண வந்தாயே! உன் அன்பை என்னென்று புகல்வேன்!" எனச் சொல்லிச் சொல்லிப் புலம்பினள்.

நம்பி தாயை நோக்கி, "அடிகளே, என் தாதையார் இறக்கவும், அவரைச் சார்ந்த பலரும் வருந்தவும், நீர் ஆற்றொணாத் துன்பம் பல அடையவும் இப்பாவியேன் பிறந்ததுமன்றி, வீரம் மிகுந்து பகையை வெல்வதிலாவது அல்லது உயிரை விடுவதிலாவது துணிவு கொள்ளாமல் பேடியைப்போன்றிருக்கும் என் பொருட்டு நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? துன்பம் ஒழிக!" என இன்மொழி பல கூறித் தேவியைத் தேற்றினான். தாய் சேயை நோக்கி, "ஐயனே, உனக்கு மாபாவியாகிய யான் தாயல்லேன்; சுநந்தைதான் அன்பு மிக்க அன்னையாவாள். சச்சந்தர் நின் தந்தையல்லர்; கந்துக்கடனே நின் தந்தை. எனக்கு மகன் நீயல்லை; நந்தட்டனே," என்று நன்மொழி பல நவின்று, நந்தட்டனை, "புதல்வ, இங்கு வருக!" என்று அருகில் அழைத்துத் தழுவி, மடியின் மற்றொரு பக்கத்தில் இருத்தி, மயில் தன் குஞ்சுகளை இரண்டு சிறகாலும் தழுவியிருப்பதுபோல இருந்து, மற்றவர்கட்கும் இன்மொழி பல இயம்பிப் பின்னர் அனைவருக்கும் அமுதனைய அடிசில் ஊட்டினள்.

ஆறு நாட்கள் வரை நம்பியும் தோழர்களும் ஆங்குத் தங்கி யிருந்தார்கள். பின்னர் ஒரு நாள் விசயை மைந்தனையும் மற்ற வர்களையும் ஒரு சோலைக்கு அழைத்துக்கொண்டு போய்த் தனியிடத்திலிருத்தி, அவர்கட்கு அரச தந்திரங்களை உரைக்கக் கருதிப் புதல்வனை நோக்கி,

**தாயின் தந்திர உரை**

"மைந்த, யான் கூறுவதை நீ குறிக்கொண்டு கேட்பாயாக: குறுநில மன்னர்களும் பெருநில வேந்தர்களுமாகிய இவர்கள் பெண்களை நீ மணஞ்செய்துகொண்டது சாலவும் பொருத்தமுடையதே; ஏனெனில், நாளை நின் பகை முடிக்கப் போர் நிகழுங்காலை இவ்வரசர்களின் துணை இன்றியமையாதாகலின். இன்னும், முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பதுபோல நட்பாய் இருக்கும் இரண்டு பகைவரை வேறுபடுத்தி அவருள் ஒருவரைக்கொண்டே ஒருவரை அழித்தல், ஒற்றினை ஒற்றினாலே ஆராய்தல், மதி நுட்பம் நூலோடு வாய்ந்த அமைச்சர்களைக் கண்போல ஏற்றுக்கோடல், பொருளாற் படையும், அதனாற்பூமியும், அதனாற்பொருளும், அதனாற்புகழ் புண்ணியங்களும் அடைதல் முதலிய இவை மன்னர்க்குரிய மாண்பாகும்; நாம் இப்போது பூமி, பொருள் முதலிய அனைத்தையும் இழந்து மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதுடன் தக்கவாறு வரும் பொருள் உரைக்கும் மந்திரிகளையும் இழந்திருக்கின்றோம்; இந்நிலையிலுள்ள நீ எங்ஙனம் பகை முடிக்கக் கருதியிருக்கின்றாய்?" எனக் கேட்டனள்.

நம்பி, "அன்னையீர், மடங்கல் தன்னோடொத்த மடங்கலோடன்றி நரியோடு போர் செய்யத் தொடங்கினால், அந்நரியை வெல்லத் தக்க தந்திரங்களும் துணையும் வேண்டுமோ? அதுபோல, கட்டியங்காரனுடன் போர் செய்ய அவை வேண்டா; அன்றியும், யான் அவனுடன் போர் புரியவும் வேண்டுவதில்லை; நந்தட்டன் ஒருவனே அவற்குக் கூற்றுவன். கட்டியங்காரன் போரில் பாம்பாவான்; நந்தட்டன் கருடனாவான். அதைப்பற்றிய கவலை உமக்கு வேண்டா," என்றனன்.

பின்னரும் தாய் பல அறிவுரைகளை அறைந்து, நம்பியை நோக்கி, "என் செல்வமே, முகிலும் ஞாயிறும் தோன்றிய அளவில் முல்லையும் தாமரையும் மலர்தல்போல, நின்னைக் கண்ட அள

வில் உன் மாமனுர் மகிழ்ச்சியடைவர்; ஆதலால், நீ ஆங்குச் சென்று அவரிடம் ஆலோசித்துப் பகை முடிப்பாயாக!'' என்றனள். நம்பி, "அன்னையீர், யானும் முன்னரே அதனையே எண்ணியிருந் தேன்; நாளைக்கே இராசமாபுரஞ் சென்று யானிருந்ததை அங் குள்ள சுற்றத்தார்க்குத் தெரிவித்து, அவர்கள் துன்பத்தைத் துடைத்து, மறு நாளே என் மாமனுரில்லம் வருவேன்; நீவிர் முன் னரே அங்குச் சென்று தங்கியிருக்க வேண்டுகிறேன்,'' என வேண்டி வணங்கினுன். அன்னையும் அதற்கு உடன்பட்டாள்.

## 14. விமலை மணம்

பின்னர் நம்பி தாயினிடம் விடை பெற்றுக்கொண்டு தோழ ரோடும் புறப்பட்டு மலைகள் முதலியவற்றைக் கடந்து, இராசமா புரத்தை அடைந்து, தோழர்களை ஒரு சோலையிலிருத்தித் தான் தனித்து நகருட்புகுந்தனன். அந்நகரின்கண் சாகரதத்தன் என்னும் வணிகன் புதல்வி விமலை என்பாள், வீதியிற்பந்தாடிக்கொண் டிருந்தாள். பந்து அவ்வீதியிற்சென்ற சீவகற்கு முன்னே போய் வீழ்ந்தது. அதனை எடுக்கச் சென்ற அம்மாதினை அண்ண லும் நோக்கினுன்; அவளும் நோக்கினுள். இருவரும் ஒருவர் உள்ளத்து ஒருவர் புக்கனர். விமலை தன் மாளிகை சேர்ந்தனள். நம்பி சாகரதத்தன் வீட்டின் வெளிப்புறத்தில் உட்கார்ந்து, ஏதோ சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

அவ்வணிகன் வீட்டில் பல ஆண்டுகளாக விலையாகாது தேங் கிக் கிடந்த பண்டங்களனைத்தும் அன்று சிறிது நேரத்திற்குள் ஆறு நூறுயிரம் பொன்னுக்கு விலையாயின; இதனைக் கண்ட வணிகற்கு நிமித்திகன் சொன்னது நினைவிற்கு வந்தது; உடனே வெளியே வந்து பார்த்தான்; நம்பியைக் கண்டான்; கண்டு களி கூர்ந்து, "ஐயனே, எனக்கு விமலை என்னும் ஒரு புதல்வி உண்டு; அவள் பிறந்த ஞான்று கணி ஒருவன், 'இவட்கு நாயகனைத் தக்கவன் நின் வீட்டின் வெளியில் வந்து தங்குவான்; அதுபோது விலை யாகாத நின் பொருள்களனைத்தும் விலையாகும்; அவற்கே நின் அருந்தவப் புதல்வியைக் கொடுப்பாயாக!' என்று எனக்குக் கூறினன்; அங்ஙனமே இன்று நிகழ்ந்தது; ஆதலின், நம்பி, கவின் மிக்க என் நங்கையை நீ நின் வாழ்க்கைத்துணையாக

மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்,'' எனக் குறையிரந்து வேண்டினன்.

நம்பி, "கரும்பயிறற்குக் கூலி போல, முன்னரே என் உள்ளத்தைக் கவர்ந்த நங்கையை மணப்பதற்கு வேண்டிக் கோடலும் வேண்டுமா? நன்று நன்று! இது விதி கூட்டி வைத்ததாகும்,'' என்று தன்னுட்கருதி, அதற்கு இசைந்தனன். நம்பிக்கும் நங்கைக்கும் திருமணம் நடந்தது. பின்னர் நம்பி இன்றியமையா அலுவல் உண்டெனக் கூறி, அவர்களிடம் விடை பெற்றுத் தோழர்களிடஞ் சென்றனன்.

## 15. சுரமஞ்சரியின் கல்யாணம்

நம்பியின் மணக்கோலத்தைக் கண்ட தோழர்கள், செய்தியை அறிந்து மகிழ்ந்தார்கள். அவர்களுள் புத்தி சேனன் மகிழ்ச்சி மிகுதியால் நம்பியைப் பரிகசிக்கத் தொடங்கி, "அண்ணலே, நீர் இதுவரை செய்த மணங்களெல்லாம் இத்துணைச் சிறப்புடையனவாகா;

**நம்பியின் வஞ்சினம்**

பல பெற்றோர்கள் தங்கள் பெண்களை யாருக்கேனும் கொடுத்துவிட்டால், தங்கள் சுமை கழியுமென்றெண்ணித் தகாதவரிடங் கொடுத்துவிடுவதுண்டு; அந்த முறையிற்றான் உமக்கும் கொடுத்திருப்பார்கள்; இந்த ஊரிலேயே ஆடவர் காற்றும் தன்மேற் படாவாறு நோன்பியற்றிக்கொண்டிருக்கிறாள் சுரமஞ்சரி என்னும் ஒரு தோகை; அவளை நீர் மணந்துவிட்டால் ஆடவர்க்குள்ளே நீரே சிறந்தவராவீர்,'' எனக் கூறினான். இதனைக் கேட்ட நம்பி, புன்னகை புரிந்து, புத்தி சேனனை நோக்கி, "நண்ப, யான் அம்மங்கையை மணம் புரியாவிடின், ஆடவர்க்குள் என்னினும் இழிந்தவர் இல்லையென்று கொள்க இவ்வுலகில்,'' என வஞ்சினங் கூறி, "அன்ப, இவ்வூரில் சித்தச கோட்டம் என்னுங் கோவில் ஒன்றுளது; நீ நாளை அங்குச் சென்று, சுவாமியின் பின்னே ஒளிந்திருப்பாயானால், அவள் அங்கு வந்து என்னை மணமகனாக அடைதற்கு அத்தெய்வத்திடம் வரங்கேட்கும்படி செய்வேன்,'' என்றனன். புத்தி சேனனும் அதற்கு இசைந்தனன்.

பின்னர் நம்பி ஒரு கிழ வேதிய வடிவங்கொண்டு, சுரமஞ்சரியிருக்குமிடத்திற்குச் சென்றான். அவன் உடல் நிலையையும் பசித்

குமரன் கிழவனாகிப் பின் குமரனாதல்

தன்மையையும் அறிந்து வாயிற்காவலர் மனமிரங்கி, "ஐயோ பாவம்! உள்ளே சென்றாலும் ஏதேனும் வாங்கியுண்பான்!" என்று கருதி, அவனை உள்ளே விட்டனர். அவ்வஞ்ச மறையோன் உள்ளே சென்ற அளவில் ஆங்குக் காவலிருந்த மகளிர் பலரும், "அந்தோ! இவன் ஆடவனாய் இருக்கின்றானே! இவன் வருகை நம் தலைவியின் விரதத்திற்குப் பங்கம் விளைப்பதாயிற்றே!" என்று கருதி, விரைந்தோடி வந்து, அவனை நோக்கி, "விருத்தரே, நீவிர் இங்கு வரின் தீங்கு நேரும்; இங்கு ஆடவர் வாடையும் படலாகாதென்பதை நீர் உணரீர் போலும்! விரைவில் வெளியே சென்றுவிடுவீராக!" என்று வெறுப்புடன் கூறினர். மறையவன் மறுமொழி ஒன்றுங் கூறாமல், ஊதினாலும் பறந்துவிடுபவன்போலத் தள்ளாடிக்கொண்டு போய், அவர்கள் பக்கத்தில் நின்றான். அம்மகளிர் அவன் நிலைக்கு இரங்கி, அச்செயலைத் தம் தலைவியிடஞ்சென்று சாற்றினர்.

சுரமஞ்சரி, "அங்ஙனமாயின், யானே அவனை வந்து பார்க்கிறேன்; நீவிர் முன்னே செல்வீராக!" என்று கூறி, அவர்கட்குப் பின் பூங்கொம்பு ஒன்று நடப்பது போல நடந்து சென்று, கள்ள மறையவனைக் கண்டு, "கிழ வேதியனே, நீ எது கருதி இங்கு வந்தாய்?" என வினவ, அவன், "நங்காய், நான் குமரியாற்றில் நீராடக் கருதிப் போந்தேன்," என்றனன்; "அதில் மூழ்கினால் உண்டாகும் நலன் யாது?" என மங்கை வினவினாள்; "இம்மூப்புப் பருவம் நீங்கிக் காளைப்பருவம் அடைவேன்," என நம்பி நவின்றான்; நங்கை நகைத்து, "மறையோய், நின் புத்தி சுவாதீன நிலையில் இல்லையென்று கருதுகிறேன்! குமரியாற்றில் மூழ்கிக் குமரராவாரும் இந்நிலவுலகில் உளரோ? இதை எவரேனுங் கேட்டால் எள்ளி நகையாடாரோ?" என்று இயம்ப, மறையவன், "உன் கருத்துப்படி மற்றவர் பெறுவது முடியாது; ஆனால், யான் அதை அடைய முடியும்," என்றான்; உலகோர் அறிந்த நெறியையன்றி நீ வேறொரு நெறி அறிந்தாய் போலும்!" எனக் கோதை கூற, "ஆம்; அதில் எட்டுணையும் ஐயமில்லை," என்று ஐயன் அறைந்தனன்.

சுரமஞ்சரி, "பட்ட மரந் தளிர்த்தால் இவன் நினைப்பதும் முடியும்; இவன் முதுமையாலும் பசியாலும் இங்ஙனம் கூறுகிறான்;

நமது கொள்கைப்படி இவனை நடத்தினால் பாவம் நேரிடும்," என்று கருதித் தன் தோழியரிடங் கூறி, அவனுக்கு உணவளித்தனள். உண்டு களித்த அவனைச் சுரமஞ்சரி, "மறையவனே, நீ எவ்வெத்தொழிலில் வல்லமை பெற்றிருக்கின்றாய்?" என வினவ, அவன், ஏதேதோ விடை கூறிவிட்டுத் தூங்கி விழ்பவன் போல நடித்து, "நங்காய், உண்ட களைப்புத் தொண்டர்க்குமுண்டன்றோ? எனக்கு உறக்கம் வருகிறது; இங்கே படுக்கலாமெனின், இவ் வாடைக்காற்று என் மேற்படும்; உடனே இறந்துபடுவேன்; இதற்கென் செய்வேன்!" என வருந்தினான். மங்கை மனமிரங்கி, உள்ளே தனது கட்டிலிற்படுக்குமாறு செய்தனள். ஞாயிறு மறைய நிலவு வீசிற்று.

விருத்த வேதியன் ஒரு கீதத்தை வெகு இனிமையாகப் பாடினான். அதனைக் கேட்ட அங்கனையார் (பெண்டிர்), "இது நம் சீவகசாமியின் பாடல் போலத் தோன்றுகிறதே!" என்று கருதி, அவனை வந்து சூழ்ந்தனர். சுரமஞ்சரியும் ஆங்கு வந்து விருப்பத்துடன் அக்கீதத்தைக் கேட்டனள். அதுபோது நம்பி அவர்களை நோக்கி, "யான் கிழவனாயிருந்ததாலன்றோ நுமது விரதத்திற்கு மாறாக என்னை நெருங்கியிருக்கிறீர்கள்? யான் ஒரு குமரனாயிருந்தாலோ?" என்றனன். தோழியர், "குமரர் பெயரும் இங்கே கூறக்கூடாது; இளைஞர் இங்கு வரின் உடனே அவர்தமை ஒழித்துவிடுவோம்!" என்றனர். நம்பி, "நீவிர் ஏன் இத்தகைய கடுமையான நோன்பை மேற்கொண்டீர்? உம் தலைவியை அவளால் விரும்பப்பட்ட ஆடவனொருவன் மணஞ் செய்துகொள்ளாமல் இகழ்ந்திருக்க வேண்டும்; அதனால், நீங்கள் ஆடவர்மீது இவ்வாறு வெறுப்புக்கொண்டிருக்க வேண்டும் என நினைக்கின்றேன்," என்றான். அவர்கள், "ஆம்; அஃது உண்மைதான்; எம் தலைவியின் சுண்ணத்தை முன்னொருநாள் சீவகர் பழித்தார்; அதனால், எம் தலைவி இவ்விரதத்தை மேற்கொண்டனள்," என்றார்கள்.

வேதியன், "நுமக்கு வெறுப்பினை விளைவித்த சீவகன் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்," என்றான். தோழியர், "அவர் இறக்கவில்லை; இவ்வுண்மையைக் காந்தருவ தத்தையிடம் தூதனுப்பித் தெரிந்துகொண்டோம்; உமது பாடல் அவர் பாடல் போன்றுள்ளது; இன்னொரு கீதம் பாடுவீராக!" என்று வேண்டினர்.

நம்பி மற்றொரு கீதம் பாடினன். அதனைக் கேட்ட சுரமஞ்சரி, "நம் சாமியின் பாடல் போன்றேயிருக்கிறது! நம்மை அவர் இகழ்ந்தாலும் நாம் அவரையே நாயகராக அடைதல் வேண்டும்," எனத் தனக்குள்ளே சிந்தித்து, மறுநாள் அவ்வேடியனையும் அழைத்துக்கொண்டு சித்தச கோட்டத்திற்குப் போய், அவனைத் தூரத்தே வைத்துவிட்டுத் தான் மட்டும் தெய்வத்தின் முன் சென்று, முறைப்படி வணங்கி, 'சித்தச மூர்த்தியே, சீவகரை எனக்கு மணமகனாக நீ தரின், உனக்கு மீனக்கொடியும், மலரம்பும், கரும்பு வில்லும், தேரும் யான் வைத்து வணங்குவேன்," என்று வேண்டிக்கொண்டனள்.

அப்போது நம்பி சொல்லி வைத்தபடி அங்கு மறைந்திருந்த புத்திசேனன், அத்தெய்வங் கூறுவது போலவே, "நங்காய், நீ வேண்டியவாறே சீவகனை உனக்கு நாயகனாகத் தந்தோம்; நீ கவலைப்படாதே," என்றான். இதனைக்கேட்ட மங்கை மன மகிழ்ந்து, பின்னும் பன்முறை அத்தெய்வத்தை வணங்கி மீண்டனள். அப்பொழுது மறைவிடத்திலிருந்த நம்பி, தனது உண்மை வடிவத்தோடு நின்றான். அவனைக் கண்ட சுரமஞ்சரி, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, நாணி நிலத்தை நோக்கி நின்றனள். நம்பி அவள் மகிழுமாறு சில வார்த்தைகள் கூறி, அவளை அனுப்பிவிட்டுத் தன் தோழர் இருப்பிடஞ்சென்று, நடந்ததை அறிவித்தனன். அவர்கள் அவ்வாண்டகையை 'ஆடவர் திலகம்' எனப் புகழ்ந்தார்கள்.

பின்னர், தோழர்கள் சுரமஞ்சரியின் தந்தையிடம் மணம் பேசச் சிலரை விடுத்தனர். குபேர தத்தன், மகள் கருத்தை உணர்ந்து, "இது நமக்குப் பாற்சோற்றிலே தேன்மாரி பெய்தது போலாகும்!" என மகிழ்ந்து, மணத்திற்கு இசைந்தனன். நன்னாளில் நங்கைக்கும் நம்பிக்கும் திருமணம் செவ்வனே நடைபெற்றது. வதுவை நடந்த அன்று மாமனார் வீட்டிலே தங்கியிருந்த நம்பி, மறு நாள் நங்கையிடம், "என் உயிர் போன்ற ஓவியமே, எனக்கு இன்றியமையாச் சில வினைகள் உள; அவை முடியும் வரை யான் உன்னைப் பிரிந்திருந்து பின்னர் வந்து சேருவேன்; நீ வருந்தற்க!"

**மங்கையின் மணம்**

எனத் தேறுதல் கூறிவிட்டு, அன்றிரவு, 'பிள்ளையைக்காணும் நாளும் உளதோ!' என்று அல்லும் பகலும் அழுதுகொண்டிருக்கும் தந்தை தாயரைக் கண்டனன்.

அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியுடைவர்களாய், அந்நற்செய்தியைச் சுற்றத்தார்க்குத் தெரிவித்தார்கள். அவர்கள் ஓடி வந்து நம்பியை இறுகத் தழுவிக்கொண்டு, 'ஓ' என்று அழுதனர். கந்துக்கடன். "இரகசியம் வெளியானால் கட்டியங்காரனால் ஏதேனுந் தீங்கு நேரும்!" என்று கருதி, அனைவர்க்கும் அதனைத் தெரிவித்து, அமைதியை உண்டுபண்ணினன்.

பின்னர், நம்பி தத்தையின் இல்லஞ்சென்றனன். அவள் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, "நாதரே, குணமாலை உம்மைக் காணாததால் உயிர் விடும் நிலைமையிலிருக்கிறாள். உடனே அங்குச் சென்று அவளைத் தேற்றுவீராக!" என்று அனுப்பினள். சீவகன் உடனே குணமாலையிடம் சென்றனன். அவனைக் கண்டதும் குணமாலை, "அடிகேள், மணமுடிந்ததும் பெருந்தீங்கை உங்கட்கு விளைவித்த இப்பாவியையும் நீங்கள் காண வரலாமோ!" என முகத்தில் அறைந்துகொண்டு அழுதாள். அவள் நிலையைக்கண்ட சீவகன், பொறுக்கலாற்றாது வருந்தி, அவளை நோக்கி, "மாலாய், நீ செய்த நல்வினைப்பயனாலேயே இதுவரை வந்த ஆபத்துக்களினின்றும் யான் தப்பினேன்; இனி வருவது நல்ல காலமே; ஆதலின், வருந்தாதே!" என்று தேற்றி, அவளிடம் விடை பெற்றுக் கந்துக்கடனிடம் நடக்க வேண்டுவனவற்றைக் கூறிக் குதிரை வாணிகன் போல வேடந்தாங்கித் தோழர் சூழ அந்நகரினின்று நீங்கி விதைய தேசத்தை அடைந்தான்.

## 16. நம்பி பகை முடித்து நாடு கோடல்

அந்நாட்டை அடைந்த நம்பி, தன் வரவை ஓர் ஆள் மூலமாக மாதுலற்கு அறிவித்தான். அந்நற்செய்தியை அறிந்த கோவிந்தன்,

மாமனும் மருமகனும்

குதுகுலம் மிகுந்தவனாய்த் தன் நகரை அலங்கரிக்குமாறு தெரிவித்துவிட்டுச் சீவக சாமியை எதிர்கொண்டழைக்குமாறு பலரை ஏவினன். அவர்கள் எதிரே சென்று நம்பியை வரவேற்றார்கள். அண்ணல் யானைமீதேறி

அலங்காரம் மிக்க அழகிய வீதியினூடே புகுந்தான். அக்காளையைக் கண்ட அனைவரும்,

"தேமல ரங்கட் டிருவே புகுதக!
மாமலர்க் கோதை மணாளன் புகுதக!
காமன் புகுதக! காளை புகுதக!
நாமவெழில் விஞ்சை நம்பி புகுதக!
"மின்றேய் வரைகொன்ற வேலோன் புகுதக!
இன்றேன் கமழ்தார் இயக்கன் புகுதக!
வென்றேன் புகுதக! வீரன் புகுதக!"

என்று எதிர் கொண்டனர். இங்ஙனம் பலரும் கொண்டாட வீதிகளைக் கடந்து வீர சிகாமணி அரசன் மாளிகையை அடைந்தான். பட்டத்துத் தேவியரனைவரும் அவனைக் கண்டு அளவிலா ஆனந்தங் கொண்டனர். காளை களிற்றினின்று இறங்கி, மாமன் அடியில் வீழ்ந்து வணங்கினன். மருகனை வாரியெடுத்து மார்போடணைத்த மாதுலன், அவற்கு நேர்ந்த இடையூறுகளையும், மைத்துனற்கு நேர்ந்த மரணத்தையும் நினைந்து ஆற்றுனைய்த் தன் கண்ணீரால் அவன் மார்பை நனைத்துத் தேம்பித்தேம்பி அழுதனன். அதனையறிந்த அந்தப்புர மகளிரனைவரும் அழுதனர். புதல்வன் சொற்படி முன்னரே அங்கு வந்து தங்கியிருந்த விசய மாதேவி வந்து, அனைவருக்கும் ஆறுதல் கூறித் தேற்றினள்.

பின்னர், கோவிந்த ராசன் தன் கொலுக்கூடத்திற் சென்றிருந்தான். நம்பியுந் தன் தோழர்களோடு ஆங்குச் சென்று, மாமனேடும் மற்ற அமைச்சரோடும் மேல் நடக்க வேண்டிய செயலைப்பற்றித் தீர ஆலோசித்து முடிவு கட்டினன். மன்னன் அவற்கும் அத்தோழர்கட்கும் வேண்டிய அணிகளையும் படைகளையுங் கொடுத்துத் தன் மனைவியாகிய புதவி என்பாள் பெற்ற சீதத்தனுக்கு நன்னுளொன்றிற் பட்டங்கட்டி, அரசுரிமையை நல்கினன்.

இங்ஙனம் இருக்குங் காலத்திலே கட்டியங்காரன் சச்சந்தனைப் போலவே கோவிந்தனையும் வஞ்சனையாற்கொன்று அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணி, ஓர் ஓலை அனுப்பினன். அதனைக் கோவிந்த ராசன் வாங்கி, விரிசிகனிடங் கொடுக்க, அவன் அதனைப் பிரித்து, "கட்டியங்காரன் ஓலையை விதயர்கோன் காண்க! யான் ஒரு பொய்

கெடுவான் கேடு நினைப்பான்.

யான பழியைச் சுமந்துகொண்டிருக்கின்றேன்; என் உயிர் போகுமாறு இருதயத்தைப் பிளந்து காட்டினும் உலகத்தார் நம்பமாட்டார்கள்; எனினும், நீ ஒருவாறு நம்பக்கூடுமென்று கருதி, நடந்த உண்மையை எழுதுகிறேன்: ஒரு நாள் அசனி வேகம் என்னும் பட்டத்து யானை மதங்கொண்டு பாகர்களுக் கடங்காமற் பலரைக் கொன்றுவிட்டது; இதனையறிந்த சச்சந்த மன்னர் தம் வல்லமையால் அதனை அடக்கிக் கட்டுத்தறியிற் கட்டும் போழ்து அது தன் துதிக்கையால் வளைத்துக் கீழே ஓங்கி அடித்துக் கொன்றுவிட்டது; உலகத்தார் மன்னரை யானே கொன்றதாகப் பொய்ப்பழி சுமத்திவிட்டனர்; எதிர் பாராமல் மன்னர் மாய்ந்ததால், அரசுக்குரியார் வருமளவும் நாட்டைப் பாதுகாத்தல் என் கடனாயிற்று; இவ்வரசுக்குரியன் நீயேயாதலின், விரைந்து வந்து இதனை ஏற்றுக்கொள்ளின், என்மீதுள்ள பழியும் நீங்கும்; யானும் மகிழ்வேன்; உனக்கு என் உயிரையும் தருவேன்; எனக்கு இறைவன் நீயே,'' என எழுதியிருந்த வற்றைப் படித்தான்.

இதுவே நல்ல சமயமென்று கருதிக் கோவிந்த மன்னன் அவன் ஓலைக்கு இணங்கியது போல நடித்துத் தன் நால்வகைப் படையுடனும் நம்பியுடனும் அவன் தோழர்களோடும் புறப்பட்டுப் பல நன்னிமித்தங்களை வழியிற்கண்டு மகிழ்ந்து, இராசமாபுரஞ் சேர்ந்து, மதிற்புறத்துத் தங்கிப் பல வரிசைகளை மன்னனுக்கு அனுப்பினன். அவன் பல தீய சகுனங்கள் நிகழவும் அவற்றைக் கருதாதவனாய்க் "கோவிந்தனையுங் கொன்று அவன் நாட்டையுங் கைப்பற்றிவிட்டோம்; இனி நமக்கு நிகராவார் எவருமிலர்!'' என்று தருக்கித் தானும் பல வரிசைகளை அனுப்பினன்.

நம்பி வெளிப்பாடு

பின்னர், கோவிந்த மன்னன் கட்டியங்காரனிடம் சென்று, "அன்ப, என் புதல்வி இலக்கணைக்கு இங்குச் சுயம்வரம் நாட்ட வேண்டும்; சுழலுகின்ற திகிரிமேல் திரிபன்றிகள் மூன்று சுழன்றுகொண்டேயிருக்கும்; அவற்றைக் கீழே சுழன்றுகொண்டேயிருக்கும் சக்கரமொன்றில் ஏறி அம்பால் எய்து வீழ்த்துபவனே அவட்கு நாயகனாவான்,'' எனக், கட்டியங்காரன் மன்னரனைவருக்கும் ஓலை போக்கினன்.

அனைவரும் வந்து கூடினர். ஒவ்வொரு தேயத்து மன்னராக வில்லை வளைத்து அம்பை விடுத்தனர்; குறியை எய்ய முடியாமல் வெட்கித் தலை குனிந்தனர்.

இந்நிலையில் சீவக சாமி தனது யானைமீதேறி அரசர் குழுவுட் புகுந்தனன். கட்டியங்காரன் அவனைக் கண்டு, "இஃது என்ன புதுமையாய் இருக்கின்றது! இறந்தவன் எவ்வாறு பிழைத்து வந்தான்! மதனன் அக்காலத்தில் இவனைத் தவற விட்டு யாரையோ கொன்று நம்மிடம் பொய் கூறினன்; நன்று நன்று!" என வியப்பும், அச்சமும், சினமுங் கொண்டவனாயிருந்தான்.

அப்போது நம்பி சிங்கக்குட்டி போல யானையை விட்டு இறங்கி, வில்லை வளைத்துக் குணத்தொனி செய்து, கணையை வில்லிற் கோத்துப் பன்றி யந்திரத்தருகே சென்று, அம்மூன்றும் ஒன்று சேரும் நேரத்தை அறிவதற்காக ஒரு முகூர்த்த நேரமளவு அசைவற்று நின்றான். அரசர்கள் அதனைக்கண்டு, "இயலாமல் நிற்கின்றான்," என்று கருதிப் பரிகசிக்கத் தொடங்கினார்கள். நம்பி சிறிது சினங்கொண்டு, சுழலுகின்ற ஆழியிலேறி, மூன்று ஏனமும் ஒன்று கூடுதல் பார்த்துக் கோத்த அக்கணையை விடுத்தனன். அவ்வம்பு அப்பன்றிகளையும் கட்டியங்காரன் நல்வினையையும் அறுத்து வீழ்த்தியது.

**கட்டியங் காரன் அழிவு**

இலக்கினை எய்து வீழ்த்தியவுடனே நம்பியின் சேனைகள் கடலொலி போல ஆரவாரித்தன. கோவிந்த மன்னன் அப்பொழுது அனைவருமறியச் சீவகன் வரலாற்றைக் கூறினன். அவ்வாறு அவன் கூறிய அளவில் ஓர் இயக்கன் வானின்கண் தோன்றி, "சீவகனாகிய சிங்கம் கட்டியங்காரனாகிய யானையின் உயிரை விழுங்கும்," எனக்கூறி மறைந்தனன். இவற்றையெல்லாங் கேட்ட கட்டியங்காரன், "நாம் இவனை இதுவரை வணிகன் மகனென்றல்லவோ எண்ணியிருந்தோம்! இவன் சச்சந்தன் மகனா! காரியம் இப்படியா முடிந்தது!" எனக்கருதித் துணுக்குற்றுத் தைரியத்தை விடாமல் நம்பியைப் பார்த்து, "சச்சந்தன் புதல்வா, நீ விஞ்சையர் படைகளையும் மற்றைச் சேனைகளையும் துணைக்கொண்டு வந்ததனால், யான் சிறிதும் அஞ்சேன்; என் ஆண்மையை நின்றந்தை அறி

வான்; நீ அறியாய்; இனி நின்னையுங் கொன்று, நின் மாமனையும் வதைத்து, அவன் அரசியலையுங்கைப்பற்றுகிறேன் பார்!" என்றான். அவன் மைத்துனன் மதனனென்பானும் சினந்தான்.

பின்னர் இரு திறத்துப் படையும் அணி வகுத்துப் போர் புரிய லாயின. கட்டியங்காரன் போர்க்களமே பொய்கையாகவும், வாட்படை வெளியிதழாகவும், யானைப் படைகள் உள்ளிதழாக வும், மன்னர்கள் அதற்குள்ளிருக்கும் சிறிய இதழ்களாகவும், தன் பிள்ளைகள் கொட்டையைச் சூழ்ந்திருக்கும் மெல்லிதழ்களாக வும், தான் கொட்டையாகவும் வகுத்திருந்த பதும வியூகமானது சிதையுமாறு செய்து, சீவகன் கட்டியங்காரன் மைந்தர்களையுங் கொன்றான். கட்டியங்காரன் அவ்வியூகத்தினின்றும் வெளிப்பட் டான். அவனைக் கண்டதும் நம்பிக்கு வந்த சினத்திற்கு ஓர் அளவேயில்லை.

இருவரும் நெருங்கி எதிர்ப்பட்டவுடனே அசனி வேகத்தி லேறியிருந்த கட்டியங்காரன் நம்பியை நோக்கி, "சீவக, பகைவர் கொடுத்த நஞ்சினை அருந்தினாலும், ஆகூழ் உடையாரை அது கொல் லாது; போகூழ் உடையார் அமிர்தத்தையுண்ணினும், மாய்வர்; இரு வினைகளின் தன்மை இங்ஙனமிருத்தலினால், பகைமை கொண் டோரில் ஒருவர் தம் வலியால் வென்றாரென்றுவது, வலியின்மை யால் தோற்றாரென்றுவது கொள்ள இடமில்லை; எனவே, உனக்கு இப்போது நேர்ந்த வெற்றி உன் திறமையாற்போந்ததென்று நினையாதே! என் மக்கள் தீவினை காரணமாக உன் கையிலகப் பட்டு மாண்டார்கள்; அவர்களை நீ கொன்றமையினாலே இனி ஞாயிறும் தன் வெம்மை மாறிக் குளிரும்; திங்களும் தன் தண்மை மாறி வெதும்பும். நெய்யும் திரியும் அற்ற பொழுது விளக்குத் தானே அவிந்துவிடும்; அது போல, நல்வினையற்ற பொழுது செல்வாக்குத் தானே குறையும் என்பதை உணர்ந்து நின் வெற்றி கண்டு மகிழற்க!" என மனமுடைந்து கூறினான்.

நம்பி, "இவன் மனமுடைந்து பேசுகின்றான்; இப்படியே இவன் பேசிக்கொண்டு போர் தொடங்காதிருப்பானாயின், இவனைக்கொல்ல மனந் துணியாது; நிராயுதனைக் கோறல் போர் அறமும் அன்று; ஆதலின், இவற்குச் சினத்தையுண்டுபண்ணிப்

பின்னர்ப் போர் தொடங்கவேண்டும்,'' என்று எண்ணி, அதற்குத் தக்க வார்த்தைகளைப் பேசி, அவன் சினந்து வில்லை வளைத்து நாணேறிட்டுக் கணைகளைத் தொடுத்த பிறகு, தான் சில அம்புகளால் அவன் வில்லை முறித்து அவனையுங் காலனாருக்கு அனுப்பினான்.

## 17. இலக்கணை மணமும் ஏந்தல் ஆட்சியும்

**முடி சூடல்**

இங்ஙனம் கட்டியங்காரனைக் கொன்ற காலை, தன் மாளிகையை அடைந்து, கட்டியங்காரனுடைய அந்தப்புர மகளிர் அனைவருக்கும் இனியன கூறி, அவர்கட்கு வேண்டுவன கொடுத்து, அவர்கள் விரும்பிய இடத்திற்குப் போமாறு விடுத்தனன். மறு நாள் வெள்ளி மலையிலுள்ள கலுழவேகன் தவிர மற்றவரெல்லாரும் அங்கு வந்து குழுமினர். பெரியோர் பலரும் அமைச்சருங் கூடி, சீவக சாமிக்கு முடி சூட்டி விழாக் கொண்டாடினர்.

நம்பியின் ஆணைப்படி நந்தட்டன் கட்டளையிட, முரசு அறைவோன் அதனை யானைப்பிடரியிலேற்றி, "பசியும் நோயும் பகையும் ஒழிக! இன்றுள்ளார் உலகத்தில் என்றுமுள்ளாராய் வாழ்வாராக! இறைவர் நம் நாட்டிற்பதினாறாண்டு வரை இறை வேண்டாது விடுத்தனர். கண்ணில்லார்க்கும், நோய் கொண்டார்க்கும், கணவனாற்புறக்கணிக்கப்பட்டார்க்கும் வேண்டும் நிதியும் வீடுங் கொடுக்கிறார் நம் மன்னர்; அவற்றைப் பெற்று வாழ்க!" என இவை போலப் பல கூறி முரசறைந்தனன். நாடு செழித்து நலனுற்றது.

**இலக்கணை மணம்**

இவ்வாறு முடி சூடிக்கொண்டு நாட்டுக்கு நலஞ் செய்த நம்பி, தான் முன் மணஞ்செய்துகொண்ட தத்தை முதல் சுரமஞ்சரி ஈறாகவுள்ள நங்கையரெழுவரையும் தன் நண்பர்களை விடுத்து அழைத்து வரும்படி செய்தான். அவர்களனைவரும் வந்து அண்ணலடியில் வீழ்ந்து வணங்கினார்கள். நம்பி நீண்ட நாட்களாகத் தனது பிரிவால் வருத்தமுற்றிருந்த அவர்கட்கு வேண்டுவன கொடுத்து மகிழ்வித்தான்.

பின்னர், பெரியோரெல்லோருங் கூடி இலக்கணையின் மன்றலுக்காவனவற்றைப் பேசி நன்னாளொன்றிலே திருமணத்தை முடித்தனர்; ஏழு நாட்கள் வரை திருமண விழாக் கொண்டாடப் பெற்றது.

இங்ஙனம் மணம் முடித்துக்கொண்ட நம்பி, மாந்தர் கண்டு களிக்கப் பவனி வந்து, தேவாலயம் சென்று அருகக் கடவுளைப் பன்முறையும் வணங்கி வாழ்த்தி, அக்கடவுளுக்கு விளக்கிடுதற்பொருட்டும் வழிபாட்டுக்காகவும் பல கிராமங்களை மானியமாக விடுத்தனன்.

நன்றி மறவாமை

அதன்பின் நம்பி, தன்னை வளர்த்த கந்துக்கடனுக்கு அதற்கு முன்பில்லாத அரசுரிமையை வலியக் கொடுத்து, அதற்குத் தகுந்த நாட்டையுங்கொடுத்தான்; சுநந்தைக்குத் தேவி என்னும் பட்டத்தை நல்கினன்; நந்தட்டனை இளவரசாக்கினன்; நபுல விபுலர்களுக்குக் குறுநில மன்னர் பெண்களை மணஞ்செய்வித்து, நாடுகளையுங் கொடுத்தான்; பதுமுகன் முதலிய தோழர்களுக்கு அமைச்சுரிமையையும், படைத்தலைமையையும், ஏனாதி என்னும் பட்டத்தையும், மற்றுந் தனக்கு உதவி செய்த நண்பர்களுக்கெல்லாம் அளவற்ற பொருள்களையும் நாட்டையும் நல்கினன்; தன்னை வளர்த்த செவிலித்தாயர் ஐவருக்கும் நாளொன்றுக்கு ஆயிரம் பொன் வரத்தக்க ஊர்களைக் கொடுத்தான்; தன் மாமனாகிய கோவிந்தனுக்குக் கட்டியங்காரன் பொருள் முழுதும் வழங்கினன்; உலோகபாலனுக்கு அவன் விரும்பியவற்றையெல்லாம் உவந்து அளித்தான்; தன் இடரை நீக்கிய சுதஞ்சணனுக்கு ஒரு கோவில் எடுத்து, அவன் வடிவத்தைப் பொன்னாற்செய்து அதில் நிறுவிப் பல மானியங்களை விடுத்து, அவன் வரலாற்றை ஒரு நாடகமாக்கி நடத்தினன். அதன் பின், தான் இளம்பருவத்தே விளையாடிய ஆலமரமொன்றுக்குப் பீடங்கட்டி மாலையை அணிந்து ஊர்களை விட்டுப் பசுக்கூட்டங்கள் ஆங்கு மேய்ந்து அவ்வாலமரத்தடியில் வந்து தங்கவும், அம்மரத்திற்கு அறம் வளரவும் செய்தான்.

தத்தை முதல் எண்மரும் அரசியர் என்னும் பட்டம் பெற்றனர். தத்தை தலை நாயகியாதலின், மற்றவர் அவள் கட்டளைக்கு

அடங்கி நடந்தனர். நம்பி அவர்கட்கு அளவிறந்த பொருள் வரு வாயுள்ள ஊர்களைக் கொடுத்தனன்.

விசயமாதேவி தவப்பள்ளியிலிருந்து தனக்குத் துணையாக வந்த தவமகளிர்க்குக் கைம்மாறு செய்யக் கருதி, அருகற்கு ஒரு கோவிலெடுத்து வழிபாடாற்றி, அதன் பயனனைத்தையும் அவர் கட்குக் கொடுத்தாள்; தன்னைத் துன்பத்தினின்றும் நீக்கிப் பேணிய சுடுகாட்டுத் தெய்வத்திற்கு அது தங்கும் சுடுகாட்டிலே ஒரு கோவில் கட்டுவித்தாள்; தன்னைத் தூக்கிச் சென்ற மயிலைத் தான் இடையறாது பார்க்க விரும்பித் தன் மாளிகையில் சித்திரக்காரரால் எழுதுவித்தாள்; நம்பி பிறந்த சுடுகாட்டை அன்னசாலையாக்கி, அதில் ஐந்நூற்றைந்து பிள்ளைகட்குப் பாற்சோறு வழங்கும்படி செய்தாள்; தன்னை வணங்கிய மருகியரைத் தழுவி, "நீங்கள் உலக மெல்லாம் ஆளத்தக்க பிள்ளைகளைப் பெறக் கடவீர்கள்!" என்று ஆசீர்வதித்தாள். அங்ஙனமே அவர் எண்மரும் எட்டுப் புதல்வர் களை ஈன்று மகிழ்ந்தனர்.

நம்பி ஆட்சியில் களிறு திரிந்த காடுகளெல்லாம் நாடுகளா யின; பாலை நிலமெல்லாம் மருத நிலங்களாயின; திங்கள் மும்மாரி பெய்ததால், நாடு செழித்துக் குடி கொழுத்தது; கல்வி விருத்தி கண் போலப் போற்றப்பட்டது; பொய்ம்மை சிறிதுமின்றிப் பொன்றியது; உண்மை ஓங்கி ஆட்சி புரிந்தது; பொங்கும் மங்களம் எங்கும் தங்கியது.

நலம்! நலம்!! நலம்!!!

முத்தமிழ்
அச்சகம்,
காஞ்சி